# ஸ்ரீ ரங்கத்து-தேவதைகள்
# சுஜாதா

சுஜாதா



*குடதிசை முடியை வைத்துக் குணதிசை பாதம் நீட்டி*
*வடதிசை பின்புகாட்டி தென்திசை இலங்கை நோக்கி*
*கடல்நிறக் கடவுள் எந்தை அரவணைத் துயிலுமாகண்டு*
*உடல்எனக்கு உருகுமாலோ என்செய்கேன் உலகத்தீரே...*

**தொ**ண்டரடிப் பொடியாழ்வார் காலத்திலிருந்தே பெருமாள் திருவடி காட்டிய கீழவீதிக்காரர்கள் நாங்கள். முதுகு காட்டும் வடக்குவீதியை அதிகம் மதிக்க மாட்டோம். வடக்கு வீதி அகலக் குறைவானது.

எப்போதாவது கிரிக்கெட் மாட்ச் ஆட ‘பி’ டீமை அனுப்புவோம். வடக்கு வீதி கொஞ்சம் தோசி டீம். சின்னப்பசங்கள் எல்லாம் ஆடுவார் கள். எங்களவர்கள் சுலபமாக ஜெயித்து விட்டு, ஸ்கோர் புக்கில் அவர்கள் கேப்டனிடம் கையெழுத்து வாங்கி வருவார்கள்.

தெற்குச்சித்திரை வீதி தாத்தாச்சாரியார் வீட்டு முன்னிலையில் வலுவான ஒரு டீம் இருந்தது. அதையும் வடக்கு அடைய வளைஞ்சான் முரட்டுப் பயல்களையும் கார்க்பாலில் வெல்வதற்காகத்தான் ‘ஏ’ டீமை அனுப்புவோம்.

எங்கள் டீமின் புரவலன் பெரிய பண்ணை சீனு. அவன் ஆடமாட்டான். எங்களுக்கு ஸ்டம்ப், கிளவுஸ் எல்லாம் வாங்கிக் கொடுப்பான். ஸ்ரீரங்கத்தில் விக்கெட் கீப்பிங் கிளவுஸ் வைத்திருந்த ஒரே டீம் எங்களுடையது. ஹைஸ்கூல் கிளவுஸ்கூடக் கட்டை விரலில் கிழிந்திருக்கும்.

என் அண்ணன் கிச்சாமி, சீமாச்சு வீரு போன்றவர்கள் ஸ்டார் பிளேயர்கள். நான் ஸ்கோர் ஏற்றத் தேவைப்படுவேன் (அப்போதே நல்ல கற்பனை வளம்). எனவே, நாங்கள் வடக்குவீதிப் பக்கம் அதிகம் போக மாட்டோம்.

வடக்குவாசலில் முடி வெட்டிக்கொள்ள சீனத்து லேடிகள் படம் கொண்ட கிராப்புக்கடைக்கு பாட்டி என்னை அனுப்புவாள். அது கூட 'கரப்பு நக்கினாற்போல் வெட்டுகிறான்' என்று ரங்க ராஜுவை வீட்டுத் திண்ணைக்கே வரச் சொல்லிவிடுவாள்.

எங்கள் 'நாம் ஐவர்' சங்கத்துக்கு விகடன், கல்கி, பேசும் படம் இதழ்கள் வாங்க சின்ன ராசு கடைக்குச் சில வேளை போவோம்.

இவ்வாறு எங்கள் கவனத்தை அதிகம் ஈர்க்காத வடக்குவீதிக்குத் திடீரென்று மவுசு வந்து, யாரைப் பார்த்தாலும் 'வடக்கு வாசல்வரை போயிட்டு வரேன்' என்று எங்கள் பையன்கள் அனை வரும் போய் வருவதும் வாடகை சைக்கிள் எடுத்துச் சுற்றுவதும் அவனவன் புதுச்சட்டை போட்டுக்கொண்டு தரையில் தேய்த்துக்கொண்டு, ரெண்டு கைகளையும் விட்டு காலரைத் தூக்கிக் கொண்டு, காலால் போலிங் போடுவது போல் ஸ்டைலாக ஏறி சைக்கிள் ஓட்டுவதும் அவ்வப்போது கிராப்பை விரலால் கோதிக்கொள்வதும் காலரைத் திறந்து கர்ச்சீப்பை ஒரு சைடாகத் தொங்கவிடுவதும், 'பம்பரக் கண்ணாலே' சீட்டியடிப்பதும், குல்கந்து செண்ட் போட்டுக் கொள்வதும் வானிலையே மாறிவிட்டது!

ரங்கு, ''என்னடா ஆச்சு இவங்களுக்கெல்லாம்? பெரியாத்துல பொண்ணு கொடுத்தாப்பல அலையறாங்க...'' என்று வியந்தான். பட்டாம்பி தான் சொன்னான் – ''வடக்கு வீதியில் ஒரு தேவதை புதுசாக வந்திருக்கிறாள். இளைஞர்கள் நிம்மதியையெல்லாம் ஹோல்சேலாகக் கலைக்கிறாள்!'' என்று.

பெரிய பண்ணை சீனு ('தாமரை மைந்தன்') அந்தப் பெண்ணைப் பற்றிக் கவிதை எழுத, புதுநோட்டு வாங்கி இருக்கிறான் என்பதும் தெரிந்தது.

ரங்கு, ''பட்டாம்பி, அந்தப் பெண்ணை ஒரு தடவை பார்த்தாகணுமே... அப்படி என்னடா அதிரூபசுந்தரி? '' என்றான்.

......வருவா, வருவா... எங்க போறா? இந்தப் பக்கம் போறப்ப காட்டறேன், பாரு...''

......இந்தப் பக்கம் வரதெல்லாம் சாவாடு செத்துக் கிழிச்ச நாரா தேஞ்சு தேவாங்காத்தானே வரது...''

......இது வாழைத்தண்டுடா... சீனுவே மயங்கிட்டான்னா பாத்துக்கயேன்...'' என்றான்.

சீனு முதலில் அவளைக் கவனிக்கவில்லை. இவர்கள் எல்லாம் சொல்கிறார்களே என்று ஒரு முறை தன் புல்லட்டை அந்தப் பக்கம் எடுத்துச் சென்று, அடுத்த வீட்டு காசியார் வரதுவை விளித்தான்.

அவன் பதறிப்போய், ''சீனு! நீ எங்காத்துக்கெல்லாம் வரயா? கூப்ட்டனுப்பிச்சிருந்தா, நானே வருவேனே... என்ன விஷயம்?''

......ம்... ம்... ஒண்ணுமில்லை! உங்க வீட்டில ஏணி இருக்குமா?'' – அவன் கண்கள் பக்கத் தாத்து வாசலில் நிலைத்திருந்தன.

......ஏணியா?''

......ஆமா... ஏணி!''

இதற்குள் அந்தப் பெண்ணே வெளிவந்து, திண்ணையில் உட்கார்ந்துகொண்டு, ஏதோ புக் படிக்க ஆரம்பித்ததை சீனு பார்த்து விட்டான்.

......ஏணியா?''

......அப்றம் வரேன்...''

சீனு ரொம்பப் பணக்காரன். ஒரே பையன். அந்தப் பணபலமே, அதன் ஊட்டமே ஓர் அழகு தந்தது. மகேந்திர மங்கலம், முசிறி, குவளக்குடியிலும் மருதூரிலும் ஏகப்பட்ட நில புலன்கள் இருந்தன. ஒரே பிள்ளை. சுவீகாரச் சொத்து வேறு... எட்டுத் தலைமுறைக்கு அழிக்கலாம்.

கோரதமுட்டி தாண்டி, மூன்றாவது பெரிய பண்ணையாம் என்று சொல்வார்கள். பச்சை கேட் பளபளப்பாக இருக்கும். திண்ணை வெண்ணெயாக இழைத்திருக்கும். வருஷம் பூரா பந்தல் போட்டிருக்கும்.

வாசலில் நான்கு பசுமாடு கட்டியிருக்க, வேளா வேளைக்குப் பால் கறக்கவே நான்கு பேர் வருவார்கள். பின்கட்டில் நிறைய மாடு, கன்றுக்குட்டி, எருமை, வேலைக்காரர்கள், பண்ணையாட்கள், துணி துவைத்துப் போட, இஸ்திரி போட ஆள்காரர்கள் பாட்ச் பாட்சாகச் சாப்பிட்டுக் கொண்டே இருப்பார்கள்.

மாடியில் சீனு, கீழே அப்பா – அம்மா, வயசானவர்கள் வாழ்ந்தார்கள். தளிகை பண்ண கோவிந்தையங்கார். பெரிய மிராசு சாம்ராஜ்யம். அந்த விவகாரங்களைப் பார்த்துக்கொள்ள பாச்சு ஐயங்கார் என்ற காரியஸ் தரும் குத்தகைக்காரனும் ஏமாற்றியது போகவே, லட்சக்கணக்கில் வருமானம், சாப்பாட்டுக்கு நெல், வாழைத்தார்கள், அரிசி, பருப்பு, மாம்பழமான மாம்பழம்!

பேட்டைவாய்த்தலை ஃபாக்டரி வந்தபின், ஏற்கெனவே புகளூருக்கு சப்ளை பண்ணிக் கொண்டிருந்த இவர்கள் நிலத்தில் கரும்பு பயிரிட்டு, அதில் வேறு எக்கச்சக்க வருமானம்! மானாவாரி கேஷ்கிராப்பாக உளுந்து, சின்ன வெங்காயம்! கடலை.

ஃப்யூடலிசத்தின் கடைசி நாட்களில் முடிசூடா மன்னன். அவனிடம் இருந்த கெட்ட பழக்கம் – தாமரைமைந்தன் (அவன் அம்மா பத்மா) என்ற பெயரில் கவிதை எழுதுவதும் அதை எங்களுக்கு எல்லாம் படித்துக் காட்டுவதும். சும்மா சொல்லக்கூடாது... பிராசம் இல்லாமல், அதென்ன புதுக்கவிதையா? அந்த வடிவில் ஷோக்காக எழுதுவான்.

எங்களுக்கு அதிகம் புரியா விட்டாலும் கேட்டுவிட்டு, ‘‘சீனு... நன்னா இருக்குடா! எப்டிரா உனக்கு இப்டியெல்லாம் எழுத வரது?’’ என்றாலோ, ‘‘அது ஒரு கிஃப்ட்ரா!’’ என்றாலோ... எட்டு இடமும் குளிர்ந்துபோய், பத்து ரூபாய்த்தாளை நவாப் ராஜமாணிக்கம் டிராமா நோட்டீஸ் போல வாரி இறைப்பான்.

மெயின்கார்டு கேட்டுக்கு காரில் இண்டியா காபி ஹவுஸ் அழைத்துச் செல்வான். பத்மாவில் பாதாம் அல்வா வாங்கித் தருவான். அதனால், அவனது கவிதைகளைப் புகழப் பழகிவிட் டோம். அவன் குறிப்பிடும் பிச்சமூர்த்தி, வேணுகோபாலன், செல்லப்பா எல்லாம் கறுப்பா, சிவப்பா தெரியாது!

**......**கரையோரக் கனவுகள் எதற்கு?’’ என்று அவன் ஆரம்பிப்பதற்கு முன்னேயே, ‘‘ஆஹா! என்ன ஒரு சொல்நயம்டா சீனு...’’ என்போம், சங்க காலத்திலிருந்து இருக்கும் புரவல – இரவல வழக்கம்தான் அது.

**......**இர்றா... அவன் முழுக்கப் படிக்கட்டும்டா!’’

சீனு ஒரு குழந்தை மாதிரி. எங்கள் புகழ்ச்சியில் பொதிந்திருந்த சுயநலங்கள் அவனுக்குத் தெரியவில்லை. ஒருத்தரைப் பிடித்துப் போய் விட்டால், வலது கையையே கழற்றிக் கொடுத்துவிடுவான். அந்தப் பெண்ணைப் பிடித்துப் போய் விட்டது... ரொம்ப!

ரங்கன் கடைக்கு ‘‘நாற்பது பக்கம் நோட்டு இருக்குமா மாமா?’’ என்று விசாரித்துக் கொண்டு வந்தபோது, எங்களால் கிட்டத்தில் அவளை முதன் முதலாகப் பார்க்க முடிந்தது. ‘எதற்காக எல்லோரும் அலைகிறார்கள்?’ என்பதும் புரிந்தது.

அரிதாகத்தான் இம்மாதிரி பெண்கள் பிறப்பார்கள். உயரம், தோற்றம், குரல், கண்கள், அங்கலாவண்யம் – எதிலும் பழுது சொல்ல முடியா மல், தான் அழகாக இருக்கிறோம் என்கிற இறுமாப்போ, ஏன் பிரக்ஞைகூட இல்லாமல் துறுதுறுவென்று இவள் மாதிரி ஒரு பெண் இந்த ஊரில் வருவதே, நம் மண்ணை மிதிப்பதே, இவள் கால்படுவதே பாக்யம்.

**...**பன்றிகள் உலா வும் சித்திரை வீதியிலா இத்தனை சுந்தரி... தேவ லோகத்தில் இருக்க வேண்டியவளல்லவா?’ என்று தோன்றியது. நமக்கே கவிதை எழுதலாம் போல கை ஞமஞமவென்றது.

**...**எதற்காக அத்தனை பேரும் வடக்கு வீதிப் பக்கம் அலைகிறார்கள்? எதற்காக போஸ்ட்மேன் தப்பாக அவர்கள் வீட்டில் தபால் கொடுக்கிறான்? தையல்காரனும் இஸ்திரியும் பால்காரனும் தயிர்க்காரனும் அரை மணிக்கொரு தடவை விசாரிக்கிறார்கள்? சீனுவைத் தவிர, மற்ற எல்லாப் பையன்களும் ஏதாவது ஒரு வியாஜத்தை வைத்துக்கொண்டு வடக்குவாசல் போகிறார்கள்?’ என்பது தெரிந்தது.

**......**சரியா மூணு மணிக்குப் பாட்டு கிளாஸ் போறாடா. நான்கூடச் சேரலாம்னு பாக்கறேன். நாலரைக்குத் திரை திறந்தவுடனே தாயார் சந்நிதிக்கு... அப்றம் சித்த நாழி ரேடியோ கேக்கறா. எதுத்தாத்துல கிளாஸ்மேட் சுப்புணி தங்கை ஒண்ணு இருக்கே... ரொம்ப சிநேகம்! அதுங்கூட நோட்ஸ் வாங்கிப் போறா.

அவாத்துல குட்டிப் பாப்பா இருக்கே... மரவையாட்டம்! அதைக் கட்டிப்பா. அதிர்ஷ்டம் பண்ணதுடா. அதை மூக்கை மூக்கைத் தேச்சு கன்னத்தை இழைச்சுக் கொஞ்சறா பாரு. அது அப்பப்ப அவ தாவணி

யைக் கலைக்கறது... டாண்ணு ஏழு மணிக்குத் திரும்ப வந்துர்றா. எட்டாவது மணி அவாத்துல சாப்பாடு, எட்டரைக்கு விளக்கணைச்சுர்றாடா. கார்த்தால அஞ்சுக்கெல்லாம் எழுந்துர்றா...'' என்று அவர்கள் வீட்டுத் தினசரி அட்டவணையே ரங்கு கடையில் விரிக்கப்பட்டது.

**......**செக்கச்செவேல் என்ற அந்த நிறமா? அந்த முகத்தில் தெரிந்த அறியாமையா? லேசாகத் தெரிந்த பல்வரிசையா? ஈரமான ரோஜா இதழ்களா?'' என்று தம்பியும் பட்டாம்பியும் அண்ணாசாமியும் பெரிய பட்டிமன்றமே நடத்தினார்கள். சீனு யோசனையில் இருந்தான்.

அவள் பெயர் மாலினி. அவள் தந்தை பெயர் ராகவன். திருச்சி ஜங்ஷனில் ரயில்வேயில் பெரிய ஆபீஸராம். குவார்ட்டர்ஸ் உண்டாம். இவருக்கு பெருமாள் சந்நிதியில் திருமாளிகை உபயம் உண்டாம். பெருமாளைச் சேவிப்பதற்காக, ஸ்ரீரங்கத்தில் வாடகை வீடு எடுத்துக்கொண்டு வந்திருக்கிறார்களாம்.

ஒரு பெண்ணும் பையனுமாம். பையன் சின்னவன். எங்கள் வீதிப் பையன்கள் அனைவரும் அந்தப் பையனை முதலில் குழாயடித்து ஃப்ரெண்ட் பண்ணிக்கொள்ள பலவிதமான முயற்சிகள் செய்தார்கள். அவன் பெயர் ரகுநந்தன். 'நந்து' என்று தான் கூப்பிடுவார்கள்.

கடைக்கு வந்துவிட்டால், அவனைத்தான் எல்லோரும் முதலில் கவனிப்பார்கள். ''வா நந்து கண்ணா, எப்டிரா இருக்கே? நாமல்லாம் உறவு தெரியுமா? ரங்கு, என்ன வேணுமோ குடுத்து அனுப்பு... ரங்கு, என் அக்கௌண்ட்ல போட்டுரு...''

**......**உனக்கு ஏதுரா அக்கௌண்ட்?''

**......**சீனு அக்கௌண்ட் பேமெண்ட்டெல்லாம் அப்புறம் வெச்சுக்கலாம். மாலு எப்படி இருக்கா? என்னை விசாரிச்சாளா?''

**......**மாலு யாரு?''

**......**உன் அக்காடா...''

**......**அவளை நாங்க லின்னின்னா கூப்பிடுவோம்...''

**......**ஆஹா... லின்னி! என்ன பேரு, என்ன பேரு? நீ பொருளை வாங்கிண்டு போ. நந்து, நீ யாரு... நம்மாம்! உங்கப்பால் லாம் உறவு...'' என்றான் பட்டாம்பி.

**......**எப்படி?''

**......**ஏதோ உறவு... நீ போயேன். அக்காவை அனுப்பு. எம்ப்ராய்டரி நூல் ஜெயந்திகிட்ட கேட்டிருந்தாளா? என்ன கலர்னு தெரியலை... கடையையே வாங்கிண்டு வந்திருக்கேன். பாத்து செலக்ட் பண்ணிட்டுப் போகச் சொல்லு...''

இந்தச் சூழ்நிலையில் சீனு இறங்கிவிட்டான் என்று தெரிந்த தும் மற்ற பையன்கள் 'சம்பாத்யம் போய்விடு ம்' என்று ''சீனு, நீயும் உண்டுன்னா... அப்ப நான் சேவிச்சு ஒதுங்கிடறேன்...'' என்று விலகிவிட்டார்கள்.

கீழச்சித்திரை வீதிப் பசங்கள் மட்டும் இன்றி அடைய வளைஞ்சான் முரட்டுப் பசங்களும் தங்கள் ரூட்டை மாற்றிக் கொண்டு வடக்குவீதி வழியாக நடந்து வர ஆரம்பித்தார்கள். எதிரே சாவுக்கார் சத்திரத்தில் கூட ஆரம்பித்தார்கள். பட்டாம்பிதான் அப்படியே ஒரு கிறக்கத்தில் சீனுவுக்குத் தகவல் கொடுத்துக் கொண்டிருந்தான்.

சித்திரைத் தேர் தாண்டி, தெற்குப் பக்கம் கஸ்தூரி என்று இருந்தான். அவன் நந்துவுக்குப் புத்தம்புது கிரிக்கெட் பேட்டும் ரத்தச் சிவப்பில் பந்தும் வாங்கிக் கொடுத்திருந்தான்.

அவன்தான் சொன்னான் – ''திண்ணைல உக்காண்டு பல்லாங்குழி ஆடறா பார் சீனு... அவ கைல புளியங்கொட்டைகூட அழகா இருக்குடா! ஒவ்வொண்ணா போடற பதவிசும் நறுவிசும்... ஜெயந்தியைக் கேட்டேன். அவளைத் தொட்டுப் பார்த்தா பவ்னு இருக்காம். கையை அழுத்தினாலும் ரத்தச் சிவப்பாயிடறதாம். எங்கேயோ இருக்க வேண்டியவடா... ஆமாம்!''

**......**இந்தத் தத்தாரிப் பசங்களுக்கு வடக்குவீதியில என்ன வேலை?'' என்றான் சீனு. ''ரங்கு, விசாரி...''

ரங்கு துடைநடுங்கி, ''வராங்க பாரு, நீயே விசாரிச்சுக்கோ...''

அப்போது அடைய வளைஞ்சான் பையன்கள், ''இங்க உக்காந்துக்கலாமா பிரதர்? லேக்கா உருண்டை, பலப்பம் எல்லாம் இருக்கா பிரதர்?''

......எதுக்குடா?'' என்றான் ரங்கு.

......போஸ்ட் ஆபீஸ் திறக்கிறவரைக்கும் சப்பிக்கிட்டிருக்க...''

......போஸ்ட் ஆபீஸ் அடைய வளைஞ்சானுக்குப் போயிடுத்தே...''

......அது எட்போஸ்ட் ஆபீஸ். நமக்கு பிராஞ்ச் போதும். தெரிஞ்ச ஒரு குட்டி இந்த வழியாத்தானே போவாங்க...''

......எதுக்குடா ஐயரைக் கேட்டுக் கிட்டு, நாம ராஜன் ஸ்கூல்ல போய் உக்காரலாம்...''

......ஐயர் இல்லடா... ஐயங்கார்!''

......ஏண்டா, இது யாரு தெரியுல்லை...''

......யாரு?''

......சீனு, பெரிய பண்ணை...''

......ஓ! அப்டிங்களா? வணக்கம் பெரிய பண்ணை...''

......நாங்கள்லாம் சின்னப் பண்ணைங்க...'' என்று சொல்லிச் சிரித்தார்கள்.

......உங்களையெல்லாம் தார்க் குச்சியால கத்தி, மாட்டுச் சவுக்கால வீறணும்டா...'' என்றான் ரங்கு சன்னமாக.

......வீறு! ஆட்டுக்கும் மாட்டுக்கும் ரெண்டு கொம்பு. இந்த ஐயங்கார் சாமிக்கு மூணு கொம்பு...'' என்று பாடிக்கொண்டே, எதிரே ராஜன் பள்ளியில் போய் உட்கார்ந்தார்கள். மாலினி வரக் காத்திருந்தார்கள்.

சீனு, ''ரங்கு, கம்முனு இரு. நாளையிலருந்து இவங்க இந்தப் பக்கம் வரமாட்டாங்க...''

அப்போது மாலினி வந்துவிட, எல்லோருக்கும் சப்தநாடியும் அடங்கிப் போச்சு. சீனு வாயடைத்துப் போய்விட்டான்.

ரங்கு, ''என்ன வேணும் லின்னி?''

......எம்பேர் லின்னினு யார் மாமா உங்கிட்ட சொன்னா?''

......நந்துதான் சொன்னான். என்னை ரங்குனு கூப்டுமா... மாமாங்காதே! இன்னிக்கெல்லாம் எனக்கு என்ன வயசுங்கறே?''

சீனு, ''இவனுக்குக் கல்யாணம் ஆயி ஆத்துல ரெண்டு பொண்ணு இருக்கு...''

......அப்டியா! அவாளை நான் பாக்கணுமே...''

......என் பேர் சீனு...''

......எம் பேரு மாலினி. நாங்க இங்க வடக்குச் சித்திரை வீதிக்குப் புதுசா வந்திருக்கோம். எங்கப்பா...''

......தெரியும்... எல்லாம் தெரியும்!''

......எப்படி?''

......நீ வந்தது ஸ்ரீரங்கம் பூராவுமே தெரியுமே!''

......நான் என்ன அவ்வளவு ஃபேமஸா என்ன?'' என்றாள் விளையாட்டாக.

...என்ன குரல்டா இது!' என்று அவள் போன பின் பட்டாம்பி வியந்தான். அவன் திறந்தவாய் கால் இன்ச், அவள் போகும்வரை மூடவே இல்லை!

அந்த அடையவளைஞ்சான் பையன்கள் நெருங்கி வந்து, ''என்ன மாலினி, ராஜா டாக்கீஸ் வரியா? புதுப் படம்...''

......நான் எதுக்கு வரணும்... நீ யாரு?''

......பாப்பாரப் பசங்களோட மட்டும்தான் பேசுவியா?''

......ஏன் இப்படி அசிங்கம் அசிங்கமா பேசறான் இவன்? எங்கப்பாகிட்ட சொல்லிடுவேன். அவர் ரயில்வேல பெரிய ஆபீஸர்...''

......சொல்லாதே... பயமா இருக்கு!'' என்று அட்டகாசமாகச் சிரித்தார்கள்.

சீனு அவர்களை, ''பாருப்பா... உன் பேர் என்ன?''

......சக்திவேலு...''

......உன் பேரு?''

......ரங்கராஜு...''

அவர்கள் இருவரையும் தனியே அழைத்துச் சென்று சீனு பேசினான். ஐந்து நிமிஷம்தான். அவர்கள், '' நாங்க அப்புறம் வரோம் எஜமான். வரோம் சிஸ்டர்...'' என்று சொல்லிக்கொண்டு புறப்பட்டார்கள்.

சீனு, ''இனிமே அவங்க உன்னைத் தொந்தரவு பண்ணா எங்கிட்ட சொல்லு...''

......ஆமாம் சீனு! எப்பப் பாத்தாலும் பின்னாலயே வரா. பெருமாள் – தாயார் சேவிக்கப் போனா, பின்னால வந்து கும்பல்ல இடிக்கிறாங்க...''

......அடுத்த தடவை கோயிலுக்குப் போறப்ப தகவல் சொல்லிடு. சந்நிதியையே காலிபண்ணித் தரேன், என்ன?''

......பஸ்ல அத்தனை இடம் இருக்கு. பக்கத்துல வந்து உக்கார்றாங்க...''

......டி.எஸ்.டி., டி.வி.எஸ். ரெண்டு ஓனரையும் தெரியும். சொல்லி வெக்கிறேன். இனி பிராப்ளம் வராது உனக்கு...''

......தாங்க்ஸ்!''

......வெறும் தாங்க்ஸ் மட்டும் போதாது...''

......பின்னே?''

......முத்தா கொடு!'' என்றான் சீனு.

அவள் ''ஆளைப் பாரு... போடா!'' என்று சொல்லிவிட்டு, அவன் கையைக் குலுக்கிவிட்டுப் போனாள்.

சீனு உடனே புறப்பட்டான்.

......இதைக் கவிதையா எழுதியே ஆகணும்டா...''

சீனு, அடையவளைஞ்சான் ரௌடி களை என்ன விலை கொடுத்து வாங்கினான் என்ற பொருளாதாரம் தெரியவில்லை. அவர்கள் தொந்தரவு ஓய்ந்துவிட்டது! பட்டாம்பியிடமும் கஸ்தூரியிடமும் சீனு பளிச்சென்று சொல்லி விட்டான்.

......நீங்க மட்டும் அவகிட்ட போய் ஏதாவது வம்பு பண்ணீங்க... கொட்டையைப் பிசிஞ்சுடுவேன். உங்க ஸ்டோர்ல எல்லோரையும் காலி பண்ணச் சொல்லிடுவேன். வீட்டை இடிச்சுருவேன்...''

பட்டாம்பி குடியிருந்தது – எட்டுக் குடித்தன ஸ்டோர் வீடு. சீனுவுடைய பதினாறு வீடுகளில் ஒன்று. இருபது வருஷமாகப் பதினஞ்சு ரூபாய் வாடகை.

சீனு தன் சுயகௌரவத்தை இழக்காமல், மாலினியைக் 'கணக்கு'ப் பண்ணினான். கோட்டைக்குப் போய் என்னென்னவோ வாங்கி, நந்து மூலம் கொடுத்துவிட்டான். நந்துவைப் பெரிய கடைத் தெருவுக்கு அழைத்துச் சென்று, பொம்மை போட்ட பனியன், புதுச் சட்டை, கண்டோன்மென்ட் இங்கிலீஷ் வேர் ஹவுஸில் மவுத்ஆர்கன் எல்லாம் வாங்கிக் கொடுத்தான்.

ராகவன் சாரைப் போய்ச் சந்தித்து, தன்னை அறிமுகப்படுத்திக் கொண்டான். அவர் வீடு சௌகரியப் படவில்லை என்றால், கீழ வீதியில் பாடசாலைக்குப் பக்கத்தில் தனக்குப் பெரிய வீடு ஒன்று பூட்டி வைத்திருப்பதாகச் சொன்னான். அதில் வந்துவிடலாம்!

......வாடகை எவ்வளவு?''

......பணம் இன்னிக்கு வரும், நாளைக்குப் போகும். வாடகை பெரிசில்லை. மாமா...''

......யோசிக்கிறேன்பா... கீழச் சித்திரை வீதியில கிடைக்கலைனுதான் வடக்கு வீதி, உத்தர வீதினு தேடினோம்...''

அவன் போனதும் ''கவனிச்சியாடா... 'மாமா'னு கூப்ட்டதுக்கு, அவர் எதுவுமே சொல்லலை. அப்டின்னா, என்ன அர்த்தம்?''

......அவாத்து மாப்பிள்ளையா போறேன்னா...''

......டேய், அது இன்னும் மேஜரே ஆகலைடா...''

......இருடா, இருடா... சீனு எல்லாம் மீன மேஷம் பாத்து வெச்சிருப்பான். ஒவ்வொரு ஸ்டெப்பும் யோசிச்சுத்தான் எடுப்பான். இல்லையாடா சீனு?''

சீனு பதில் சொல்லாமல் சென்றான். அவன் மனதில் இன்னொரு கவிதை உருவாகியிருக்க வேண்டும்.

......அஞ்சு ரூபா இருந்தா, குடு... சாயங்காலம் தந்துர்றேன்...'' என்றான் பட்டாம்பி, சமயம் பார்த்து.

......என்னிக்குச் சாயங்காலம்னு சொல்றானா பாரு சீனு...'' என்றான் ரங்கு.

......எனக்கு அவ நிச்சயமானா, உங்க கடன் எல்லாத்தையும் கான்சல்...''

......சீனு! மனசு வெச்சுட்டே... உன்னை விட்டு வேற யாரையாவது அவ கல்யாணம் பண்ணிக்க முடியுமா? எதுக்கும் தினம் ஒரு நடை போய்ப் பாரு...''

அதன்பின் நந்து மூலம் மாலினி ஒரு முறை செய்தி அனுப்பினாள்.

......மாமா, உங்காத்துல டெலிபோன் இருக்கானு லின்னி கேட்கச் சொன்னா...''

......இருக்கு! ரெண்டு போன்...''

......லின்னி அதை யூஸ் பண்ணிக்கலாமானு கேட்டா...''

......தாராளமா!''

......அதுக்கு உண்டான காசைக் கொடுத்துர்றதா சொன்னா...''

ரங்கு சிரித்து, ''சீனுகிட்ட டெலிபோன் எக்ஸ்சேஞ்சையே வாங்கறதுக்கு காசு இருக்குனு போய்ச் சொல்லு...'' என்றான்.

அவன் சென்றதும் சீனு பரபரப்பானான். அவசரமாக வீட்டுக்குப் புறப்பட்டான்.

......எல்லாம் போட்டது போட்டபடி இருக்கு. போய் ஒழிக்கணும்...'' என்றான்.

......பெருமாளே பார்த்து, இந்த ஏற்பாடெல்லாம் செய்யறார்டா! எங்கப்பாம்மாவும் அவளைப் பாத்துருவா. புடிச்சுப் போயிடும்...''

......ஏண்டா, அவாத்துல போன் இல்லையோ?''

......அவாத்துல ரயில்வே போன் மட்டும்தான் இருக்கோ என்னவோ?''

......இல்லைடா... பெரிய ஆபீஸர் கறுப்பு போனும் இருக்கு...''

......இல்லைடா முட்டாள்... அவளுக்கு சீனுமேல ஒரு இது வந்தாச்சு. ஏதாவது சாக்குச் சொல்லி, அவாத்தைப் பாக்க வரா...''

சீனு சந்தோஷத்தில், அவன் முதுகில் அறைந்து கையை முறுக்கினான்.

லின்னி, சீனுவின் வீட்டுக்குப் போய், சென்னைக்குத் தன் சிநேகிதிக்கு டிரங்க்கால் போட்டிருக்கிறாள். இங்கிலீஷ் நன்றாகப் பேசுகிறாளாம். டெல்லியில் இருந்ததால் இந்தியிலும் பேசினாளாம். சீனு, கூடத்திலிருந்து ஊஞ்சல் ஆடிக் கொண்டு, ஒட்டுக்கேட்டு வியந்தான்.

வெளியே வந்து, ''ஐய்... ஊஞ்சல்!'' என்று சீனு பக்கத்தில் உட்கார்ந்து ஆடியிருக்கிறாள். வீட்டைச் சுற்றிக் காட்டியிருக்கிறான். சீனுவின் அப்பா, அம்மாவையும் சந்தித்திருக்கிறாள். இரண்டு பேருக்கும் அவளை ரொம்பப் பிடித்துப் போய் விட்டது!

......எங்க சீனுவுக்குக் காஞ்சிபுரம், திருவல்லிக்கேணி, ஆழ்வார் திருநகரி, சீவில்லிபுத்தூர்னு எங்கெல்லாம் ஜாதகம் பாத்தோம். இங்கேயே – சீரங்கத்திலேயே இத்தனை அழகா, பதவிசா ஒரு பொண்ணு கிடைச்சாச்சே! சகோத்தரமா இருக்கு. அதனால என்ன... சீனுதான் சுவீகாரம் போயிருக்கானே...''

......எப்ப வேணா வா...'' என்று சீனு கொடுத்த ப்ளாங்கெட் பர்மிஷனின் பேரில் சீனுவின் வீட்டுக்குச் சென்று டிரங்க்கால் போட்டு, இரு முறை லின்னி தன் சிநேகிதியுடன் பேசியிருக் கிறாள்.

சீனு, ''எங்காத்துக்கு வந்திருக்கே... பாதாம் அல்வா சாப்ட்டே ஆகணும்!'' என்றான். அதைப் பிகு பண்ணாமல், நாசூக்காக முழுவதும் சாப்பிட்டாளாம்.

......எங்கப்பா, அம்மாவை விழுந்து சேவிச்சாடா – 'ஆசீர்வாதம் பண்ணுங்கோ மாமா'னு...''

......சீனு என்னை ரௌடிப் பசங்க கிட்டருந்து காப்பாத்தறார். சீனு மாதிரி பிள்ளை கிடைக்க, நீங்க குடு த்து வெச்சிருக்கணும்...''

......எல்லாம் ரங்கநாதன் அனுக்ரஹம்!''

......ஒரே பிள்ளைம்மா உன்கிட்ட சொல்ல என்ன தயக்கம்? ஏகாந்திரமா சொத்து...'' என்றாள் பத்மா மாமி.

......உனக்கு ஜாதகம் எடுக்க ஆரம்பிச்சிருக்காளோ?''

......அதெல்லாம் அம்மாவைக் கேட்டாத்தான் தெரியும் மாமி... படிப்பு முடியணுமே!''

......அதுபாட்டுக்கு அது... சீனு, அவாளை ஒரு நாள் மத்தியான டிபன் சாப்டக் கூட்டிண்டு வாடா. நீயும் வாம்மா, நகையெல்லாம் காட்டறேன்...''

அடுத்த முறை அவள் போன் பண்ண வந்தபோது முத்து செட், பவள செட், காசு மாலை, வைரஅட்டிகை என்று ஏகப்பட்ட நகைகளைக் காட்டியிருக் கிறார்கள்.

......லின்னி, எங்காத்து சீனுவைக் கல்யாணம் பண்ணிப்பியா?''

......என்ன படிச்சிருக்கார்?''

......புனால தபால் எழுதி, பெரிய சர்டிபிகேட் வாங்கியிருக்கான். சீனா, அதைக் காட்டுரா...''

மாமி 'வாய்ஸ் ஆஃப் ப்ராஃபஸி'யைப் பெரிய டிகிரி என்று எண்ணிக் கொண்டிருந்தாள்.

......மாமி, முதல்ல என் படிப்பு முடியட்டும்...''

......பட்ணத்துல யாரோட பேசினே?''

......அம்மா, அதெல்லாம் அவா ப்ரைவேட் மேட்டர்ம்மா...''

......இருடா... கேட்டு வெச்சுக்கலாம். நம்மாத்துக்கு வரப்போறா...''

......மாமி, நான் லக்னோவுலயும் பட்ணத்துலயும் படிச்சேன். என் கிளாஸ்மேட் ரமணினு... அவகிட்டருந்து ஒரு சர்டிபிகேட் தேவைப்பட்டுது...''

......சீனுகிட்ட சொன்னா, எட்டூருக்கு ஏற்பாடு பண்ணுவானே?''

அடுத்த முறை அவள் சிநேகிதி ரமணியின் சகோதரன் ஸ்ரீரங்கம் கோயில் பார்க்க வருவதாக ஓட்டல் விசாரிக்கச் சொன்னாள்.

சீனு, ''ஏன்... நம்மாத்திலேயே தங்கட்டும். ஏகப்பட்ட ரூம் இருக்கு, திறக்காமலேயே...''

ரமணியின் சகோதரன் பெயர் ப்ரகாஷ். அவன் பெரிய கோயில், திருவானைக்காவல், சமயபுரம், மலைக்கோட்டையெல்லாம் பார்க்கவும் சீனு கார் ஏற்பாடு செய்திருந்தான். சீனுவும் லின்னியும் அவனுடன் சுத்திக் காட்டப் போனார்கள்.

மாலினி, ''சீனு... உனக்கு எப்படி தாங்க்ஸ் சொல்றதுன்னே தெரியலை!''

......உன் ஃப்ரெண்ட், என் ஃப்ரெண்ட்!''

......இவன் என் ஃப்ரெண்ட் கூட இல்லை. இவனை அதிகம் எனக்குத் தெரியாது. ஃப்ரெண்ட் டோட அண்ணன், அவ்வளவுதான்!''

சீனுவின் மேல் இரண்டு தடவை பட்டிருக்கிறாள். அவள் கூந்தல், அவன் முகத்தில் விளையாடியதாம். ''வேணும்னுட்டே பண்ணாளா, இல்லை அகஸ்மாத்தா தெரியலைடா. என்னைப் பார்க்கறப் பல்லாம் கொஞ்சம் லேட்டாவே தாவணியை ஒரு வீசு வீசிட்டுப் போட்டுக்கறா...''

......வேணும்னுட்டுத்தாண்டா...''

......எப்டிரா சொல்றே?''

......மத்தவாகிட்ட அப்படிப் பண்றதில்லையே!''

சீனு அந்த நாட்களில் மூணு வேளையும் லின்னியைப் பற்றிக் கவிதைகள் எழுதினான். லின்னி அடிக்கடி

சீனுவின் வீட்டுக்கு வந்து, ப்ரகாஷுடன் பேசிவிட்டுப் போனாள். ரொம்ப டீசண்டாகத்தான் பழகிக் கொண்டார்கள்.

அவளுடன் பேசுவதற்கே வெட்கப் பட்டான். அம்மாவும் அவனுடன் ரொம்ப அந்நியோன்யமாகிவிட்டாள். கை ரேகை நன்றாகப் பார்த்தான். அடிக்கடி லின்னியின் கைரேகையைப் பார்த்து, ''நீ பெரிய இடத்துல கல்யாணம் பண்ணப்போறே...'' என்றான்.

லின்னி, சீனுவைப் பார்த்துச் சிரித்தாள். சீனுவின் கவிதை நோட்டு முக்கால் நிரம்பியிருந்தது.

......சீனுவுக்கு இந்தப் பொண்ணைக் கேக்கலாமானு பாக்கறோம் ப்ரகாஷ்...''

......கண்டிப்பா கேளுங்க... நல்ல பொருத்தம்! மாலினிகூட அருமையான பொண்ணு. மகனுக்கு ரொம்ப ஏத்தவ...'' என்றான்.

......சீனு, எப்பக் கல்யாணம்?'' என்று விசாரித்தபோது, சீனு வெட்கப் பட்டான்.

ப்ரகாஷ் ஊருக்குப் புறப்படுவதற்கு முன், ஒரு நாள் ராத்திரி சீனு பாத்ரூம் போக எழுந்தபோது, அவன் அறையில் ராத்திரி ஒரு மணிக்கு விளக்கு எரிந்துகொண்டிருக்க...

...ஒருவேளை, விளக்கை அணைக்காமல் படுத்து விட்டானோ?' என்று அறைக்குள் கதவைத் தட்டின போது, கொஞ்ச நேரம் கழித்து அவன் திறந்தான். உள்ளே போர்வை கலைந்திருந்தது. ரொம்ப வியர்த்திருந்தான்.

......ப்ரகாஷ்... தூக்கம் வரலையா?''

......ஆமாம்... கொஞ்சம் புழுக்கமா இருந்துச்சு!'' என்றான்.

அதிகாலை... ராகவன் சார் வீட்டுக்கு வந்தார்.

......லின்னி, இங்கே வந்தாளா சீனு?''

......லின்னியா... இப்பவா?''

......ராத்திரிலருந்து காணோம்!''

......அவ அடிக்கடி எங்காத்துக்கு போன் போட வருவா...''

......உங்காத்துக்கா... எங்காத்துல ரெண்டு போன் இருக்கே! யாரோட பேசினாளாம்?''

......ரமணின்னு சிநேகிதியாம்... மெட்ராஸ்ல!''

......ரமணியா... ரமணனா?''

......ப்ரகாஷ்னு அவள் அண்ணன் கூட மாடியிலதான் இருக்கான்...''

......ரமணப்ரகாஷா?''

......ப்ரகாஷ்னு சொன்னான்!''

......கூப்பிடு...''

மாடிக்குப் போனால், ப்ரகாஷையும் காணோம். படுக்கையில் லின்னியின் ஒரு ஜிமிக்கி இருந்தது.

......ஏம்பா... ஒரு வார்த்தை என்கிட்ட சொல்லியிருக்கக்கூடாதா, இந்தப் பையன் வந்திருக்கான்னு...''

......உங்ககிட்ட லின்னி சொல்லலை?''

......சொல்லலையே... சொல்ல மாட்டாளே!''

......சமயபுரம், மலைக்கோட்டை எல்லாம் போனது சொல்லி இருப்பானு...''

இதற்குள் லின்னியின் அம்மாவும் வந்துவிட்டாள். ''வந்துட்டானா கடன்காரன்?'' – அவர்கள் பேசிக்கொண்டது சீனுவுக்குச் சரியாகப் புரியவில்லை.

......எதுக்காக மாத்திண்டு திருச்சினாப் பள்ளிக்கு வந்தோம்? அவனை மறந்துடுவான்னுதானே சொன்னே... இங்கே வந்து, நம் மூக்கடியிலேயே காதல் பண்ணியிருக்கா. பாவம், இவாள்லாம் நல்ல மனுஷா... இவாளையும் ஏமாத்தி, சீனு... உங்களுக்கு ஒரு வார்த்தை, எங்களுக்குத் தகவல் சொல்லணும்னு தோணவே இல்லையா?''

லின்னியின் அம்மா ரொம்ப அழுதாள்.

பத்மா மாமியும் அழுதாளாம். ''எங்காத்து சீனுவுக்குப் பண்ணிட லாம்னு ரொம்ப ஆசையா எல்லா நகையும் காட்டினேனே... போட்டுக் கூடப் பாத்துதே அந்தப் பொண்ணு! அப்றம், சீனு அவ பொறந்த நாளைக்குக் கொடுக்கறதுக்காக நாராயணசுவாமி கடைக்குப் போய், ஒரு புடவை வேற வாங்கி வெச்சிருந்தானே!''

......நாங்கதான் குடுத்து வெக்கலை மாமி!''

எல்லாக் கதைகளுக்கும் ஓர் உற்சாக மான பாகமும் ஒரு சோகமான பாகமும் உண்டு. உற்சாக பாகம் போன பாராவிலேயே முடிந்துவிட்டது. சோக பாகத்தில் நான் அதிகம் தங்க விரும்பவில்லை. கதையின் முழுமைக்காகச் சொல்லித் தொலைக்க வேண்டியிருக்கிறது. சீனு, அதன்பின் ரங்கு கடைக்கு வரவே இல்லை! அவனை வெளியே பார்ப்பதே அரிதாகிவிட்டது.

ஒரு நாள் பட்டாம்பியும் ரங்குவும் அவசரமாக என்னை அழைத்தார்கள். சீனுவின் பெரிய வீட்டுக்குள் நான் முதன் முதலாக நுழைந்தேன். கீழே சீனுவின் அப்பா, அம்மா கன்னத்தில் கைவைத்து உட்கார்ந்திருந்தார்கள்.

......போய்ப் பாருங்கோ... எல்லோரும் மாடில போய்ப் பாருங்கோ...'' என்று பத்மா மாமி சிரிக்கிறாளா, அழுகிறாளா... தெரிய வில்லை! மெள்ள மாடிக்குச் சென்றோம். மாடியில் தேக்கு மர ஊஞ்சல். சீனுவுக்கு ஆதிசேஷன் மாதிரி வெல்வெட் சோபா. ஜி.இ. ஃபேன், குட்டி ஃபேன், நன்னாரி வேர் தட்டி போட்டு கூலாக இருந்தது.

பெரிய ஹாலில் ஆளுயர பெல்ஜியம் நிலைக்கண்ணாடி இருந்தது. ஸ்டெய்ன்ட் கிளாஸ் சாளரங்கள், கிராமபோன், மாஜிக்ஐ வைத்த ரேடியோ, சலவைக்கல் பதித்த தரையில் ரத்தினக் கம்பளம், ஏராளமான கதைப் புத்தகங்கள், அலமாரி நிறைய செண்ட் பாட்டில்கள் – பச்சையிலும் நீலமுமாக, விதவித ஷேப்பில்... பெரிய பெட்ரூம். அதில் சீனு, ஒரு புடவையில் விட்டத்தில் தொங்கிக் கொண்டிருந்தான்.

அண்மையில் வெளியான ஒரு தமிழ்ப் படத்தில் புதுமுகம் நளின மாலினியின் புகைப்படத்தைப் பார்த்தபோது, அச்சுஅசல் லின்னியைப் போலிருந்தது இந்தக் கதைக்குத் தேவையில்லை.

அவனுடைய வருஷாப்திகத் துக்கு, சீனுவின் 'லின்னி' கவிதைத் தொகுப்பை நாங்கள் எல்லாம் சேர்ந்து புத்தகமாகப் போட் டோம். அதற்கு ஜமால் முகமது காலேஜ் தமிழாசிரியர் மாணிக்க னார், ' புதுக்கவிதையும் மரபுக் கவிதையும்' என்ற நீண்ட முன்னுரை எழுதிக் கொடுத்தார்.

இப்போது யோசித்துப் பார்த்தால், இந்தக் கதையையே முன்னுரையாகக் கொடுத்திருக்க வேண்டும் என்று தோன்றுகிறது.

# ஸ்ரீரங்கத்து தேவதைகள்

★ சுஜாதா



*உளன் எனில் உளன் அவன் உருவம் இவ்வுருவுகள்*
*உளன் அலன் எனில் அவன் அருவம் இவ்வுருவுகள்*

**– திருவாய்மொழி**

**ஸ்ரீ**ரங்கத்தில் அவ்வப்போது வைணவத்துக்கும் பார்ப்பனியத் துக்கும் எதிர்ப்புக்குரல்கள் எழும். நாங்கள் கீழச்சித்திரை வீதிக்காரர்கள்... அதைக் கண்டுகொள்ளாமல் தமாஷாகத்தான் எடுத்துக்கொள்வோம். சாத்தார வீதி மூலையில் திராவிடக் கழகப் பொதுக்கூட்டம் அவ்வப்போது நடைபெறும். தந்தை பெரியார் பேசுவது தெற்குவாசலில் கேட்கும். ராமனையும் கிருஷ்ணனையும் ரங்கநாதனையும் சில சங்கடமான கேள்விகள் கேட்பார். திருச்சி நகரத்தைப் பகுத்தறிவுப்பாசறை என்றே அவர்கள் சொல்லிக் கொண்டார்கள். சின்னக்கடைவீதி மூலையில் இருந்த கரீம்பாய் கடையில் பழைய புத்தகங்கள் வாங்கச் செல்வேன் (வீரமாமுனிவரின் ‘சதுரகராதி’ பழைய பதிப்பு அங்கேதான் கிடைத்தது). அப்போது பகுத்தறிவுக் கருத்துக்கள் ஒலிபெருக்கியில் காதில் விழும். திராவிடக் கழகத்தைச் சார்ந்த பண்ணனார் என்பவர் சித்திரை வீதியில் வீடு வாங்கிக்கொண்டு பால்சப்ளை செய்தார். பால் வியாபாரத்தையும் பார்ப்பன வெறுப்பையும் கலக்கவில்லை. பார்ப்பன எதிர்ப்புக் கூட்டங்களுக்கு அடிக்கடி தலைமை தாங்குவார். சில்க்கில் கறுப்புச் சட்டை போட்டுக் கொண்டிருப்பார். அவர் மனைவி பாட்டியுடன் தினம் ராத்திரி நிலவொளியில் பேச வருவாள். ‘‘என்னடி... உன் புருஷன் பெருமாளே இல்லைங்கறானாமே?’’

......அது ஏதோ சொல்லிக்கிட்டிருக்கும்.’’

......பெருமாள் எப்டிரி, இல்லைன்னு சொல்லப்போகும்... ஒருநா அவனைக் கேட்டுச் சொல்லேன்... நீதான் கேளேண்டா.’’

......பாட்டி, அவாள்லாம் நாஸ்திகாள்’’ என்பேன்.

......சார்வாகன் மாதிரியா?’’

......அதென்னவோ எனக்குத் தெரியாது. அவாள்லாம் நாஸ்திகாள்.’’

......என்ன எழவோ... பால்ல தண்ணி குத்தாம இருந்தா சரி கோதாவரி..''

......கோதையம்மா, நான் எப்பனாச்சியும் உனக்குப் பால்ல தண்ணிவிட்டுக் கொடுப்பனா... கள்ளிச்சொட்டு மாதிரி கொடுக்கறனா, இல்லையா?''

......ஆமா... ஊத்தறச்சயே அந்தப் பக்கம் தெரியறது கண்ணாடி மாதிரி'' என்று பாட்டி சொல்வாள்.

பண்ணனார் மாசம் பால் பணம் வாங்க வரும்போது சிலசமயம் ''நாளைக்கு வாயேம்பா... இன்னும் மணியாடர் வரலை.''

......நாளைக்குத் திருச்சில பொதுக் கூட்டம் பாட்டியம்மா... அவசரமே இல்லை... நீங்க எப்பவேணா குடுங்க'' என்பதில் எந்த பிரமாண வெறுப்பும் இருக்காது.

......பெருமாள் இல்லைன்னு சொல்றியாமே நீ?''

......அதெல்லாம் மீட்டிங்ல பாட்டியம்மா. எளுதி வெச்சதைப் படிக்கிறேன்.''

......அதான பாத்தேன்... நீ ரொம்ப சாதுவாச்சே... குடுமியை எல்லாம் கத்திரிப்பேன்னியாம்.''

......யாரோ புரளி பண்ணிருக்காங்க. பாட்டியம்மா, ஒண்ணு சொல்றேன் கேட்டுக்க... குடுமியை அறுப்பேங்கறது உங்க பாப்பாரசாதிப் பையனே!''

அவர் குறிப்பிட்டது 'அரசு பகுத்தறிவுப் பாசறை'யின் தலைவன் ஆ.வி. அரசுவை. அவன் பெயர் ஆ. வரதராஜன். எனக்கு ரெண்டு மூன்று கிளாஸ் சீனியர். நேஷனலில் பி.ஏ. படித்தான். திருச்சியில் தனியார் கம்பெனி ஒன்றில் ஆடிட்ட ராக வேலையில் இருந்தான். ராஜன் ஸ்கூலுக்கும் டீபிஜி கடைக்கும் நடுவே இருந்த எந்த வீடு என்று சரியாக ஞாபக மில்லை. முன்னேற்க சரிந்து கூரை வேய்ந்த அரிதான வீடுகளில் ஒன்று. திண்ணையும் பெரிசாக இருக்கும். சுவரில் சாய்ந்து கொள்ள வட்டமாக இருக்கும். விளக்கேற்றுவதற்காக பிறைகள் இருக்கும்.

அரசு அழகாக இருப்பான். என்னைப் பார்த்தால் எப்போதும் புன்னகைப்பான். ''எப்போது சங்கத்தில் சேரப் போகிறாய்?'' என்று கேட்பான்.

அந்த சங்கத்தின் பெயர் அரசு பகுத்தறிவுப்பாசறை. தைரியமாக போர்டே போட்டிருந்தான்.

ரங்கு கடைக்கு வருவான். அவன் பேச்சை உன்னிப்பாகக் கேட்டுக் கொண்டிருப்போம். மார்க்ஸ், மாஜினி, ரஸ்ஸல் என்றெல்லாம் பேசுவான். சார்வாகத் தத்துவத்தைப் பற்றியும் பௌத்தத்தைப் பற்றியும் விஸ்தாரமாகப் பேசுவான்.

ரங்குதான் பளிச்சென்று கேட்டான்.

......வரது, நீ என்னதான் சொல்ல வரே?''

......என்னை வரதுன்னு கூப்பிடாதே.. ஆ.வி. அரசு நானு.''

......ஆ.வி. அரசோ... அது என்ன புடலங்காய் அரசோ... நீ என்ன சொல்ல வரே..? பெருமாள் இல்லைன்னா?''

......பெருமாள் மட்டும் இல்லைடா.. சிவன், பிரம்மா, கிருஷ்ணன், ராமன் யாரும் இல்லை. கடவுள் இல்லை... எல்லாமே மூடக் கருத்துகள்... மக்கள் மனதில பயத்தை உண்டாக்கி காசு பிடுங்கற உத்திகள்.''

......அப்ப எந்தப் பெருமாளைத் தான் இருக்கறதா ஒப்த்துக்கறே?''

......டேய்! பெருமாளே இல்லைங்கறாண்டா சும்பா.''

......பெருமாளே இல்லயா?'' என்றான் வியப்புடன். ரங்குவுக்கு அதை நினைத்துப் பார்க்கக்கூட முடியவில்லை.

......இல்லை.''

......பின்ன சீரங்கம் கோயில், ரங்கநாதர், ஏகாந்த சேவை, உற்சவம், தைத்தேர், பங்குனி ரதம், குதிரை வாகனம், நித்யப்படி, திருமஞ்சனம் எல்லாம் வேஸ்டா?''

......வேஸ்ட் மட்டும் இல்லை... பித்தலாட்டம்.''

......என்னடா இப்படிச் சொல்லறான்... வரது, நீ என்ன வம்சம் தெரியுமா? உங்கப்பா ஆராமுது ஐயங்கார் கேட்டா ரொம்ப வருத்தப்படுவார்..''

......எங்கப்பா ஆராமுது ஐயங்கார்ங்கறதுக்காக நான் அவர் கருத்தையெல்லாம் ஏத்துக்கணும்னு எங்க ரூலு?''

......கிடக்கட்டும்... போர்டு போட்டிருக்கியே... பகுத்தறிவு பாசறைன்னு... என்ன ஆக்டிவிட்டி?''

......புரட்சிக் கருத்துக்களை மெள்ள மெள்ள நம் சிறுவர்களுக்கு மனசில பதியறா மாதிரி கொடுக்கப்போறேன்.. அவர்களுக்குச் சிந்தனா சக்தியை உண்டாக்கி எதையும் கேள்வி கேக்க வெக்கப்போறேன். அதுக்குத்தான் பசங்களைத் தேடிண்டிருக்கேன்.''

......பசங்க வருவாங்கற?''

......வராம பின்ன...''

......ஆளுக்கொரு லேக்கா உருண்டை கொடுத்தா லால்குடிக்குகூட வந்துரு வாங்க.''

......எனக்கு ஹோப்பில்லை'' என்றான் ரங்கு.

......பாரேன்... சனிக்கிழமை முதல் கூட்டம்.. அப்பறம் கீழவீதில குடுமி ஒழிப்புப் போராட்டத்தில ஜிட்டு வெச்சிருக்கவங்களை எல்லாம் கத்தரிக்கப்போறேன்.''

ஆச்சரியமாகவே இருந்தது சனிக்கிழமை... சித்திரைத் தேர் நிலையில் படி ஏறி உயரத்தில் கூட்டம் போட்டான். நிறையவே குட்டிப் பையன்கள் வந்திருந்தார்கள். எல்லோருக்கும் ரவா உப்புமா, டீ. அவர்கள் எல்லோரையும் உட்காரவைத்து –

......சிறுவர்களே! இப்ப நாம பாடப் போறது கடவுள் வீழ்த்து.''

......தப்பா சொல்றீங்க மாமா... கடவுள் வாழ்த்து.''

......வாழ்த்து இல்லை... வீழ்த்து!''

......சேச்சா, அது வேற கடவுள்டா.''

......கடவுளே இல்லைன்னு உங்களுக்கு எல்லாம் நிரூபிக்கப் போறேன்.''

......எப்டி மாமா?''

......இன்னிக்கு ரங்கநாதர் குதிரை வாகனமாடா?''

......கருட வாகனம் மாமா.''

......எதோ ஒண்ணு... அவர் இங்க வரப்போ அவரை வாயில வந்தபடி திட்டப்போறேன்... டாபோட்டு திட்டப்போறேன்... திட்னா என்ன ஆகும்?''

......உம்மாச்சி கண்ணைக் குத்திடுவார்'' என்றான் ஒரு வாண்டு.

……அவருக்குக் கோபம் வரும்படியா, எந்த மானஸ்தனும் வெக்கப்படும் படியா எல்லோர் முன்னாலயும் சத்தம்போட்டுத் திட்டப்போறேன்... பெருமாள் இருந்தா என்ன ஆகும் சொல்லு?''

குட்டிப் பையன் மறுபடி ''கண்ணைக் குத்திருவார்'' என்றான்.

……குத்தலைன்னா?''

……வேற எதாவது பண்ணிருவார்'' என்றான் இன்னொருவன்.

……பாக்கலாம்... நீங்க எல்லோரும் பெருமாள் வரப்ப இங்க வரணும்.''

கூட்டம் கலைந்ததும் ரங்கு அவனைக் கடைக்குக் கூப்பிட்டான். ''வரது, பைத்தியக்கார வேலையெல்லாம் பண்ணி செம உதை வாங்கப் போறே... இதெல்லாம் சாத்தாரவீதில டி.கே. மீட்டிங்கோட வெச்சுக்கோ... அங்க போய்ப் பேசறியாமே... என்னடா வரது வம்சத் துரோகம்டா இது... உத்தர சித்தரை வீதில வேணாம்டா... ஒண்ணுகிடக்க ஒண்ணு ஆயி உன்னை ஜாதிப்ரஷ்டம் பண்ணி கழுத்தைப் பிடிச்சுத் தள்ளிடு வா.''

……பாக்கலாமே!''

……ஏண்டா உனக்கு இப்படிப் புத்தி போறது...''

……நீங்கள்லாம் சிந்திக்கத் தெரியா தவங்க... சிந்திக்க மறுக்கறவங்க.. கோயிலே பணம் பிடுங்கிக் கோயில்.''

……ஏய்... வரது ஒருதடவை பெருமாள் சேவிக்கப் போயிருக்கான்... பெரிய க்யூ இருந்திருக்கு. மணியக்காரரும் நம்ம உபயக்காரரும் தடுப்புச் சங்கிலியைக் கழட்டிட்டு பத்துபேரை பெருமாள் சேவிக்க அழைச்சுண்டு வந்திருக்கார். அதான் பெருமாள் மேல கோவம்.''

……நாங்கள்லாம் முக்கால் மணியா காத்திண்டிருக்கோம்... இவருக்கு என்ன சலுகை? பெருமாளுக்கு முன்னால எல்லோரும் சமம்ங்கறா.. இதைக்கூடத் தடுக்க முடியலை இவரால... இவர் என்ன பெருமாள்? கையாலாகாதவர்... சந்நிதியைவிட்டு எறங்கி வந்து அந்த உபயக்காரரைச் சவிட்டிருக்க வேண்டாமோ?''

……கலியுகத்தில அதெல்லாம் கெடையாது வரது. திரேதாயுகத்தில தாண்டா பெருமாள் நேர்ல வருவார். மனுஷ ரூபத்தில வரதை இப்பல்லாம் நிறுத்திட்டார். கல்கி அவதாரம் இன்னும் ஆகலை.''

……ஏன்... ஏன்?''

……அப்படித்தான்.''

……ஏன்னா பெருமாள் இல்லை... மறுபிறவி இல்லை.''

……வேற என்னதான் இருக்கு? பொச்சும் புளியங்காயுமா?''

எல்லோரும் சிரிக்க...

……உங்களுக்கெல்லாம் விவஸ்தை கிடையாது... சிந்தனை மழுங்கிப் போன ஜன்மங்கள்.''

……எதுக்கும் ஜாக்கிரதையா இருந்துக்கோ... செம உதை படப்போறே.''

அரசு தன் பூணூலை பெருமாள் கருடவாகனத்தில் வீதிவலம் வரும்போது அறுத்துப்போட்டான். அவரைக் கண்டபடி திட்டினான். ''நீ உருப்படுவியடா'' என்று டா போட்டுத் திட்டினான். அதை யாரும் கவனிக்கவில்லை. ''மளிகைக்கடை ரங்கநாதனுக்கு வரது கொடுத்த கடனைத் திருப்பித்தராததால் திட்டு கிறான்'' என்றனர்.

ஒருமுறை அவன் தந்தை ஆராமுது ஐயங்கார் ரங்கு கடைக்கு ஸ்டவ் திரி வாங்க வந்திருந்தார்.

……வரது, இங்க வந்தானா?''

……வரது இல்லை… ஆ.வி. அரசு.''

……எதுக்குத்தான் இப்படி புத்தி போறதோ அவனுக்கு… ஏம்பா, நீங்கல்லாம் சொல்லக்கூடாதோ?''

……அவன் கோவையா வாதாடறது எங்களுக்கே சந்தேகம் வந்துர்றது மாமா.''

……ஒரு கல்யாணத்தைப் பண்ணி வெச்சுடுங்கோ மாமா.''

……நிச்சயம் ஆய்டுத்து… அதைச் சொல்லத்தான் வந்தேன்.''

……பொண்ணு யாரு?''

……அம்மா மண்டபம் ரோடு போற வழியில புதுசா தாத்தாச்சாரியார் காலனி வந்திருக்கே.. திருமஞ்சன காவேரி தாண்டி.. அங்க இருக்கா.''

……பேரு லோசனாவா?''

……ஆமாம்… எப்படித் தெரியும்?''

……அவ அப்பா எனக்கு ஒண்ணுவிட்ட மாமா உறவாக்கும் ஓய்'' என்றான் ரங்கு.

……அந்தப் பொண்ணு நம்ம வரதுக்குத் தோதுப்படுமா ரங்கு?''

……அவா என்ன சொல்றா?''

……குடுக்கறேங்கறா..''

……வரது ஒரு நாஸ்திகன்னு சொல்லிட் டிங்களா?''

……அதெல்லாம் சொல்லலை… நீ போய்ச் சொல்லிடாதே.''

……சொல்ல வேண்டாமோ?''

……எல்லாம் கல்யாணத்துக்கப்புறம் சரியா போய்டும்னு மெய்யு ஐயங்கார் சொல்லிருக்கார்.''

அவர் போனதும் ''ரங்கு, அந்தப் பொண்ணு எப்படிரா?''

……ரொம்ப பக்திடா… நாலு வேளை கோயிலுக்குப் போகும்.. ஒரு புறப்பாட்டை விடாது.. தினம் வீதிப் பிரதட்சணம் பண்ணும்… பாத்திருப்பியே.''

……ஓ… அந்தப் பொண்ணா! அதைப் போய் இந்த நாஸ்திகனுக்குக் கல்யாணம் செய்து வெக்கிறாளா… எப்படி ஒப்த்துண்டா?''

……அதான் ஆராமுது சொன்னாரே… அவாகிட்ட இதை மறைச்சிருக்கா.''

……அநியாயம்டா.''

……வரதுக்குச் சொத்து நிலபுலன்கள் எல்லாம் உண்டு. நாத்திகனா இருந்தா என்ன?''

இதற்குள் வரது வந்து சேர்ந்தான். ''ரங்கு, அவா பேப்பர்ல என் பேரு வந்திருக்கு பாரு'' என்று கட்டினான்.

திருவரங்கத்தில் சனாதனிகளின் கோட்டையில் ஒரு பகுத்தறிவுக் குரல்.. ஆ.வி. அரசு என்பவர் தீவிரமான

ஐயங்கார் பார்ப்பன இனத்தைச் சேர்ந்தவர் என்பது இங்கு குறிப்பிடத் தக்கது என்றெல் லாம் செய்தி போட்டு அவன் போட்டோ போட்டிருந்தது.

......வரது, உனக்குக் கல்யாணமாமே?''

......யார்றா சொன்னா?''

......உங்கப்பாதாண்டா.''

......ஆமடா... அம்மா மண்டபம் ரோட்டில ஒரு பொண்ணு பாத்திருக்கா... ரோசனாவோ, லோசனாவோ பேரு.''

......அந்தப் பொண்ணு ரொம்ப பக்தியுள்ளவடா... சக்கரத்தாழ்வார் கோயில், தாயார் சந்நிதி எல்லாத்துக் கும் தினம் போறவ.''

......எல்லாத்தையும் மாத்திரலாம் ரங்கு.''

......எப்படி?''

......பேசியே என்னால யாரையும் கன்வின்ஸ் பண்ணமுடியும். அதுக்கு முன்னாடி இந்தக் குடுமி நீக்கப் போராட்டம் ஒண்ணு பாக்கியிருக்கு... கீழ வீதில யாரார்றா குடுமி?''

குடுமி வழக்கொழிந்துகொண்டிருந்த காலகட்டம் அது. அங்கொன்று இங்கொன்றாக அது கார்டு வீட்டுக்கு எட்டாவது இருபத்தாறு ஏ வீட்டில் பப்புக்குட்டி என்பவனும் எங்கள் வீட்டுக்கு அடுத்த வீட்டில் ஒருவனும் சாவுகார்வீட்டு நான்காவது வீட்டில் இருந்த துவரம்பருப்புதுரை என்கிற துரைராஜனும் கட்டுக்குடுமி வைத்திருந்தார்கள்.

சொல்ல மறந்துவிட்டேனே.. அந்த லோசனாவின் தம்பி விஜயராகவனும் வைத்திருந்தான். ஒன்றிரண்டு பேர் வடக்கு வீதியில் வைத்திருந்தார்கள்.

......குடுமியை அறுக்கலாம்னா அதிகம் ஆட்கள் இல்லையேடா... உன் உட்பி மச்சினனே குடுமி.''

......அதை வெட்டினாத்தான் கல்யாணம்! பப்புக்குட்டியையும் தயாரா இருக்கச் சொல்லு... எந்த நிமிஷத்திலயும் கத்தரிச்சிருவேன்'' என்றான். ஆ.வி. அரசு.

பப்புக்குட்டி, ''இது என்னடா வம்பாப் போச்சு? என் தலைமயிரு, என் குடுமி... இதை வெட்டறதுக்கு இவனுக்கு என்ன உரிமை? அநியாயமா இருக்கே.''

......அவன் கிறுக்குடா... எதுக்கும் நீ கொஞ்ச நாளைக்குக் கீழவாசல் பக்கம் வராம கோட்டைலிருந்து வரப்ப கோயிலுக்குள்ள நுழைஞ்சு கீழ உத்தர வீதி வடக்குவாசல் வழியாக கீழவீதின்னு வந்துரு.''

ஆ.வி. அரசு தெற்குவாசல் தையல்காரரிடம் சென்று ஒரு நல்ல கத்திரி வாங்கிக் காத்திருந்தான்.

......எங்கடா பப்புக்குட்டியை ஒரு வாரமா காணம்?''

......எங்க யாவுது ஊருக்கு கீருக்குப் போயி ருப்பான்.''

......இல்லைடா... எங்கிட்டருந்து பம்மறான்... அவனைப் பாத்தா சொல்லு... அரசு காத்துண்டிருக் கான்னு.''

......அவ அப்பாகிட்ட செல்லட்டுமா... அவன்கிட்டயா?''

......அப்பாகிட்டயும் சொல்லு... அவர் குடுமியையும் வெட்டறேன்.''

......அவர் குடுமி ரொம்ப சின்னதுரா... கொத்தமல்லிக் கட்டு மாதிரி.''

வரது கல்யாணத்துக்கு மந்திரமெல் லாம் கூடாது என்றான். ரிஜிஸ்டரார். ஆபீஸில் தி.க. தலைவர்கள் முன்னிலை யில் சீர்திருத்தக் கல்யாணம் பண்ணிக் கொள்ள வேண்டும் என்றான்.

ஒருவழியாக அப்பா தாயே என்று கெஞ்சி அதிகாலையில் வைதிகமும் ராகுகாலத்தில் சீர்திருத்தக் கல்யாண மும் செய்துகொண்டான். அடிக்கடி மச்சினன் விஜியின் கட்டுக்குடுமியைப் பார்த்துக்கொண்டிருந்தான்.

லோசனா தோற்றத்தில் அவனுக்குப் பொருத்தமாக இருந்தாள். அரக்கு கலர் கூறைப்புடவையும் மடிசார்கட்டும் அவளுக்குப் பாந்தமாக இருந்தது. ஏகப்பட்ட நகை போட்டிருந்தார்கள். வரதுவின் கரம் பிடித்த கையில் மருதோன்றி செக்கச் செவேல் என்று பத்தியிருந்தது. மூக்கில்சின்னதாக வைரமூக்குத்தி, ஜடைபில்லை, நாகொத்து, சுட்டி எல்லாம் அணிந்து ஷோக்காக இருந் தாள். வரது அடிக்கடி அவளையே பார்த்துக்கொண்டிருந்தான்.

அவள் ‘அப்படிப் பார்க்காதே’ என்று அதட்டலாக அவனைப் பார்த்துவிட்டுச் சிரித்தாள்.

சின்ன வயசிலேயே வேண்டுதல் என்று திருப்பதி போய் வந்தார்கள். அரசு முதலில் வரமாட்டேன் என்று சொல்லிவிட்டானா... மாடிக்குப் போய் அவனை லோசனா கெஞ்சிக் கேட்டதில் தவிர்க்க முடியாமல் அவர்களைத் தொடர்ந்து சென்றான். அங்கே போயும் திருப்பதி பெருமாளைத் திட்டினானாம்.

......இவ்வளவு ஏழைகள் இருக்கறப்ப உனக்கு எதுக்குத் தங்கத்தில ரதம்?'' என்று கேட்டானாம். திருப்பதியில் இருந்து திரும்பியதும் அரசுவின் போராட்டம் தீவிரமாகிவிட்டது. ஒரு நாள் பப்புக்குட்டியைக் கடையில் வைத்துப் பார்த்தேன்.

......என்ன பப்பு, கிராப்பு திடீர்னு?''

......இந்தப் பைத்தியம் ஊருக்குப் போற வரைக்கும் மாமா கிராப்பு வெச்சுக்கச் சொன்னார். அன்னிக்கு என்ன ஆய்டுத்து தெரியுமா ரங்கு... வரது போட்டோக்காரங்ககூட என்னைப் பார்த்துட்டான்... போட்டோக்காரங்களைக் கூப்ட்டு பாய்கடைலிருந்து பெரிசா காடாத் துணி வெட்டற கத்தரியை எடு த்துண்டு வந்து இந்த க்ஷணம் கத்தரிப்பேன்னு துரத்தறான்.. தப்பிச்சேன்... பிழைச்சேன்னு மாடி எறிக் குதிச்சேன்... பகுத்தறிவு தினமாம்... ஒரு குடுமியையாவது வெட்டியே ஆகணுமாம்... நாந்தான் அம்ட்டேனா.. ஆளைப் பாரு.''

......அப்றம் என்ன ஆச்சு?''

......அந்தப் பொண்ணு அருமையான பெண்ணுடா... லோசனா வந்து எங்கம்மாகிட்ட மன்னிப்புக் கேட்டது. அம்மா விடுவிடுன்னுவிட்டா. ‘உன் ஆம்படையான் என்னன்னு நினைச்சிண்டிருக்கான்... திரிசமனெலாம். திருச்சில வெச்சக்கச் சொல்லு... இல்லை, உங்காத்துக்குள்ள வெச்சுக்கோ... அடுத்த தடவை போலீஸ் ஸ்டேஷன்ல ப்ராது கொடுத்து கைல விலங்கை மாட்டி ஊர்கோலமா அழைச்சுண்டு போவான்னு சொல்லு... எங்காத்துக் காரரை உனக்குத் தெரியாது... பாத்தா சாதுவா இருப்பார்... பாஞ்சா புலி..'

...மன்னிச்சுக்கங்கோ மாமி.. இனிமே இந்த மாதிரி நடக்காது.'

...ஏண்டி, உன் ஆம்படையானுக்கு இப்படிப் புத்தி போறது?'

...என்ன பண்றது மாமி... கல்யாணத்தப்பகூட அவாத்தில யாரும் இவர் இப்படிப்பட்டவர்னு சொல்லலை..'

...ஏமாத்திக் கல்யாணம் பண்ணிட்டாளா! சக்கரத்தாழ்வாருக்கு வேண்டிக்கோ... நாப்பத்தெட்டு நாளைக்கு எலுமிச்சம்பழ மூடில நெய்விளக்கு ஏத்திண்டு போ... புத்தியைக் கொடுப்பார்.'

...பாக்கலாம் மாமி.'

...மத்தபடி எப்படி?'

...மத்தபடி நன்னாத்தான் வெச்சிண்டிருக்கார். பராசக்தி, ஓரிரவு, வேலைக்காரி சினிமாக்குக் கூட்டிண்டு போனார். லாலா கடைல அல்வா வாங்கித் தரார். தவறாம கனகாம்பரம், கதம்பம், மல்லிப்பூ, பிச்சிப்பூ எல்லாம் வாங்கிண்டு வரார். அது என்னமோ குடுமியைக் கண்டா மட்டும் ஆவேசம் வந்துடறது...

கத்தரிக்கோலைத் தூக்கறார்.'

...எல்லாம் சரியா போய்டும்.. உங்காத்துக்காரர் என்ன நட்சத்திரம்?'

...உத்தரட்டாதி.'

...இப்படித்தான் படுத்தும்... பங்குனிக்குள்ள சரியாய்டும்.'

...பங்குனி வரைக்குமா.. ஹூம்.'

...ஏன்?'

...வரவர ஜாஸ்தியாயிண்டு வரது... அடுத்த தடவை வடகலையார் மொட்டைப் பாட்டிகளுக்கெல்லாம் பட்டுப்புடவை கட்டிக்கச் சொல்லப் போறாராம். இது எங்க கொண்டு விடுமோன்னு பயமா இருக்கு.'

...சக்கரத்தாழ்வார் கோபத்தைக் கிளப்பாம இருக்கச் சொல்லு... பூமியே தாங்காது... பூசினாப்பல இருக்கே மூஞ்சி... உண்டாயிருக்கியா?'

...ஆமாம் மாமி.'

...எத்தனை மாசம்?'

...நாலு.'

...இரண்யகசிபுவுக்குப் பிரகலாதன் பொறந்தாப்பல உனக்கு ஒரு பிள்ளை பொறந்து அப்பனைத் திருத்தட்டும்... ஒரு நடை ஆத்தில ம்ருத்யுஞ்சய ஹோமமும் சுதர்சன ஹோமமும் பண்ணிடு.'

...ஐயோ... என்னை பலிபோட்டுருவார்.. அமாவாசைக்கு அப்பாவுக்கு தோப்பனாருக்குத் தர்ப்பணம் பண்ணிவெக்க வர வாத்தியார் சுவாமிகளை எல்லாம் விரட்டறார்?' ''

வரது சிந்தனையாளர்கள் மாநாட்டுக்கு சென்னைக்குப் போயிருந்தபோது அவனுக்கு ஒரு அழகான ஆண் குழந்தை பிறந்தது. அதற்கு லோசனாவின் அப்பா கோவிந்தராஜன் என்று பெயர் வைக்க விரும்பினார். வரது அதற்கு இங்கர்சால் என்று வைக்க வேண்டும் என்றான். கடைசியில் லோசனா அடித்துச் சொல்லிவிட்டாள்... பரத்வாஜன் என்று பெயர் வைத்து பத்தாச்சி என்று கூப்பிட்டார்கள்.

குழந்தை அவளைக் கொண்டிருந்தது. குளிக்கப் போகும் போது வரது கையில் கொடுத்தால் ''சொல்லு.. அப்பா மாதிரி சொல்லு.. கடவுள் இல்லை... கடவுள் இல்லை..''

பத்தாச்சி ''கில்கா'' என்றது.

வரதுவிடமிருந்து பல பகுத்தறிவுச் சங்கங்கள் அவ்வப்போது நூறும் இருநூறும் வாங்கிக்கொண்டு வரதுவின் போட்டோவை போஸ்டர் அடித்து இந்த தினம், அந்த தினம் என்று பணம் பிடுங்குவதை லோசனா சாமர்த்தியமாகத் தடுத்துவிட்டாள். ''எங்காத்தில குழந்தை இருக்குப்பா... அதுக்குப் பசும்பாலும் பவுடர் பாலும் கொடுத்தே போண்டியாயிண்டிருக்கோம். இந்த வருஷம் இங்கர்சால் நினைவுநாள் வேண்டாம்.''

......தலைவர் கோபப்படுவாரே தங்கச்சி.''

......கோவிச்சுக்கட்டும்... நான் பாத்துக்கறேன். நீங்கதான் பெரிசா சங்கம் வெச்சிருக்கேளே... பத்திரிகை எல்லாம் நடத்தறவாளை கேட்டுக்கோ.''

வரதுவுக்கு ஆபீஸில் ஆடிட் வேலை இருந்ததால், கோபித்துக்கொள்ள அவகாசம் கிடைக்கவில்லை.

......லோச்சி, இங்கர்சால் நினைவு தினம்னு யாராவது வந்தாளா?''

......இல்லையே... யாரும் வரலையே.''

......என்ன... மறந்துட்டானுகளா?''

லோசனா அவன் கொள்கைகளை மாற்ற முயன்றாலும் அவன் தன் நம்பிக்கையில் தளராமலேயே இருந் தான். இடையில் லோசனா மறுபடி உண்டானாள். முதல் குழந்தைக்கு ஒரு பெரிய சிக்கல் ஏற்பட்டது. தடு ப்பு ஊசி ஏதோ சரியாகப் போட வில்லையோ, என்னவோ... கக்குவான் இருமல் போல வந்தது. குழந்தை ஜுரம் வந்து கையில் நிற்காமல் கிழிந்த நாராகப் படுத்திருந்தது. ராத்திரியெல் லாம் டண் டண்ணென்று இருமியது. தேவி டாக்கீஸ் அருகே பாலாஜி என்கிற, குழந்தை டாக்டர் இருந்தார். அவரிடம் காட்டியதில் ஒன்றும் சொல்லவில்லையாம் ''உன் புருஷனுடன் வா'' என்றாராம். இருவரும் போயிருக்கிறார்கள். ''மிஸ்டர் வரதராஜன். குழந்தையை ஒரு வாரம் முன்னால் கொண்டுவந்திருக்க வேண்டும்... இப்ப ரொம்ப லேட்..''

......வாட் டு யு மீன் டாக்டர்?''

......நெஞ்சில் கபம் கட்டி இருக்கிறது. மூச்சுவிடத் திணறுகிறது.. இன்ஜெக்ஷ னும் மருந்தும் கொடு த்திருக்கிறேன். ஆனால், எனக்கு அவ்வளவு நம்பிக்கையில்லை. மெட்ராஸில் குழந்தைகளுக்கான பெரிய ஆஸ்பத்திரி எழும்பூரில் இருக்கிறது. அதற்கு அழைத்துச் சொல்வது நல்லது.''

......இல்லைன்னா?''

......இதைவிட அப்பட்டமாக எச்சரிக்க என்னால் முடியாது. இல்லைன்னா குழந்தை பிழைக்காது.. கிளம்பறதுக்கு முன்னாடி ஒரு விசை காட்டிடுங்க குழந்தையை.''

இருவரும் பிரமித்துப்போய் மாட்டு வண்டியில் வீடு திரும்பும்போது லோசனா பிழியப்பிழிய அழுதிருக் கிறாள். அழுதுமுடித்து ''வாங்கோ'' என்றாள்.

......ஏங்க... மெட்ராஸ்க்கு ராத்திரி தானே வண்டி? அந்த சக்கரத்தாழ் வானைப் போய் கேட்கலாம்.''

......என்ன சொன்னே? ஆழ்வானா?''

......ஆமாம்... நீங்க சொல்றது எல்லாம் உண்மை. பெருமாளும் இல்லை... ஒரு சுக்கும் இல்லை. நாப்பத்தெட்டு நாள் எலுமிச்சம் பழத்தில வெளக்கேத்தி ஊர்ல இருக்கற எல்லா சந்நிதியையும் சுத்தி எல்லா சுலோக மும் சொல்லியும் என் குழந்தையைக் காப்பாத்தலைன்னா என்ன தெய்வம் அது... வாங்கோ, கேட்டே ஆகணும்... நீங்களும் கேளுங்கோ.''

......நான்தான் அப்பவே புடிச்சு அடிச்சுண்டேனே... தெய்வமே இல்லைன்னு..''

......அங்க இருக்கிற எல்லா விளக்கையும் உடைச்சு நாசம் பண்ணி எறியணும் போல வருது...''

இருவரும் சக்கரத்தாழ்வார் சந்நிதிக் குக் குழந்தையுடன் போயிருக் கிறார்கள். அவள் படியருகில் குழந்தையை வைத்துவிட்டு ''பாரு.. என் குழந்தையை! உன்னால் காப்பாத்த முடியலை பாரு.. நீயே பாரு... என்ன தெய்வம் நீ'' என்று அழுதிருக்கிறாள்.

வரது அவளை அணைத்துக் கொண்டு ''லோசனா, வா போகலாம்... இதனால ஒரு பிரயோசனமும் இல்லை. டுட்டிக்கோரின்ல மெட்ராஸ் போக டிக்கெட் ஏற்பாடு பண்றேன்.''

கிளம்புவதற்குமுன் அதற்கான பலமும் தெம்பும் குழந்தையிடம் இருக்கிறதா என்று பார்க்க டாக்டரிடம் எடு த்துச் சென்றிருக்கிறார்கள்.

அவர் பரிசோதித்துப் பார்த்து விட்டு உதட்டைப் பிதுக்கி ''போக வேண்டிய தேவையில்லை'' என்றார்.

குழந்தை தூங்குகிறதா, ப்ராணன் போய்விட்டதா என்று தெரியாமல் சன்னமாக மூச்சுவிட்டுக் கொண்டிருந்தது.

டாக்டர் இருவரையும் தனியாக அழைத்தார்.

......என்ன குடுத்தீங்க இதுக்கு?''

……புதுசா எதும் குடுக்கலை…''

……என்னவோ செய்திருக்கீங்க.''

……சக்கரத்தாழ்வார் சந்நிதிக்கு எடுத்துண்டு போய் படியில வெச்சு 'இன்ன மாதிரி செய்தது நியாயமா, நியாயமா'ன்னு கேட்டா… உணர்ச்சி வசப்பட்டுட்டா… இதெல்லாம் தேவையில்லைன்னு சொல்லிச் சொல்லிப் பார்த்தேன். இவ கோபம் தணியலை.''

பாலாஜி டாக்டர் ''குழந்தைக்கு ஜுரம் இறங்கி இருக்கு. லங் கிளியராகி இருக்கு… பல்ஸ் சீராய்டுத்து'' என்றார்.

ஃஷிஃஷிஃஷி

பெங்களூரில் பொறுப்பேற்பதற்கு முன் ஒரு நடை ஸ்ரீரங்கம் போயிருந்த போது வழக்கம்போல ரங்கு கடைக்குப் போனேன். அங்கே கட்டுக் குடுமியும் பன்னிரண்டு திருமண்ணுமாக ஒரு சுவாமி வீற்றிருந்தார். என்னை ஒரு மாதிரியாகப் பார்த்து 'சௌக்கியமா?' என்றார். நான் பவ்யமாக ''அடியேன் ரங்கராஜன்… சுவாமி திருநாமம் என்னவோ?''

ரங்கு அட்டகாசமாகச் சிரித்து ''டேய்… வரதுடா இது!''

……அட, வரதுவா.. என்ன ஆச்சு உனக்கு? பகுத்தறிவு, குடுமி, கழகம் எல்லாம்…''

……அதெல்லாம் ஞாபகப்படுத்தாதே. ரங்கு, ஸ்ரீபாஷ்யத்தில் ஒரு சூத்ரத்துக்கு எம்பெருமானார் வியாக்கியானம் பாரு நாப்பது பக்கம்.''

நான் அவனை வியப்புடன் பார்த்தேன்.

……வரது, உன் நாஸ்திக வாதமெல்லாம்..''

……புறப்பாடாயிருக்கும்… அப்றம் சந்திக்கலாம்… நாராயணா ஹரீ ஹரீ லோச்சி வந்தா ஆத்துச் சாவியைக் கொடு'' என்று சைக்கிளை எடுத்துக் கொண்டு புறப்பட்டான்.

அவன் போனதும் லோசனா வந்தாள். ''ரங்கு மாமா, இவர் வந்தாரோ..''

……இப்பதான் போறான்.. சாவி கொடுத்திருக்கான்.''

……எங்க போறதா சொன்னார்?''

……பெருமாள் புறப்பாட்டுக்கு!''

……இப்பல்லாம் ஒரு புறப்பாடு, திருமஞ்சனம் விடமட்டேங்கறார்.''

லோசனா இன்னமும் பூரிப்பாக, அழகாகத்தான் இருந்தாள். ''பத்தாச்சி, மாமாக்கு அபிவாதயே சொல்லு… மாமா பெரிய எழுத்தாளர்.''

அருகே குட்டி ராமானுஜர் போல இங்கர்சால் என்று அழைக்கப்படவிருந்த பரத்வாஜன் நின்று கொண்டிருக்க, அருகே மற்றொரு,

……பொண்ணு பேர் என்ன?''

……பேர் சொல்லுடி மாமாக்கு!''

……வைதேகி'' என்றது சன்னமாக

……வைதேகி எப்டி இருக்கே?''

வைதேகி மெஷின் போல 'மாய்கயித்திங்கள் மதி நியைந்த நன்னா' சொல்வதற்குள் மூச்சு வாங்கியது.

......போறும்..''

......வரது எப்படி இப்படி மாறினான்? நீதான் மாத்தினியா லோசனா?''

......இல்லை. சக்கரத்தாழ்வார்தான்'' என்று ரங்குவைப் பார்த்துப் புன்னகைத்தாள்.


......குழந்தைக்கு டாக்டர் பாலாஜி குடுத்த மருந்தில சாயங்காலத்துக்குள்ள சரியா போய்டும்னு சொன்னார். அவர்கிட்ட பேசி வெச்சுண்டு பெரிசா நாடகமாடி வரதுவை மனசை மாத்திட்டா... என்ன லோச்சி?''

......சொல்லாதீங்கோ மாமா. கதையா எழுதிடப் போறார்'' என்றாள்.

---

# ஸ்ரீரங்கத்து தேவதைகள்

★ சுஜாதா



சில ஆண்டுகள் வடக்கே இருந்து விட்டு ஒரு முறை ஸ்ரீரங்கம் போன போது வழக்கம்போல் ரங்கு கடையில் போய் உட்கார்ந்தேன். ரங்கு 'அன்று கண்ட மேனிக்கு அழிவில்லாமல்' அப்படியே இருந்தான். புதுசாக கூலிங்கிளாஸ் போட்டிருந்தான். ஆண்டாளின் பையன் அமெரிக்காவில் இருக்கிறானே பாச்சாவோ, யாரோ... அவன் கொடுத்ததாம். வழக்கம்போல் தம்பு, சீது போன்றவர்கள் வந்து அரசியலையும் சினிமாவையும் அலசினார்கள். தம்பு தேவகாந்தாரிக்கும் ஆரபிக்கும் வித்தியாசம் என்னவென்று பாடிக் காட்டினான். சீது யாருக்கு மொட்டைக் கடுதாசி எழுதலாம் என்று யோசித்துக்கொண்டிருந்தான்.

......நீ எப்ப வந்தே?'' என்று கேட்டான் ரங்கு.

......நேத்திக்குதான்.''

......கொஞ்ச நாள் இருப்பியா?''

......ஒரு மாசம் இருக்கலாம்னு ஆன்யுவல் லீவ்ல வந்திருக்கேன்.''

......நீ ஏர்ஃபோர்ஸ்லதான இருக்கே?''

......ஏர்போர்ட்ல.''

......ப்ளேன் எல்லாம் ஓட்டுவியாமே! பாகிஸ்தான் மேல நீதான் பாம் போட்டதா பேசிக்கிறா.''

......ரங்கா... பாரு, சரியா புரிஞ்சுக்கோ! நான் இருக்கறது ஏர்போர்ட். டெல்லில சப்தர்ஜங்னு பேரு – விமானநிலையம். நீ சொல்றது ஏர்ஃபோர்ஸ். அது 'பாலம்'கிற இடத்தில் இருக்கு.''

......ரெண்டும் ஒண்ணுதானே.''

......இல்...லை.''

......பின்ன... ஏர்ஃபோர்ஸ்ல யார் இருக்கா?''

......மேலச் சித்திரை வீதில ரங்காச்சாரிடா அது... அவன்கூட பைலட் இல்லை.''

......ஏர்ஃபோர்ஸ்னா எல்லாரும் பறக்க மாட்டாளோ?''

......மாட்டா!!''

......அப்ப நீ ஏர்ஃபோர்ஸ்ல இல்லை?''

......ஏர்போர்ட்... ஏர்போர்ட்!''

......பின்ன யாரோ, நீ ப்ளேன் ஓட்டறதா சொன்னாளே..?''

......அது சின்ன ப்ளேன். டிரெய்னிங் ப்ளேன்.''

......ஏர்போர்ட்ல பெரிய ப்ளேன்தானே இருக்கும்! போட்டுக் குழப்பறாங்கப்பா!''

நான் அவனுக்கு மேலும் விளக்கும் முயற்சியைக் கைவிட்டேன். ரங்குவின் உலகம் அவன் வீடு, கடை இரண்டை விட்டு வெளியே எதும் கிடையாது. உலகம் முழுக்க அவன் கடைக்கு அரட்டையடிக்க வரும். இவன் இடத்தைவிட்டு நகரமாட்டான். பெருமாளைக்கூட பங்குனி, சித்திரை உற்சவங்களில் கடையைக் கடந்து செல்லும்போதுதான் சேவிப்பான்.

அப்போது ஒரு கிழவனார் கையில் சொம்புடன், ஒரு சிறுவன் குச்சியைப் பிடித்துக்கொண்டு அழைத்துச் செல்ல... 'உயர்வற உயர்நலம் உடையவன் எவனவன்...' என்று ஏறத்தாழ உளறலாகச் சொல்லிக்கொண்டு நட்ட நடுத் தெருவில் வந்துகொண்டிருந்தார். முகத்தில் ஒரு வாரத்துக்கு உண்டான வெண் தாடி. மார்பில் பூணூல். சவுக்கம். பத்தாறு வேஷ்டி.

......ரங்கு, இது யாரு?''

......இவர் பேரு தேசிகாச்சாரி. ஜி.பி–னு ஐஸ்கூல்ல மேத் டீச்சர் இருக்காரே, அவரோட அப்பா.''

......ஆமாம். எதுக்கு சொம்பை கைல வெச்சுண்டு பிரபந்தம் சொல்லிண்டுபோறார்?''

யாரோ அவர் சொம்பில் அரிசி போட்டுவிட்டு வணங்கி விட்டுச் சென்றார்கள்.

......உஞ்சவிருத்தி.''

......புரியலை. ஜி.பி. இவரை வெச்சுக் காப்பாத்தலியா?''

......அதெல்லாம் இல்லை. பிடிவாதம்.''

......பணம் காசு இல்லையா? ஜி.பி. நிறையச் சம்பாதிக்கிறாரே!''

......இவருக்கே நிறைய சொத்து இருக்கு. சித்திரை வீதில ஜி.பி. இருக்கற வீடு இவர்துதான். மகேந்திர மங்கலத் தில் நெலம் எல்லாம் இருக்கு.''

......உஞ்சவிருத்தின்னா பிச்சை எடுக்கறதில்லையோ?!''

......ஆமாம். 'பவதி பிக்ஷாம் தேஹி'ன்னு சொல்லலே... அவ்ளவுதான்!''

......புரியலை ரங்கு.''

......சில வேளைல பெரியவர்களுடைய பிடிவாதங்கள் புரியாது நமக்கு. இந்த பிராமணனுக்கு வீம்பு. போக்கடாத்தனம்.''

ஜி.பி. என்னும் பார்த்தசாரதி செயலாக இருப்பவர். கணக்குப் பாடப் புத்தகம், நோட்ஸ் எல்லாம் போடு பவர். லட்சக்கணக்கில் விலை போகும்.

எஸ்.எஸ்.எல்.சி–க்கு ஒரு செக்ஷனுக்கு கிளாஸ் டீச்சர். ஹைஸ்கூலில் சீனியர் டீச்சர் என்று மதிக்கப்பட்ட ஆசிரியர். தேசிய விருது வாங்கியிருக்கிறார். அடுத்த ஹெட்மாஸ்டர் அவர்தான் என்று பேசிக்கொண்டார்கள். அவர் தந்தையார் பிச்சை எடுக்கிறார் என்றால்...

......வேணும்னுட்டே, மகனை அவமானப்படுத்தறதுக்குன்னுட்டே..''

......கண்ணு வேற தெரியலை.''

......கண்ணெல்லாம் நன்னாத் தெரியறது. தன்மேல சிம்பதியை வரவழைச்சுக்க, கண் தெரியாத மாதிரி பாடசாலைப் பையனை வெச்சுண்டு குச்சியைப் பிடிச்சுண்டு போறார்.''

......என்ன ப்ராப்ளம் அவருக்கு?''

......வரார். கேட்டுப் பாரேன்.''

இவ்வாறு பேசிக்கொண்டிருக்கும் போது அவரே கடைக்கு வந்து பெஞ்ச்சில் உட்கார்ந்தார். அவருடன் கொஞ்சம் ஈரம் காயாத வேஷ்டியின் நாற்றமும் வந்தது. எதையோ வாயிலே மென்றுகொண்டிருந்தார். கிட்டப் பார்க்கையில் ஆரோக்கிய மாகத்தான் இருந்தார். நல்ல மூங்கில் கம்பு. அதைப் பையன் ஒரு ஓரத்தில் வைத்துவிட்டு நின்றுகொண்டிருக்க...

......ஓய்! லைப்பாய், ரெக்சோனான்னு சோப்பு ஏதாவது போட்டுக் குளிக்கிறதுதானே? கிட்ட வந்தாலே கத்தாழை நாத்தம்!''

......மாட்டுப்பொண்ணு எங்கடா சோப்பு கொடுக்கறா? ஒரு அண்டா தண்ணிகூட வெக்கமாட்டேங்கறா ரங்கு.''

......ஜி.பி–கிட்ட சொல்றதுதானே?''

......அவனா? பொண்டாட்டிதாசன்..! தொச்சு, அது என்னடா சாக்லெட்டு?''

......பட்டை சாக்லெட் தாத்தா.''

......அது எனக்கு ஒண்ணு இவனுக்கு ஒண்ணு கொடு! ரங்கநாதா..!'' என்று பெஞ்ச்சில் உட்கார்ந்து, '' தீர்த்தம் இருக்குமா? என்ன வெயில்.. என்ன வெயில்!''

ரங்கு சாக்லெட் எடுத்துத் தர, மடியிலிருந்து அஞ்சு ரூபாய் நோட்டை எடுத்துக் கொடுத்தார்.

......நீ யாரு... கோதை பேரன்தானே?'' என்றார் என்னைப் பார்த்து.

......ஆமாம் மாமா!''

......நீ ஏர்போர்ஸ்ல இருக்கியா?''

......ஏர்போர்ட்! மாமா, எதுக்காக இந்த வெயில்ல அலையறீங்க? வெயில் தாழ வீதிப் பிரதட்சணம் போகக்கூடாதா?''

......பாரு, வைஷ்ணவனா பொறந்தா பஞ்ச சம்ஸ்காரங்கள்னு அஞ்சு காரியங்கள் செய்யணும். அதான் ஐயங்கார். ஊர்த்வ புண்ட்ரம், சமாஸ்ரணம், திருவாராதனம், ஆசார்யன்கிட்ட உபதேசம் கேக்கறது, பரன்யாசம் வாங்கிண்டப்றம் உஞ்ச விருத்தி. பிச்சைபோடற அரிசியைத் தான் சாதம் வெச்சு சாப்பிடணும்! ''

......மாமா, அதெல்லாம் வசதியில்லாத வாளுக்கு!''

......இல்லை. வைஷ்ணவனா பொறந்த எல்லாருக்கும். உனக்கு, எனக்கு... அந்த நாராயணனே மகாபலிகிட்ட யாசகம் போனான்.''

......நீங்க இப்படித் தெருவில போறது அந்தக் கடமையை நிறைவேத்தறதுக் காகவா?''

......ஆமா, வேறென்ன..?''

......உங்க ஃபேமிலியில அவாளுக்கு சங்கடமா இருக்காதோ?''

......எதுக்குச் சங்கடப்படணும்? எதுக்குங்கறேன்?''

......இல்லை மாமா... உங்க சன் பெரிய கணக்கு வாத்தியார். ஹெட்மாஸ்டர் ஆகப் போறார். நேஷனல் அவார்டெல்லாம் வாங்கினவர்.''

......அதனால?''

......மத்தவாள்ளாம் என்ன நினைச்சுப்பா? தோப்பனாரை சரியா வெச்சுக்காம தெருவில யாசகம் பண்ண அனுப்பிச்சுட்டார் பாரு, இவர் என்ன வாத்தியார்னு தானே நினைச்சுப்பா?''

......நினைக்கத்தான் நினைச்சுப்பா. அதுக்கு நான் என்ன பண்ண முடியும்?''

ரங்கு சில சமயம் பட்டென்று போட்டு உடைத்துவிடுவான்.

......ஓய்... உமக்கு மாட்டுப் பெண்ணோட சண்டை. ஜி.பி. அவ பேச்சைக் கேட்டுக்கறார். அந்தக் கோபத்தைத்தான் நீங்க இப்படி அவரை அவமானப்படுத்திக் காட்டறீர்னு ஊர் உலகமெல்லாம் பேசிக்கிறது. உஞ்சவிருத்தி குஞ்ச விருத்தியெல்லாம் சால்ஜாப்பு!''

......சரி, அப்படியே பேசிக்கிறான்னா நீ என்ன செய்யணும்?''

அவர் ‘நீ’ என்று அழைத்தது ரங்குவை அல்ல. அங்கு இல்லாத தன் மகன் ஜி.பி–யை. ''நீ என்ன செய்திருக்கணும்? ‘அப்பா, நீங்க சொல்றதிலயும் நியாயம் இருக்கு. கொஞ்சம் தழைஞ்சு போங்கப்பா. நானும் அவளைத் தூக்கி எறிஞ்சு பேசாம இருக்கச் சொல்றேன்’னு சமாதானமா போகலாம் இல்லையோ..? எப்ப பார்த்தாலும் ‘அவ சொல்றதுதான் ரைட்டு, அப்பா... வாயை மூடுங்கோ’னு அதட்டினா எனக்கு எப்படி இருக்கும்..?''

......தனியா இருந்து பாருமேன்.''

......அதைத்தான் யோசிச்சிண்டிருக்கேன்.''

......இப்ப வீட்ல சாப்பிடறதில்லையா?''

……ரெண்டு தளிகை. எனக்கு உண்டான ஒரு மெந்தியக் குழம்பு, அப்பளத்தை நானே பண்ணிக்கறேன். ஒரு நெய் கிடையாது, கறமுது கிடையாது, தயிர் கிடையாது. மோர்தான். ஓட்டல் சாப்பாடு ஒத்துக்கலையே ரங்கா! பேதியாறது. அவா என்னவோ சாப்ட்டுட்டுப் போகட்டும். எனக்கு?''

……பிள்ளை?''

……அவனோட பேசியே ஒரு மாசம் ஆச்சு, ஒரே ஆத்துல இருந்துண்டு.''

……இதெல்லாம் சரி, உஞ்சவிருத்தி எப்டி உடம்புக்கு ஆறது உமக்கு? ரேஷன் அரிசியும் புழுங்கரிசியும் கைக்குத்தலும் கலந்திருக்குமே?''

……ஏதோ ரங்கநாதன் கிருபையில கல்லையும் ஜீரணிக்கிறது இந்த வயிறு. ஓடிண்டிருக்கு வண்டி.. இன்னும் எத்தனை நாள்... பார்க்கலாம். நான் செத்துப் போனேன்னா இந்தப் பாடசாலைப் பையன்தான் எனக்குக் கொள்ளி போடணும், கேட்டுக்கோ ரங்கு.''

……நீர் எங்கே செத்துப் போவீர்? இருக்கறவாளை சாகடிச்சுட்டுத் தான் போவீர். ஆயுசு கெட்டி உமக்கு!''

அவர் மறுபடி வீதி பிரதட்சிணத் துக்குப் புறப்பட, ''ஸ்ட்ரேஞ்ச்... வெரி ஸ்ட்ரேஞ்ச்'' என்றேன்.

ஹைஸ்கூல் எப்படி நடக்கிறது என்று... என் கிளாஸ்மேட்தான் கரெஸ்பாண் டெண்டாக இருந்தான், அவனை விசாரிக்கப் போயிருந்தபோது ஜி.பி-யைச் சந்தித்தேன். பொதுவாக மேத்ஸில் மல்ட்டிப்பிள் சாய்ஸ் கேள்விகள் வந்து தரமே போய்விட்டதாகச் சொன்னார். அவரேதான் ஆரம்பித்தார்...

……அப்பாவைப் பாத்தியோ..?''

……பாத்தேன் சார்.''

……என்ன பிடிவாதம் பாத்தியா?''

……அவர் சொல்றதைப் பார்த்தா அவருக்குச் சோறு தண்ணி கூட சரியா கொடுக்கறதில்லைன்னு...''

……அப்படியா சொன்னார்? ஒரு நா எங்காத்துக்கு வந்து மாமியை சந்திச்சுக் கேட்டுப்பாரு. என் அப்பாதான்... இல்லேங் கலை. ஆனா, அவர் கார்த்தாலை எழுந்திருக்கற திலிருந்து பண்ற அட்ட காசம்... எனக்கு நாலும் பொண்ணு. நாலும் நன்னாப் படிக்கறதுகள். அதுகளைப் படிக்க விடாம சத்தமா பாராயணம் பண்ணிண்டு, எல்லா ரையும் கண்டார... வல்லாரன்னு திட்டிண்டு, கோமணத்தோட புழக்கடைல அலைஞ்சுண்டு...''

……தனி வீடு பாத்துக் கொடுத்துர்றதுதானே?''

……போகமாட்டேங்கறாரே! 'என் வீடு, நான்தான் இருப்பேன்'கறார்!''

……சரி, நீங்க போய்டறதுதானே?''

……யோசிச்சிண்டிருக்கேன். வாடகை கொடுத்து மாளுமா?''

……அவர்கிட்ட பணம் இருக்கில்லே?''

……இருக்கு. என்ன வெச்சிருக்கார்னு காட்டமாட்டார். வக்கீலைக் கூப்ட்டு நாலு தடவை வில்லை மாத்தி மாத்தி எழுதிட் டார். சீரங்கம்னு ஒரு பேத்தி மேல கொஞ்சம் பிரியம். அதுங் கிட்ட எதோ சொல்லிண்டிருக்கார்... 'உங்க யாருக்குமே நன்னி கிடையாது. தொச்சுக்குத்தான் எல்லாம்னு உங்கம்மா கிட்ட சொல்லிடு...' ''

……தொச்சுங்கறது...''

……பாடசாலைப் பையன். அவரை கார்த் தால கம்பு பிடிச்சு அழைச்சுண்டு போறானே அவன். கேக்கறதுக்கு நன்னாவா இருக்கு? எதுக்குக் கிழத்துக்கு நான் சிசுருஷை பண்ண ணும்கறா என்

ஆம்டையா! நான்தான் அவளை சமாதானப்படுத்தி வெக்கறேன்... 'அப்படியெல் லாம் செய்ய மாட்டார். கோபத்தில ஏதோ சொல் றார்'னு. அவ சொல்றது நியாயம்தானே?''

......தானே தளிப்பண்றதா...''

......அதெல்லாம் வெட்டிப்பேச்சு! ஆடிக் கொரு தடவை அமாவாசைக்கு ஒரு தடவை தளிப்பண்ற உள்ளை மாடு கன்னுபோட்ட எடம் மாதிரி பண்ணிட்டுப் போவார். என் அப்பாவா இருந்தாலும், இந்த மாதிரி ஒரு பிடிவாதம் புடிச்ச கிழவனை நான் பாத்ததில்லை. போய்த் தொலைஞ்சாலும் பரவாயில்லைன்னு சில சமயம் அவ்வளவு வெறுப்பேத்தறார்.''

......அவருக்கு என்ன வேணுமாம்? எதாவது மனசில குறை வெச்சுண்டு இருக்கலாம் ஒரு இன்சொல், ஒரு பரிவு... அல்லது, 'தாத்தா எப்டி இருக்கே?'னு பேத்திகள் கேட்டாலே போறுமா இருக்கலாம். உங்க மனைவியும் 'அப்பா, எப்டி இருக்கீங்க? கண்ணுக்கு மருந்து போடட்டுமா'னு எதாவது கேக்கலாம்.''

......அதெல்லாம் ஒரு புண்ணாக்கும் இல்லை. நீ வேணா சீதாகூட பேசிப்பாரு. நான் சொன்னது பாதிதான். அவ ஆங்கிள்ள பார்த்தா கதை ரொம்பக் கடுமையா இருக்கும். டெல்லிக்குப் போறதுக்கு முன்னாடி ஒரு தடவை சாப்பிட வா, எங்காத்துக்கு!''

போயிருந்தேன். நான்கு பெண்கள் பதினைந்து, பதின்மூன்று, பத்து, எட்டு என்று அலைந்தன. எனக்கு முன்னால் ஸ்டூல் போட்டு தீர்த்தம் எல்லாம் பதவி சாகக் கொண்டுவந்து கொடுத்தார்கள். எனக்காக மாமி ஜவ்வரிசிப் பாயசம் பண்ணியிருந்தாள். சமையல் எல்லாம் சூப்பராக இருந்தது.

நான் சென்றபோது, கிழவர் வாசல் திண்ணையில் காலை அகட்டி உட்கார்ந்து கொண்டு பனை விசிறியால் கீழே விசிறிக் கொண்டிருந்தார். நெற்றி சுருங்கி விரோதமாகப் பார்த்துக்கொண்டிருந்தார். ''இருக்கறவனுக்கு ஒரு வேப்பம்பூ சாத்துமது கிடையாது. வரவா போற வாளுக்கெல்லாம் பால்பாயசம். கேக் கறவா கிடையாது இந்தாத்துல'' என்றார்.

......வாங்களேன் மாமா... உங்காம்தானே? வாங்கோ, பாயசம் சாப்டலாம்'' என்றேன்.

......இந்தாத்திலயா? ஒரு திருஸ்தம் கூட எடுத்துக்கமாட்டேன்.''

வாத்தியார் ஜி.பி-யின் மனைவி வெளிப்படையாகப் பேசினாள். ''எவ்வளவு தூரம் பொறுத்துக்கறது? ' பொறுத்துப் போ'னு இவர் பாட்டுக்கு சொல்லிட்டுப் பள்ளிக் கூடம் போய்டறார். இருபத்துநாலு மணி நேரமும் இவர் கூட மல்லுக் கட்ட வேண்டியிருக்கு. ரெண்டு பொண் வயசுக்கு வந்துட்டா. அவா முன்னாலயே கோமணத்தை அவுத்துக் கட்டிக்கறேர். ரெங்கராஜுவை கூப்ட்டு திண்ணைல உக்காந்துண்டு சர்வாங்க க்ஷவரம் பண்ணிக்கறேர். சாக்லெட்டு, பப்பர்மிட்டுனு வாங்கி ஒளிச்சு வெச்சுக்கறேர். பாட சாலைப் பையன்களுக்குக் கொடுத்தாலும் கொடுப்பேர்... பேத்திகளுக்குக் கொடுக்க மாட்டேர். அதுகளைப் படிக்க வெக்கறதே அவருக்குப் பிடிக்கலை. என்னைக் கண்டா ஆகவே ஆகலை...''

......இதுக்கெல்லாம் ஆதாரமா ஒரு சம்பவம் அல்லது காரணம் இருக்கணும் மாமி.''

......இருக்கு. அதைச் சொல்லிட்டுத் தான் ரசாபாசமாய்டுத்து! எங்காத்தில எனக்கு நிறைய செஞ்சிருந்தா. அதை அவர் அலமாரில வெச்சுப் பூட்டியிருந்தார். மாமியார் போறவரைக்கும் அதை நான் பார்த்தேன். பண்டிகை நாளில் என்னை எடுத்துப் போட்டுக்கச் சொல்வா. மாமியார் தங்கமான மனுஷி. அவர் போனதும், இது ஏதோ தங்கை பொண்ணு கல்யாணத்துக்கு எடுத்துக் கொடுத் துடுத்து போல! பாலிஷ் போட்டு வெள்ளிப் பாத்திரத் தையெல்லாம் கொடுத்திருக் கேர். போனாப் போறது, சொல்லிருக்கலாமில்லையா? ரங்கநாதன் கிருபை இவரும் சம்பாதிக்கிறேர். ஒரே ஒரு தடவை எச்சுமிக்கு தோடு செஞ்சு போடலாம். 'அப்பா, அம்மா என் நகையெல்லாம் எங்க வெச்சிருக்கா?'னு கேட்டதுக்கு, '' நகையா... உன்னை எதிர்ஜாமீன் இல்லாம இலவசமா கல்யாணம் பண்ணிண்டோம். உங்காத்துல உனக்கு என்ன போட்டா? உங்கப்பன் ஏமாத்திட்டான்'னார்.

எனக்கே தெரியும்... எனக்கு எத்தனை கேஷா கொடுத்தா, வைர மோதரத்துக்கு, பட்டு வேஷ்டிக்குன்னு... எத்தனை நகை போட்டான்னுட்டு. அதை எடுத்துச் சொன்னப்ப எல்லாம் கவரிங்னார். 'இதை அப்பவே சொல்லியிருக்கறதுதானே?'ன்னேன். இவ்வளவுதாம்பா கேட்டேன். அதிலேர்ந்து என் மேலயும் என் பெண்கள் மேலயும் வெறுப்புன்னா வெறுப்பு அப்படிப்பட்ட வெறுப்பு. நின்னா குத்தம்.. உக்காந்தா குத்தம்...''

இந்தச் சம்பாஷணை முழுவதும் அவருக்குக் கேட்டிருக்கவேண்டும்.

திண்ணையிலிருந்து சத்தம் போட்டார்... ''எல்லாத்தையும் சொன்னியே, உன் நகை அத்தனையும் சப்ஜாடா நான் திருப்பித் தந்ததைச் சொன்னியா?''

இவள் ''மொத்தத்தில கால்பாகம் கூடத் திரும்ப வரலைப்பா. ரெட்டை வடம் சங்கிலி என்ன ஆச்சு, பச்சைக்கல் தோடு என்னாச்சு, பேசரி என்னாச்சு, ஒட்டியாணம், நாககொத்து என்ன ஆச்சு, வங்கி என்னாச்சு..?'' என்றாள்.

......பச்சைப்பொய். உங்களுக்கெல்லாம் என் கெட்ட குணம் மட்டும் தான் தெரியும். நல்ல குணம் எதும் கண்ணுக்கே தெரியாது.''

இவள் சன்னமாக ''நல்லது எதாவது இருந்தா சொல்லுங்கப்பா'' எனறாள்.

நான் இந்தச் சண்டை ஓயாது என்று புறப்பட்டு வந்துவிட்டேன். என் சமாதான முயற்சிகள் அத்தோடு முடிந்தன.

அடுத்த வாரம், புறக்கடையில் பாசி வழுக்கி விழுந்துவிட்டார் கிழவர். தொடை எலும்பும் இடுப் பிலும் முறிந்துபோய் ஜி.பி. அவரை புத்தூருக்கு அழைத்துப் போக, அங்கே இன்னமும் சீரியஸாகி, அப்புறம் தில்லைநகரில் அவரை அட்மிட் பண்ணி, மாற்றி மாற்றி வாத்தியாரும் மாமியும் பதினைந்து தினம் அவருக்கு வேளா வேளைக்கு சாப்பாடு எடுத்துக் கொண்டு போய்... ரொம்பக் கஷ்டப்பட்டுத்தான் நான் ஊருக்குக் கிளம்பும் முதல் நாள்தான் இறந்து போனார்.

இத்தனைப் பாடுபட்டதுக்கு ஜி.பி–க்கோ மனைவிக்கோ பேத்திகளுக்கோ எந்தவிதப் பயனும் இல்லை. சொத்து முழுவதையும் தொச்சு என்கிற துரைசாமியின் பேரில் எழுதி வைத்துவிட்டு, அவன் மேஜராகும் வரை – பதினெட்டு வயசு வரும் வரையில் வக்கீலை அந்தச் சொத்துக்கு கார்டியனாகப் போட்டு பதினெட்டாம் வயதில் அந்தச் சொத்து அவன் படிப்புக்கும் பராமரிப்புக்கும் போகவேண்டும் என்று எழுதி வைத்திருந்தார்.

பாடி எடுக்குமுன் துக்கம் விசாரிக்க அவர் வீட்டுக்குப் போய் திண்ணையில் சற்று மௌனமாக உட்கார்ந்திருந்தேன். உள்ளே பேத்தி ஒருத்தி மட்டும் 'தாத்தாஆஆஆ...' என்று அழுது கொண்டிருந்தது. உஞ்ச விருத்திக்கு அழைத்துச் சென்ற பாடசாலைப் பையன் ''மாமா, நாளைலருந்து வரவேண்டாமா? வேற எதாவது ஒத்தாசையா இருக் கேனே!'' என்றான். ''இந்த ஆமே உன்னுதுரா'' என்றார் ஜி.பி. விசும் பலுடன். அவனுக்குப் புரியவில்லை. மாமிக்கு ஆத்து ஆத்துப் போயிற்று. ''என்ன பாவம் பண்ணோம்னு இந்தத் தண்டனை கொடுத் துட்டுப் போனார் கிழவனார். எங்கப் பாம்மா போட்ட நகை எங்கேனு கேட்டது ஒரு பெரிய தப்பா? அதுக்கு இத்தனை பெரிய தண்டனையா?''

ரங்கு ஜி.பி-யிடம் ''ஓய்... இது பிதுரார்ஜித சொத்து. அதை எழுதி வெக்க கிழத்துக்கு உரிமையே கிடையாது. கிறுக்குப் புடிச்சாப்ல இப்படியெல்லாம் வில் எழுதினா கோர்ட்டில ஒத்துக்க மாட்டா. சண்டை போட்டு வாங்கிடலாம்.''

ஜி.பி-தான் ''ரங்கு, நமக்கு எது உண்டு, எது இல்லைன்னு தீர்மானிக்கிறதெல்லாம் ஸ்ரீரங்கநாதன்தான்'' என்றார்.

அதன்பின் நான் அலகாபாத் போய்விட்டு கல்கத்தா, டெல்லி, அல்மோரா, பதான்கோட், கொலம்போ என்று சுற்றிவிட்டு ஆறு வருஷம் கழித்துதான் ஸ்ரீரங்கம் திரும்ப முடிந்தது. ரங்குவை முதல் காரியமாக விசாரித்தேன்... ''ஜி.பி. வாத்தியார் என்ன ஆனார் ரங்கு?''

......ஏன் கேக்கறே... ஸ்கூல்ல புதுசா ஹெட்மாஸ்டரை நியமனம் பண்ணிட்டா. ரெண்டு பேருக்கும் ஆகலை. நோட்ஸ் போடக் கூடாதுன்னு தடை பண்ணிட்டா. கோவிச்சுண்டு ரிஸைன் பண்ணிட்டேர். மணச்சநல்லூர்ல போய்ச் சேர்ந்தேர். அங்கயும் சரிப்பட்டு வரலை. சம்பளம் சரியா வரலை. அதுக்கப்புறம் நோட்ஸ் போட்டு விக்கறதும் பாழாப் போச்சு. இவர் போட்ட நோட்ஸையே காப்பி அடிச்சு இன்னொருத்தன் போட்டு அரை விலைக்கு வித்தான். அவன்மேல கேஸ் போடறேன்னு வக்கீல்கள்ட்ட காசு நிறைய விட்டேர். ஏறக்குறைய பாப்பர் ஆறநிலைக்கு வந்துட்டேர். சொத்தும் இல்லை. பத்ரிக்கு போறேன்னு காலை ஒடிச்சுண்டேர். மனசொடிஞ்சு போய்ட்டேர். அப்றம்...'' என்று ரங்கு பேச்சை நிறுத்தினான்.

நான் சன்னமாக, ''எதாவது விபரீதமா ரங்கு?'' என்றேன்.

......அதை ஏன் கேக்கறே... கடைசியா ரங்கநாதன் கண்ணைத் திறந்துட்டார்.

......எப்படி?''

......மூத்த பொண்ணு எச்சுமி இருக்கு பாரு, தொச்சுவைக் கல்யாணம் பண்ணிண்டு டுத்து. எல்லாம் சரியாப் போய்டுத்து. உஞ்சவிருத்தி தேசிகாச்சாரி சொத்து மறுபடி ஃபேமிலிக்கே வந்துடுத்து!''

......அந்தப் பையன் அதிகம் படிச்சிருந் தானா?''

......எட்டாம் கிளாஸ்க்கு மேல படிப்பு ஏறலை...''

......இந்தப் பொண்ணு?''

......எம்.சி.ஏ.''

நான் வியப்புடன் ''எப்படிக் கல்யாணம் பண்ணிக்க சம்மதிச்சது அந்தப் பொண்ணு... ஃபேமலிக்காக தியாகமா?''

......அதெல்லாம் இல்லை, காதல்!'' என்றான் ரங்கு.

---

# ஸ்ரீரங்கத்து தேவதைகள்

★ சுஜாதா

## என் முதல் தொலைக்காட்சி அனுபவம்!



ஸ்ரீரங்கத்துக்கு டெலிவிஷன் அம்பதுகளிலேயே வந்துவிட்டது என்று சொன்னால் நம்பமாட்டீர்கள்! தெற்கு உத்தர வீதியில் 'தி ரங்கநாதா ரேடியோ அண்ட் டெலிவிஷன் டிரெயினிங் இன்ஸ்டிடியூட்' என்ற போர்டு

திடீர் என்று தோன்றியது. ‘ப்ரொப்: அண்ணாசாமி ஸி அண் ஜி லண்டன்’ என்று அடி வரியில் இருந்தது. நான் அப்போது எம்.ஐ.டி–யில் எலெக்ட்ரானிக்ஸ் படித்துவிட்டு மூன்றாம் ஆண்டு கடைசி செமஸ்டரில் ப்ராஜெக்ட் படலத்தில் ஜாலியாக இருந்தேன்.

ரங்கு கடையில் இதுபற்றித் தீவிர சர்ச்சை நடந்தது. ‘‘இண்டியாவிலேயே டெலிவிஷன் கெடையாது. எப்டிரா ஸ்ரீரங்கத்தில் மட்டும் வரும்?’’

……வரும்ங்கறாரே! அண்ணாசாமி சொல்றார்... அமெரிக்காவில் காட்டறது நமக்கும் தெரியறதாம்.’’

……புளுகுடா. நீ என்னடா சொல்றே... எலெக்ட்ரானிக்ஸ் படிச்சிருக்கியே?’’

……சான்ஸே இல்லை!’’ என்றேன்.

……அவர் வந்தா கேட்டுருவமே.

பெரிய படிப்பெல்லாம் படிச்சிருக்காராமே... ஆள் எப்படி?’’

……சுமார் முப்பது வயசிருக்கும். லேசா தொந்தி முன்னேற்க வழுக்கை. சம்பா சம்பான்னு ஒரு பொண்ணு. சித்துப் பண்ணி வெச்சாப்பல இருக்குமே, நீங்கள்ளாம் பயங்கரமா சைட் அடிச்சிண்டிருந்தீங்களே... அவளைக் கல்யாணம் பண்ணிண்டிருக்கார்’’ என்றான் ரங்கு.’’

……அமெரிக்கால படிச்சிருக்காராம். அதனால வயசு வித்தி யாசம் ஜாஸ்தியா இருந்தாலும் ஒத்துண்டிருக்கா.’’

……இதைவிட அநியாயம் உண்டா ரங்கு?’’ என்று தம்பு ஆத்துப் போனான். தம்பு ஒரு காலத்தில் சம்பாவைக் காதலித்தவன்.

ஒரு முறை தெற்கு வாசலுக்கு கோயில் வழியாகப் போகாமல் தெற்கு உத்தர வீதி வழியாகச் சென்றபோது, அந்த போர்டைப் பார்த்தேன். வாசலில் பையன்கள் கோடுகிழித்து வீதி கிரிக்கெட் ஆடிக் கொண்டிருந் தார்கள். பெரிய திண்ணையுள்ள அகலமான வீடு. போர்டு புதுசாக எழுதியிருந்தது. அதை வெளிச்சம் காட்ட பல்பெல் லாம் இருந்தது. நெற்றியில் எலுமிச்சை – பச்சைமிளகாய் வைத்துக் கட்டியிருந்தது.

……அது என்னடா ஸி அண்ட் ஜி? ஓமியோபதியா?’’ என்றான் ரங்கு.

……இல்லை ரங்கு. சிட்டி அண்ட் கில்ட்ஸ்னு லண்டன்ல ஒரு இன்ஸ்டிடியூட் நடத்தற பரீட்சை. ஏ.எம்.ஐ.இ. மாதிரி இதும் ஒரு பரீட்சை. பாஸ் பண்ணியிருக்கலாம்.’’

……அதில் டெலிவிஷன் எல்லாம் கத்துத் தருவாளோ?’’

……இருக்கலாம். அதனால அப்படி போர்டு போட்டுண்டு இருக்கலாம். ஆனா, ஸ்ரீரங்கத்தில் டெலிவிஷன் கிடையாது; தெரியாது!’’

அவரே ரங்கு கடைக்கு ஒருமுறை வந்திருந்தார். ‘‘ரங்கு, இன்சுலேஷன் டேப் இருக்குமா?’’

……இல்லை. அது கறுப்பா சேப்பான்னு கூட தெரியாது!’’

……கறுப்பு. இதெல்லாம் கடைன்னா வாங்கி வெச்சுக் கணும்.’’

……எப்படி இருக்கும்?’’

……தொட்டா ஒரு பக்கம் ஒட்டிக்கிறா மாதிரி இருக்கும். ஒயருக்கு கனெக்ஷன் கொடுக்கறப்ப, ஷாக் அடிக்காம இருக்க டேப் சுத்தணும்.’’

ரங்கு தன் தொழில்நுட்ப அறிவை அதற்குமேல் விருத்தி செய்ய விரும்பவில்லை.

……அண்ணாசாமி... என்னமோ சொல்றா, உங்காத்தில டி.வி–யெல்லாம் இருக்காமே?’’

......ஒரு தடவை வந்து பாரேன்...''

......நான் எங்க கடையை விட்டுட்டு வரது!''

......ஆமா, வியாபாரம் அப்படியே தட்டுக்கெட்டுப் போறது. ஈ ஓட்டிண்டிருக்கான். போய்ப் பார்த்துட்டுத்தான் வரலாமே!'' என்றான் தம்பு. அவனுக்கு சம்பாவை பார்க்க வேண்டும்.

......சம்பா சௌக்கியமா மாமா?''

......டேய்! மாமா இல்லைடா அவர். சரி அண்ணா வரேன். அதென்னதான் சமாசாரம்னு புரியறா மாதிரி சொல்லும். என்னவோ பேசிக்கிறா... அம்மணக்குண்டி பொம்மையெல்லாம் தெரியறதாம்!''

......சேச்சே... அதெல்லாம் இல்லை!''

......பின்ன என்னதான் வெச்சிருக்கீர்?''

......எதிர்காலத்தில இண்டியா வுக்கு டெலிவிஷன் வரத்தான் போறது. இப்பவே டெல்லில பரீட்சார்த்தமா ஆரம்பிச்சிருக்கா. அது நாடு முழுக்கப் பரவினதும் டி.வி. ரிப்பேர் செய்ய நெறைய பேர் தேவைப்படுவா. அதை எதிர் கொள்ள நம் இளைஞர்களைத் தயார் பண்ணப் போறேன். இப்பவே சேந்தா சலுகைல கத்துத் தருவேன்.''

......எத்தனை?'' என்றான் ரங்கு.

......அவாவா வசதிக்கு ஏத்தாப்பல.''

......இதானே வேணாங்கறது. சில்றை எத்தனை... கரெக்டா சொல்லுமேன்.''

......ஏழையா இருந்தா இலவசமா கூட சொல்லித் தருவேன். முதல் பாடம் ஃபண்டமெண்டல்ஸ் ஆஃப் டெலிவிஷன், எல்லாருக்கும் இலவசம்!''

......பொம்மை தெரியுமா?''

......கட்டாயம்.''

ரங்கு என்னைப் பார்த்தான். ''நான்கூட சேரலாம் போலி ருக்கே. தம்பு சேர்றியா?''

......ஒரு நாள் போய்த்தான் பார்க்கணும்டா!'' என்றான். ''உன்னைக் கேட்டா டி.வி. கிடையாதுங்கறே?''

எம்.ஐ.டி–யில் மூன்றாம் வருஷத்தில் எனக்கு பாடத்தில் டி.வி. உண்டு. அது வி.எச்.எஃப். அலைவரிசையைப் பயன்படுத்துவதும் லைன்ஆஃப் சைட் பற்றியும் படித்திருக்கிறேன். அதை ரங்குவுக்கு விவரிக்க முற்பட்டேன்.

......எல்லாம் சரி. நீ நிஜ டி.வி. பார்த்திருக்கியா?''

நிஜ டி.வி-யை ஒரு தடவைதான். சென்னைப் பல்கலைக்கழகத்தின் பொன்விழாக் கண்காட்சியின்போது பிலிப்ஸ்காரார்கள் கிண்டி இன்ஜினீயரிங் காலேஜில் ஒரு க்ளோஸ் சர்க்யூட் டி.வி. வைத்திருந்தார்கள். ஒரு ரூமில் காமிரா, மறு ரூமில் ரிசீவர் வைத்திருந் தார்கள். வந்திருந்த பெண்களையெல் லாம் காட்டினார்கள். கூட்டம் அலைமோதியது. ஒரு மணி நேரம் காத்திருந்ததால் திடுக்கிட்ட முகங்கள் தெரிந்தன.

ரங்குவுடன் தெற்கு உத்தர வீதிக்கு ஒரு நாள் சாயங்காலம் போயிருந்தேன். வாசலில் தெற்குச் சித்திரை வீதியுடன் பென்சில் மாட்ச் ஓடிக் கொண்டிருந் தது. நாங்கள் போனபோது பால்காரன் வந்து மடியில் தண்ணியடித்து பால் கறப்பதற்காக உருவிக் கொண்டிருந் தான். இடைவேளை விட்டிருந்தார்கள்.

அண்ணாசாமி, ''வாங்க வாங்க... சம்பா காபி போடு!'' என்று வரவேற் றார். உத்தர வீதிக்கு சாதாரணமாக நாங்கள் அதிகம் போகமாட்டோம். அவை எல்லாம் எங்களுக்கு அரைவீதிகள். ஒரு பக்கம்தான் வீடு. எதிர்ப்பக்கம் கோயிலின் மதில். முள்ளுச் செடியாக இருக்கும். எத்தனைதான்

சொன்னாலும் யாராவது ஒருவர் அல்பசங்க்யைக்கு ஒதுங்கிவிடுவார்கள். மேலும் அந்த நாட்களில் மதில் சிதில நிலையில் இருந்ததால், தலைமேல் விழுந்துவிடும் பயமும் இருந்தது. ஆனால், கிரிக்கெட்டுக்கு ஒரு சாரி இல்லாததால் ஏகாந்தமான இடம்.

......மாமா மண்டி போட்டுண்டு க்ளான்ஸ் பண்றப்ப மார்ல பட்டா எல்.பி. கொடுக்கலாமா மாமா?'' என்று என்னை ஒரு சிறுவன் வந்து கேட்டான்.

எனக்கு உடனே சொல்லத் தெரிய வில்லை. அண்ணா, ''வாங்க வாங்க'' என்று வரவேற்று, சலுகையாக பனியன் போட்டுக் கொண்டார். உள்ளே சென்றோம்.

......ஈயம் பூசறீங்களா என்ன?''

......இல்லை சால்டிரிங்'' என்றார்.

ஒரு ரேடியோ கவிழ்த்துப் பிரிக்கப்பட்டு, உள்ளே கசகச வென்று பார்ட்டுகளுடன் கிடந்தது. அதன் ஐ.எஃப். டிரான்ஸ்ஃபார்மரை ஒரு குட்டிப் பையன் பலகை மேல் நின்று சீண்டிக் கொண்டிருந் தான்.

என்னவோ சத்தங்கள் கேட்டன.

இந்த ஓரத்தில் நிர்வாணமாக ஒரு ஸ்பீக்கர் வைத்து, ரேடியோவின் பல பாகங்கள் பரவலாக இருக்க... விந்தையாக அதில் கரகரப்ரியாவில் ஒரு மாமி 'பக்கல நிலபடி' பாடிக் கொண்டிருந்தாள். 'ஆர்.எஃப். ஆம்ப்ளிஃபையர்' வெச்சா எல்லா ஸ்டேஷனும் கேக்கும்!'' என்றார் அண்ணா.

......எங்கய்யா உம் டெலி விஷன்?''

ஜமக்காளத்தால் மூடியிருந்த ஒரு வஸ்துவைக் காட்டினார். ''அதுக்குள்ள இருக்கு. பசங்க கிரிக்கெட் ஆடிண்டிருக்கான்... முடிக்கட்டும். பந்து அடிச்சா பிக்சர் டியூபு உடைஞ்சுடும்!''

......அதுல பொம்மை தெரியுமா?'' என்றான் ரங்கு.

......ஆமா.''

......என்ன புருடா விடறீர்?'' என்று என்னைப் பார்த்தான். ''ஏய் நீ பொம்மை வராதுன்னுதானே சொல்றே?''

......ஆமா...'' என்றேன்.

......டி.வி. ஸ்டேஷனே இல்லாம எப்டி ஓய் பொம்மை தெரியும்? இப்ப ரேடியோவுக்கு, ரேடியோ ஸ்டேஷன் வேணும். டி.வி-க்கு டி.வி. ஸ்டேஷன் வேணுமா, இல்லையா... நீ என்னடா சொல்றே?''

......நிச்சயம் வேணும். நான் படிச்சபடி நிச்சயம் வேணும்!'' என்றேன்.

அண்ணா என்னைப் புன்னகையுடன் பார்த்தார். ''அவ்வளவுதான் நீ படிச்சது. நீங்கள்ளாம் ஏட்டுச்சுரைக் காய். டெர்மன் போட்டிருக் கறதை அப்படியே நெட்ரு. நான் பிராக்டிக்கல். இந்த ரேடியோவைப் பார்த்த இல்லை... இது முழுக்க நானே அசெம்பிள் பண்ணது. டிரான்ஸ்ஃபார்மர் நானே சுத்தினது. டிராக்கிங், அலைன்மெண்ட், ட்யூனிங் எல்லாம் நான் பண்ணது. உன்னால முடியுமா சொல்லு! எங்கிட்ட ஹாம் லைசென்ஸ் இருக்கு.''

நான் பிடிவாதமாக, ''டி.வி. ஸ்டேஷன் இல்லாம டி.வி. தெரியாது!'' என்றேன்.

......அப்டின்னு நினைச்சிண்டிருக்கே. நீ கத்துக்க வேண்டியது நிறைய இருக்குப்பா.''

ரங்கு, ''ஓய் அவன் டி.வி. எல்லாம் படிச்சவன். எதுக்கு ஊரை ஏமாத்திண்டு, வாண்டுப் பசங்களுக்கெல்லாம் டி.வி. சொல்லித் தரேன்னு, ஒரொரு கிளாஸுக்கும் அஞ்சு ரூபா வாங்கறிராமே?''

......ரங்கு, நான் கொடுக்க வசதியுள்ள வாகிட்டதான் வாங்கறேன். என் கரிகுலம் பாரு முதல்ல. டி.வி.

ப்ரின்சிப் பிள். அப்புறம் பிராக்டிக்கல். சால்டரிங், பென்ச் வைஸ், கார்ப்பெண்டரி அப்புறம் காயில் சுத்தறது. பார்க் ரேடியோ, பஞ்சாயத்து ரேடியோவெல் லாம் ரிப்பேருக்கு இங்கதான் வரது.''

நான் பிடிவாதமாக ''டி.வி. ஸ்டேஷன் இல்லாம டி.வி. தெரியாது!'' என்றேன்.

......முதல்ல அது என்ன பெட்டி... காட்டும். பார்த்தா நெல்லு கொட்டற பீப்பா மாதிரி இருக்கு.''

அண்ணாசாமி மிகுந்த கோபத்துடன் ''அரைகுறையா படிச்சவா, சந்தேகப் படறவா, கேலி பண்றவாளுக்கெல்லாம் செட்டை காட்டமாட்டேன். ஒஸ்தி செட்டு இது. ஆர்.ஸி.ஏ. தெரியுமா?''

......காட்றதுக்கு எதும் இல்லைன்னு அர்த்தம்!''

......என்னவேணா நினைச்சுக்கோ.''

சம்பா எல்லோருக்கும் வெள்ளி தம்ளரில் காபி கொண்டுவந்து வைத்தாள்.

தம்பு, ''என்ன சம்பா சௌக்யமா?'' என்று வாத்சல்யமாக விசாரித்தான். ''பழசெல்லாம் ஞாபகமிருக்கா?'' அண்ணா அதை ரசிக்கவில்லை.

......சம்பா நீ உள்ளபோ!'' என்றார்.

சம்பா ஏறக்குறைய அவர் மகள் போல இருந்தாள்.

நாங்கள் வெளிவந்தபோது அந்த எல்.பி.டபிள்யூ. தீர்மானத்தில் மாட்ச் கலைக்கப்பட்டுவிட்டது.

தம்பு ஆத்து ஆத்துப் போனான். ''இந்த சம்பாவுக்கு நான் கொடுத்த லெட்டர் எல்லாம்... அவ போட்ட பதில் எல்லாம் காட்டினா ரசாபாசமாய்டும். போனாப் போறதுன்னு விட்டுக் கொடுத்தேன்'' என்றான்.

......சும்மார்றா! பழசெல்லாம் கிளறாதே.''

ஒரு காலத்தில் தம்புதான் சம்பாவைக் கல்யாணம் செய்து கொள்வதாக நிறையப் போக்குவரத்தெல்லாம் இருந்தது. அவளுக்கோ இவனுக்கோ செவ்வாய் தோஷம் என்று கல்யாணம் நின்றுவிட்டதாம். மேலும் தம்பு அவ்வளவு வசதி யுள்ளவன் இல்லை. ஒரு வருஷம் சன்யாசியாகப் போகிறதாக யோசித்துவிட்டு ஸ்ரீனிவாச நகரில் ஜெயலக்ஷ்மி என்ற அடக்கமான பெண்ணைக் கல்யாணம் செய்துகொண்டு விட்டான். அடுத்தடுத்து இரண்டு பெண் குழந்தைகள். இருந்திருந்தால் என்னைவிட ரெண்டு வயதுதான் மூத்தவன்.

......சில பேருக்கு அதிர்ஷ்டம்டா!'' என்றான் தம்பு பொதுப்படையாக. டி.வி. சர்ச்சை அத்துடன் ஓயவில்லை. அண்ணாசாமி கடைக்கு வரும்போதெல்லாம் தம்பு அவரைப் பரிகாசம் செய்துகொண்டிருந்தான்.

......என்ன அண்ணா... டி.வி. நன்னாத் தெரியறதா? அமெரிக்காகாரன் கப்பல் கார்ல போறதெல்லாம் தெரியறதாமே!''

அண்ணாசாமி, ''நம்பாதவாளுக்கு ஒண்ணும் தெரியாது. பகவான் மாதிரி அது. என்ன சொன்னாலும் நம்ப வைக்க முடியாது!'' என்றார்.

......மாடிபூரா ஏரியல் போட்டிருக் கீராமே... துணி உலத்தவா?''

......ஆமா யாகி அர்ரே. உங்களுக் கெல்லாம் சொன்னா புரியாது!'' என்று டெக்னாலஜியை முகத்தில் வீசினார்.

அவர்போனதும், ''யாகி அர்ரேன்னா என்னடா? என்ன புருடா விடறான்பாரு மனுஷன்!''

......இல்லை ரங்கு. அந்த மாதிரி ஒரு அர்ரே இருக்கு. சிக்னல் வீக்கா இருந்தா அதை அதும் பக்கம் திருப்பினா வாங்கிக்கும் – ஏரியல் மாதிரி.''

......அப்ப அவர் சொன்ன மாதிரி டி.வி. தெரியும்ங்கறே?''

......சான்ஸே இல்லை! சிக்னல் இருந்தாத்தானே?''

......அமெரிக்காகாரன் அனுப்பறது?''

......அதெல்லாம் இவ்வளவு தூரம் கடல் தாண்டி வராது ரங்கு'' என்றேன்.

ஒரு நாள் ராத்திரி பத்தரைக்கு ரங்குகடையில் மூணுபேர் அலமாரிக்குப் பின்னால் ஜிஞ்சர் அடித்துக் கொண்டிருந்தபோது கடைக் கதவை மூடும் சமயம் அண்ணாசாமி சைக்கிளில் வந்து இறங்கி, ''வாங்கடா எல்லாரும்!'' என்றார்.

......என்ன ஓய் பதற்றமாயிருக்கீர்? ஒரு ஜி.பி. அடிச்சுட்டுப் போமேன்'' என்றான் தம்பு.

......எல்லாரும் டி.வி. தெரியாது தெரியாதுன்னு பரிகாசம் பண்ணிங் களே... உடனே வாங்க எங்காத்துக்கு.''

......என்ன தெரியறதா?''

......அச்சுக் கொட்டினாப்பல தெரியாது. ஆனா, தெரியறது!''

......வாடா இன்ஜினீயர்!'' என்று என்னையும் விளித்தார். எனக்கு வியப்பாக இருந்தது. ''திஸ் இஸ் நாட் பாஸிபிள்'' என்றேன். அவர் வீட்டுக்குப் போனோம். மாடியில் எடுத்துக்கட்டி ஜன்னல் வழியாக சம்பா டார்ச்லைட்டை வைத்துக் கொண்டு மொட்டை மாடியில் நின்று கொண்டிருந்தாள் மாடிபூரா பரவியிருந்த அந்த ஏரியலை இவர் சொல்லச் சொல்ல மொத்தமாகத் திருப்பிக் கொண்டிருந்தாள்.

இங்கே கீழே கூடத்தில் ஒரு கறுப்பு – வெள்ளை டி.வி. இருந்தது அதில் மணல் ஓடிக் கொண்டிருந்தது.

......சம்பா டியர்... திருப்பு திருப்பு!'' என்றார்.

அவள் ''தெரியறதா... தெரியறதா?'' என்று கேட்டுக்கொண்டே மாடியில் ஏரியலைத் திருப்பினாள். ஒரு கணத்தின் பிரிவில் அந்தத் திரையில் ஒரு பிம்பம் தெரிந்தது. ஒரு பெண் பேசிக் கொண்டிருந்தாள். என்ன பாஷை தெரியவில்லை.

......நிறுத்து... நிறுத்து! அங்கதான் அங்கயேதான்'' என்று இங்கிருந்து சத்தம் போட்டார்.

......ரங்கு! இப்ப என்ன சொல்றே?''

......பஜ்னுதான் இருக்கு... ஆனா, மூஞ்சி தெரியறது.''

......டி.வி–யே வ்தெரியாதுன்னிங்களே... உங்க எக்ஸ்பர்ட் என்ன சொல்றார் இப்ப?'' என்று என்னைப் பார்த்துக் கண்ணடித்தார்.

நான், ''இப்போதைக்கு ஒண்ணும் சொல்றதுக்கில்லை எங்க புரொபசரைத்தான் கேக்கணும்'' என்றேன்.

......எதையும் இப்படி அலட்சியமா பேசப்படாது. இன்னம் அர்ரே எலிமெண்ட்ஸ் போட்டா நன்னாவே தெரியும். அதும் ராத்திரி ஆக ஆக... போகப் போக...''

மேலேயிருந்து சம்பா, ''போருமா... இன்னும் திருப்பணுமா?'' என்றாள்.

......சம்பா, போதும் கீழ வா! எல்லாருக்கும் பயத்தஞ்கஞ்சி கொடு'' என்று இவர் சொல்ல, மேலேயிருந்து தொபுக்கடீர் சப்தமும் ஐயோ சத்தமும் கேட்டது.

சம்பா எடுத்துக்கட்டிலிருந்து சுமார் பதினைந்து அடி விழுந்துவிட்டாள்.

அவளை கைத்தாங்கலாக நொண்டிக்கொண்டே அழைத்து வந்தோம். ''பார்த்து நடக்கக்கூடாதோ?''

என்றார். அவள் கால் சிவப்பாக இருந் தது. செமையாக வீங்கியிருந்தது. நிறைய வலித்திருக்கவேண்டும். தம்பு கண்ணீர் விட்டான்.

......என்ன ஓய்... எங்க ஊர் பொண்ண மாடியெல்லாம் ஏறவிட்டு பாடாப் படுத்தறீர். கொடுமைப் படு த்தறீர்!''

......உனக்கு என்னடா ஆச்சு?'' என்றார்.

......என்ன 'டா'வா? நாக்கை அடக்கிப் பேசும். எல்லா வண்டவாளத்தையும் வெளிலவிட்டா நாறிப்போய்டும்.''

......என்ன வண்டவாளம்... அவ என் பெண்டாட்டி. அவளை நான் என்ன வேணா செய்யச் சொல்வன். அதைக் கேக்க நீ யாரு?''

சம்பா, ''போருமே... போருமே...'' என்றாள்.

......நான் யார்றா? ரங்கு... சொல்றா நான் யாருன்னு!''

......தம்பு நீ வாடா! அப்றம் பேசலாம்.''

......இவர் கேக்கறதைப் பாரு! நான் யாரா...'' தம்பு, ரங்கு கடையில் ஜிஞ்சர்பரிஸ் போட்டிருந்தான். சுருதி ஏறியிருந்தான். நாக்கு தொளதொளத்து விட்டது.

......நான் யாரு... சொல்றன். இதே சம்பா, இதேசம்பா... எனக்கு மொத்தம் எத்தனை லெட்டர் எழுதிருக்கா தெரியுமா? காட்டட்டுமா... நான் எத்தனை எழுதிருக்கேன் தெரியுமா?''

அந்தக் கணத்தில் காலம் நின்று போகப் போகிறது என்றுதான் நான் எதிர்பார்த்தேன். இல்லை!

......எல்லா பைத்தியக்கார லெட்டரை யும் சம்பா கல்யாணத்துக்கு முன்னாடியே சொல்லிட்டா... காட்டிட்டா... போடா!'' என்றார்.

கடைசி செமஸ்டருக்கு எம்.ஐ.டி-க்கு சென்னைக்கு திரும்ப வந்தபோது பேராசிரியர் சோமயாஜுலுவை சந்தேகம் கேட்டேன். ஸ்ரீரங்கத்தில் அன்றிரவு டி.வி. தெரிந்தது எப்படி என்று கேட்டேன்.

அவர், ''அதில் ஒன்றும் ஆச்சரியம் இல்லை. டக்ட் (duct) ப்ராபகேஷன் என்று சில வேளை கடலின் இன்வர்ஷன் லேயர் இருக்கும்போது வேவ்கைடு மாதிரி ஃபார்ம் ஆகும் வி.எச்.எஃப். சிக்னல்கள் ஆயிரக் கணக்கான மைல்கள் கூட கடந்து வரும். அனாமலஸ் ப்ராப கேஷன் என்பார்கள். நீ பார்த்தது தெற்காசிய நாடுகளில் எதாவது ஒரு டி.வி-யாக இருக்கலாம்'' என்றார்.

ரங்கு இப்போதும் அதை ரங்கநாதன் கிருபை என்றுதான் சொல்கிறான்.

---

# ஸ்ரீரங்கத்து தேவதைகள்

★ சுஜாதா

## வேதாந்தம்



*பாரில் நின் பாதமல்லால் பற்றிலேன் பரம மூர்த்தி*
*– தொண்டரடிப்பொடி*

ஒரு காலகட்டத்தில் மத்தியிலும் மாநிலத்திலும் காங்கிரஸ் ஆட்சியில் (சாஸ்திரி, பக்தவத்சலம்) இருக்கும்போது இந்தி எதிர்ப்புப் போராட்டம் நடத்தப்பட்டது தமிழகத்தில். துப்பாக்கிச் சூடு, கடையடைப்பு, ராணுவம் வந்து ரகளை எல்லாம் இருந்தது. ஸ்ரீரங்கத்திலும் இந்தி எதிர்ப்புப் போராட்டத்தின் எதிரொலிகள் இருந்தன. கீழ உத்தர வீதியில் இருந்த நரசிம்மாச்சாரி என்னும் இந்தி வாத்தியாருக்கு வேலை போய்விட்டது. ரங்கு அவருக்கு ''ஓய் இனிமே 'லட்கா, லட்கி, யஹ் கலம் ஹை, தவாத் ஹை'ன்னு எதாவது குதிரை ஒட்டினீர்... கையை ஒடிச்சுருவா. பேசாம கொஞ்ச நாளைக்கு தொன்னை தச்சுண்டு, வாழைப்பட்டை உரிச்சுண்டு இரும். கலகமெல்லாம் அடங்கறவரைக்கும் லீவு எடுத்துண்டு ஆத்திலயே இரும்!'' என்று அவருக்கு அறிவுரை வழங்கினான்.

......என்னடா ரங்கு! ஜீவனத்துக்கு எங்கே போவேன்?'' என்று அழாக் குறையாகக் கேட்டார். நரசிம்மாச்சாரிக்கு இந்தி தவிர வேறு எதுவும் சொல்லித்தரத் தெரியாது. இவருக்கு முன் இருந்த பாச்சா இந்தி எதிர்ப்பை எதிர்பார்த்துச் சட்டென்று மேத்தமட்டிக்ஸுக்கு மாற்றிக் கொண்டார். சாரியை வாத்தியாராக வைத்துக்கொள்வதே சலுகைதான் என்று ஹெட்மாஸ்டர் சொன்னாராம். ரொம்ப ரொம்பக் கிட்டப்பார்வை. பகலில் பசுமாடு தெரியாது. பூதக்கண்ணாடி போன்ற சோடாபுட்டிக் கண்ணாடி போட்டும் புத்தகங்களை முகத்துடன் தொட்டுக் கொண்டுதான் படிக்க முடியும். பையன்கள் விஷமம் செய்தால் பொதுவாக அந்த திக்கைப் பார்த்து அதட்டுவார். யார் என்று அவருக்குத் தெரியவே தெரியாது. ''அங்க என்னடா சத்தம்?'' என்று மட்டும் கேட்பார். விஷமம் செய்யும் மாணவர் களைக் கிட்டத்தில் வந்தால்தான் அடிக்க முடியும். அவர்கள் சற்று துரத்தில் நின்றுகொண்டே சமாளிப்பார்கள். வீட்டில் கஷ்ட ஜீவனம்.

நான் அப்போது சிவில் ஏவியேஷனில் ஏ.டி.சி. ஆபீஸராக சென்னை மீனம்பாக்கத்தில் சேர்ந்திருந்தேன். தற்காலிகமாகத் திருச்சியில் போஸ்டிங். ஸ்ரீரங்கத்திலிருந்து செம்பட்டுக்கு தினம் ஜீப்பில் செல்வேன்.

இந்தி எதிர்ப்பால் பள்ளிகளுக்கு காலவரையறையின்றி லீவு விட்டிருந்தார்கள். இந்தி வாத்தியாரை வேலை நீக்கம் செய்தாகி விட்டது என்று நோட்டீஸ் போர்டில் போட வேண்டியிருந்தது. 'இல்லையேல், பள்ளி கொளுத்தப்படும். எச்சரிக்கை!' என்று போராட்டக்குழு அறிவித்திருந்தது. இந்தப் போராட்டக்குழுவில் ஸ்ரீரங்கத்து மூஞ்சிகள் யாரும் இல்லை. அது எதோ அந்நியப் படையெடுப்பு போல. எப்ப வருவார்கள், எப்பப் போவார்கள் என்று சொல்ல முடியவில்லை!

......பாவம்டா நரசிம்மாச்சாரி. எதாவது பண்ண முடியுமா பாரு... ஏதாவது உங்க ஆபீஸ்ல கிடைக்குமா பாரு.''

......இந்தி வாத்தியாருக்கா? ஏரோட்ரோம்லயா... என்ன விளையாடறியா?''

ரங்கு என்னிடம், ''நீ வேணா வேதாந்தம் கிட்ட சொல்லிப் பாரேன். உனக்கு ஃப்ரெண்டுதானே? ஏதாவது

ஏற்பாடு பண்ண முடியுமான்னு பாரு. வீட்டில குந்துமணி அரிசிகூட இல்லைங்கறார். எங்க பார்த்தாலும் கடன். எனக்கே நூத்தம்பது பாக்கி!''

வேதாந்தம், ஸ்ரீரங்கத்தின் ஆர்.எஸ்.எஸ். சாகையின் தலைவன். அந்தக் கால ஆர்.எஸ்.எஸ். பற்றி கொஞ்சம் சொல்கிறேன். ஒரு காலத்தில் என்னை ஆர்.எஸ்.எஸ்-ஸில் சேர்ப்பதற்குத் தீவிர முயற்சிகள் நடந்தன. காலேஜில் கெமிஸ்ட்ரி வாத்தியார் ஆர்.எஸ்.எஸ்-ஸில் சேர்ந்தால் நிறைய மார்க் போடுகிறார் என்று கேள்விப்பட்டேன். நான் கெமிஸ்ட்ரியில் வீக். அதனால் ஒருநாள் போய்த்தான் பார்க்கலாமே என்று காலை முனிசிபல் லைப்ரரி பக்கத்தில் – இப்போது அதை நேத்தாஜி சாலை என்று சொல்கிறார்கள் – போனால் மைதானத்தில் எல்லாம் சம்ஸ்கிருதத்தில் கட்டளைகளாக இருந்தன. பையன்கள் காக்கி டிராயர் அணிந்துகொண்டு ஒல்லிக்கால் தெரிய தய்னா பாய்னா பண்ணிக் கொண்டிருந்தார்கள் 'நமஸ்தே சதா வத்ஸலே மாத்ருபூமி' பாடினார்கள். சிலர் கம்பு வைத்திருந்தார்கள். ஒரு சில தலைவர்களுக்கு விசில் இருந்தது.

மாமா மாமாவாக உள்ளவர் களெல்லாம் பனியனும் தொப்பை மேல் அரை டிராயரும் போட்டுக் கொண்டிருந்ததைப் பார்த்துச் சிரித்துவிட்டேன். அதனால் நான் வரிசையிலிருந்து நீக்கப்பட்டேன். மேலும் அதிகாலையில் எழுந்து போவது சிரமமாக இருந்தது. ஏனோ பாட்டியும் நான் சங்கத்தில் சேருவதை அங்கீகரிக்கவில்லை!

வேதாந்தம் இப்போது பார்த்தாலும் ''ஆர்.எஸ்.எஸ்–ல சேராம டபாச்சுட்ட பாரு...'' என்று விசாரிப்பான். அவன் வந்தால் ஒளிந்துகொள்வேன்.

இப்போது நரசிம்மாச்சாரிக்காக வேதாந்தத்தை பார்க்கப் போக வேண்டியிருந்தது.

......இந்தி வாத்தியாரை பள்ளிக் கூடத்தை விட்டு டெம்பரரியா நீக்கிட்டா வேது. பாவம் ரொம்பக் கஷ்டப்படறேர். அவரைக் காப்பாத்த வேற வழியிருக்கா?'' என்று கேட்டேன்.

அவன் யோசித்து, ''நரசிம்மாச்சாரிக்கும் உனக்கும் என்ன சம்பந்தம்?''

......சும்மா... மனிதாபிமானம்தான்!''

......மனிதாபிமானமா... இல்லை அவாத்தில் மூணு பெண்ணு இருக்கே, அதில ஏதாவது...''

......சேச்சே நான் அவாத்துப் பக்கம் போனதே இல்லை. அவள்ளாம் கறுப்பா சேப்பான்னுகூட தெரியாது! '' என்றேன்.

......எல்லாம் சேப்பு. பாக்க நன்னாவே இருக்கும்பா. ஒண்ணு பண்றேன்... தக்ஷிண் பாரத் இந்தி பிரசார் சபாவிலிருந்து ஒரு வியக்தி என்னைப் பார்க்க வருவார். அவர்கிட்ட சொல்லி பிரைவேட்டா ஏதாவது ஏற்பாடு பண்ண முடியுமான்னு பார்க்கறேன். எதுக்கும் சாரியை இந்தில எதும் உளறாம இருக்கச் சொல்லு. ஊரே கொல்லுன்னு போச்சு. அவனவன் கர்ச்சீப்பை தலைல கட்டிண்டு அரியலூர் வரைக்கும் போய் ரயில்வே ஸ்டேஷன்லாம் இந்தி எழுத்துக்களை தார் போட்டு அழிச்சுட்டு வரான். ஒரு ஸ்டேஷன் அழிச்சா நாற்பது ரூபாயும் பொட்டலமும் தராங்க. நான்கூட பிக்ஷாண்டார் கோயிலுக்கு தார் டின்னோட போனேன். அதுக்குள்ள யாரோ அழிச்சுட்டான்!''

இந்தி எதிர்ப்புப் போராட்டத்தின் முக்கிய அங்கம் அது. மைய அரசின் அலுவலகங்களில் இந்தியில் எழுதியிருப்பதை தார் பூசி அழிப்பது. அனைத்து போஸ்ட் ஆபீஸ்களிலும் ரயில்நிலையங்களிலும் கிடைத்த அத்தனை போர்டுகளையும் அழித்து ரோடு போட தார் இல்லாமல் பண்ணிவிட்டார்கள். இனிமேல் அழிக்கவேண்டுமானால் புதுசாக போர்டு எழுதினால்தான் உண்டு என்று பண்ணிவிட்டார்கள். 'இந்தி ஒழிக... தமிழ் வாழ்க' என்று மதில் எல்லாம் எழுதி ரங்கராஜா டாக்கீஸ் 'அன்னையின் ஆணை' பட போஸ்டர் ஒட்ட முடியாமல் – இடமே இல்லாமல் போய்விட்டது.

ஸ்ரீரங்கத்தில் பெண்கள்தான் அதிகம் இந்தி படித்தார்கள். எஸ்.எஸ்.எல்.சி. வரை படித்துவிட்டு திருச்சிக்கு காலேஜ் அனுப்பப்படாத பெண்கள் கல்யாணத்துக்குக் காத்திருக்கும்போது தையல் கிளாஸ், பாட்டு கிளாஸ், டைப் கிளாஸ் இவற்றுடன் இந்தி கிளாஸூம் போய் வந்தனர். அதற்கான சான்றிதழ்களை இந்தி பிரசார சபா கொடுத்துவந்தது. ப்ராத்மிக், மத்யமா, ராஷ்டிரபாஷா என்று எம்.ஏ. லெவல் வரைக்கும் படிக்கலாம். இந்த பரீட்சைகள் எல்லாம் ஒத்திப் போடப்பட்டிருந்தன. திருச்சி கெயிட்டி, ஜூபிடர் போன்ற தியேட்டர்களில் இந்திப்படம் காண்பிப்பதை நிறுத்தி 'நீச்சலடி சுந்தரி' என்று டப்பிங் படம் போட் டார்கள். உணர்ச்சிக் கொந்தளிப்பு வேளை. எங்களுக்கெல்லாம் ஓ.பி. நய்யாரின் இசை ரொம்பப் பிடிக்கும். ' மிஸ்டர் அண்டு மிஸஸ் 55', 'ஆர்பார்' போன்ற படங்களில் 'ஆயியே மெஹரபான், ஹூன் அபிமே

ஜவான்' போன்ற பாடல்களை அர்த்தம் புரியாமல் பாடிக் கொண்டிருப்போம். இப்போது அவற்றை கிராமபோனில் கேட்பதை கொஞ்ச நாளைக்கு ஒத்திப்போட்டோம்.

தக்ஷிண் பாரத் இந்தி பிரசார் சபாவிலிருந்து ஷர்மா வந்திருந்தார். அவரிடம் நரசிம்மாச்சாரியின் வேதனையை வேதாந்தம் சொல்லி அழைத்துச் சென்றான்.

அவர், ''நீங்கள் செய்யும் சேவை மகத்தானது. சபாவிலிருந்து உங்களுக்கு அரைச் சம்பளமாவது தரச்சொல் கிறேன். தனிப்பட்ட முறையில் பாடங் கள் நடத்த, படிக்கக் குடிமக்களுக்கு உரிமை இருக்கிறது. இங்கிலீஷ் கற்பதில்லையா? பிரெஞ்ச் கற்பதில் லையா... அதுபோல் ஒரு மொழியைக் கற்பதற்கு யாரும் ஆட்சேபணை தெரிவிக்க முடியாது!'' என்று தைரியம் சொல்லிவிட்டு நரசிம்மாசாரி சாப்பாட்டுக்குக் கஷ்டப் படுதாகச் சொன்னபோது, ''தானே தானே மே நாம் லிக்கா ஹை (ஒவ்வொரு தானியத்திலும் பெயர் எழுதியிருக்கிறது)'' என்று பழமொழி சொன்னார்.

......அதெல்லாம் சரி. இவர் கஷ்டம் தீர என்ன செய்ய?'' என்றபோது நரசிம்மாச்சாரிக்கு ஐம்பது ரூபாயும் வேதாந்தத்துக்கு பத்து ரூபாயும் கொடுத்துவிட்டுப் போனார். ஒப்பந்தம் என்னவென்றால், ' எங்கள் வீட்டு மாடியில் பிரைவேட்டாக இந்தி கிளாஸ் ஆரம்பிப்பது. யாராவது வந்து கேட்டால் அதை தையல் கிளாஸ் என்றோ பிரெஞ்ச் கிளாஸ் என்றோ சொல்லிவிட வேண்டியது. விளம்பரம் எதும் கூடாது. ஒரு அம்பது பேராவது சேர்ந்தால் தொடர்ந்து சபா பணம் அனுப்பும். அதற்குள் கலகங்கள் அடங்கிவிடும்! ' என்றார்.

எங்கள்வீட்டு மாடியில் வாசல் திண்ணை அருகில் மர ஏணி வைத்து மேலே ஹால் போன்ற இடம் இருந்தது. கம்பி கேட்டை பூட்டிவிட்டால் யாரும் மாடி ஏறி வர முடியாது. பத்திரமான இடம்தான்.

இருந்தும் முதல் கிளாஸ் ஆரம்பித்த போது சற்று டென்ஷனாகத்தான் இருந்தது. நரசிம்மாச்சாரி முகத்தில் சவுக்கம் போட்டு மறைத்துக்கொண்டு சாயங்காலம் வெயில் தாழ இங்குமங்கும் பார்த்துக் கொண்டுதான் உள்ளே நுழைந்தார். ''கீழ வாசல்ல டி.கே–காரங்க வேஷ்டியை உருவறாங்க ரங்கு.''

......அந்த வழியா ஏன் வந்தீர்... நான் என்ன சொன்னேன்?''

......எனக்கென்னவோ பதஷ்டமா இருக்கு வேது!''

......பயப்படாதேயும்.''

கிளாசில் சேர விரும்புபவர்களுக்கு தற்போது 'பாஸ்வேர்டு' என்கிறார்களே, அந்த மாதிரி ஒரு ரகசிய சமிக்ஞை வார்த்தை கொடுக்கப்பட்டிருந்தது. அதை உச்சரித்தால்தான் உள்ளே அனுமதி. நாற்பது பேர் சேருவதாகச் சொல்லியிருந்ததாக ரங்கு சொன்னான்.

ராத்ரி ஏழு மணிக்கு கிளாஸ் என்று பெயர். ஏழரை ஆச்சு... எட்டாச்சு... ஒருவரும் வரவில்லை. நான், வேதாந்தம், நரசிம்மாச்சாரி ஒரு கரும்பலகையில் சாக்கட்டியில் எழுதப்பட்ட ஸ்வாகத் அவ்வளவு தான்.

......என்னடா ஆச்சு?''

வேதாந்தம், ''எல்லாரும் பயந்தாரிப் பசங்க ஓய்!''

......என்னடா வேது... வேதனையா இருக்கு. ஒரு பாஷை கத்துக்கறதுக்குக்கூட இந்த நாட்டில உரிமை கிடையாதா? என்ன சுதந்திரம் வந்து என்ன பிரயோசனம்?''

வேதாந்தம், ''நம்ம தாய்மொழியைப் புறக்கணிச்சுட்டு இந்தி கத்துக்கோன்னு சொன்னதுதான் தப்பு!''

......வேது, நீ யார் கட்சி?''

......என்னை சொந்த அபிப்ராயம் கேட்டா, எனக்கு இந்தி பிடிக்காது. சம்ஸ்க்ருதம்தான் எல்லாம். ஆனா, உம்ம சங்கடம் வேற. கவலைப்படாதேயும். இவங்களையெல்லாம் பாடித்தான் கறக்கணும்'' என்றான் வேதாந்தம். காத்திருந்து பார்த்து எட்டரை மணிக்கு நரசிம்மாச்சாரியை வீட்டில் கொண்டு விட்டபோது அவர் முகத்தில் கவலை ரேகை படிந்திருந்தது.

......என்ன பண்ணப்போறேனோ... பேசாம தமிழ் வாத்தியாரா இருந்திருக்கலாம். எங்கப்பா ஆனமட்டும்

சொன்னார்...''

......நீர் போய்ப் படும். இந்த வயசில தமிழ் வாத்தியாரா மாறமுடியாது!''

......பாச்சாதாண்டா கெட்டிக்காரன்! சட்டுனு கணக்கு வாத்யாராய்ட்டான் பாரு... இத்தனைக்கும் எல்.டி. கூட இல்லை.''

அப்போது தீர்த்தம் கொண்டு வந்து வைத்த மூத்த மகள் கல்யாணியைப் பார்த்தேன்.

......வேது, எனக்கு ஒரு ஐடியா...''

......எனக்கும் அதேதான் ஐடியா! எம்மா உனக்கு இந்தி தெரியுமா?''

......தெரியுமே மாமா!''

......எங்கே ஏதாவது இந்தில சொல்லு?''

......பாரத் ஹமாரா தேஷ் ஹை. பஹூத் படா ஹை. இஸ் மே கங்கா பெஹ்தி ஹை.''

......உன் போட்டோ இருக்கா?'' என்றான் வேதாந்தம்.

......இல்லையே... எதுக்கு?''

தெற்கு வாசலிலிருந்து கஸ்தூரியை அழைத்துவந்து அவளை 'சுள் சுள்' என்று நாலைந்து போட்டோக்கள் எடுக்க வைத்தான்.

......எதுக்கு மாமா?''

......எல்லாம் உங்கப்பாவுக்கு ஒத்தாசை பண்ணத்தான். அப்பாகிட்ட சொல்லாதே?'' என்றான்.

வேது திருச்சிக்குப் போய் அதை ப்ளாக் எடுத்து ஒரு நோட்டீஸ் அச்சடித்தான்

...இண்டர் நேஷனல் இன்ஸ்டிடியூட் ஆஃப் ஃபாரின் லாங்வேஜஸ்.

லேர்ன் ஆல் வேர்ல்டு லாங்வேஜஸ்.

காண்டாக்ட் வேதாந்தம் பிரின்ஸிபல்'

...ஒன்ஆஃப் அவர் டீச்சிங் ஸ்டாஃப்' என்று கல்யாணியின் போட்டோவை போட்டிருந்தான். புசுபுசு ரவிக்கையுடன் பக்கத்தில் ஒரு பூச்செண்டை தொட்டுக் கொண்டு எடுத்த போட்டோ அட்டகாச மாக இருந்தது. அதும் இத்தனை இளம்வயதில் மூக்கு குத்தியிருந்தது கிறக்கமாக இருந்தது.

வேது தம்பியின் கிரிக்கெட் சிநேகிதர்களைக் கூப்பிட்டு வீடு வீடாகப் போட்டுவிட்டு வரச் சொன்னான்.

......வேது, ப்ராப்ளம் ஏதாவது வருமா?''

......இதில எங்கயாவது 'இந்தி'ங்கிற வார்த்தை இருக்கா பாரு...'' என்றான்.

இல்லைதான். அந்தச் சுற்றறிக்கைத் துண்டுப்பிரசுரம் ஆச்சரியமான விளைவைத் தந்தது. வெள்ளிக்கிழமை மாலையிலேயே ஜனங்கள், ''மாமா இங்க எங்கயோ.... ஏதோ கத்துத் தாராளாமே... எங்க பட்டாபி கத்துக்கணும்னான்!'' என்று விசாரித்துக்கொண்டு வர ஆரம்பித்தார்கள். ''லைஃப்ல ஒண்ணு ரெண்டு லாங்வேஜ் கத்துக்கறது இம்பார்ட்டெண்ட் பாருங்கோ...''

முதல் கிளாஸ் ஹவுஸ் ஃபுல். கேட்டு கதவைப் பூட்ட வேண்டியிருந்தது.

வேதாந்தம்தான் கல்யாணியை அழைத்து வருமுன் 'நமஸ்தே சதாவத்சலே மாத்ருபூமி' பாடிவிட்டு ''

பிரின்ஸிபல் ஓரிரு வார்த்தைகள் பேசுவார்'' என்றான்.

நரசிம்மாச்சாரியும் தன் அடர்ந்த தலைமயிரையும் தாடியையும் தள்ளி வாரிமுடிந்து புதுசாக மொரமொரவென்று தோச்ச கோட்டு போட்டுக்கொண்டு ஏறக்குறைய அழகாக இருந்தார்.

......நம் பாஷைகள் எல்லாமே ப்ராசீனமானவை. சம்ஸ்க்ருதத்தில் பிறந்தவை. அது தேவபாஷை. தேவநாகரி லிபி என்பதுதான் எல்லாவற்றுக்கும் ஆதாரம்'' என்று பாணினி, ஐந்திரம் என்று ஏதேதோ பேசினார். லேசான சலசலப்பு ஏற்பட்டது. ''அந்த டீச்சரை வரச்சொல்லு வேது!'' என்று குரல்கள் கிளம்பின.

......நாந்தாம்பா டீச்சர்..''

......அப்ப நோட்டீஸ் போட்டது?''

வேதாந்தம், ''வருவாடா... ஆலா பறக்காதீங்க. முதல்ல இண்ட்ரொடக்டரி கிளாஸ். அப்புறம்தான் மத்ததெல்லாம்.''

......வேது... என்னடா இது?'' என்றார் நரசிம்மாச்சாரி புரிந்தும் புரியாமலும். ''ஒண்ணுமில்லை ஓய்... நீர் பாடத்தை நடத்தும்.'' அப்போது கல்யாணி வந்தாள். ''கூப்டிங்களா மாமா?'' வகுப்பு மௌனமாகியது.

......கல்! வா! அப்பாவுக்கு ஒத்தாசையா அ ஆ இ ஈ சொல்லிக் கொடு. கல்யாணி போர்டில் எழுதியதை மாணவர்களை நோட்டுப் புத்தகங்களில் எழுதச் சொன்னான். அவர்கள் ஆர்வமாக எழுதி அவளிடம் திருத்தி வாங்க விரும்பினார்கள். நானோ வேதாந் தமோ திருத்தவேண்டாம் என்றார்கள். அருகில் சென்று சந்தேகம் கேட்டார்கள். மாணவர்களில் எல்லா வயதினரும் இருந்தனர். கீமான்தாங்கியான சீமாச்சுவிலிருந்து மாங்கொட்டை நாணு, தனகோபால், ரகு, நந்து எல்லோரையும் பார்த்தேன்.

கல்யாணி வளப்பமான பெண். அதனால் அவள் சிரத்தையாகக் கற்றுத் தந்தாலும் மாணவர்கள் கவனம் பிசகியது.

சாரியிடம் யாரும் சந்தேகம் கேட்க வரவில்லை.

கஸ்தூரியை வரவழைத்து வகுப்பை போட்டோவும் எடுக்க வைத்தோம்.

சாரியைப் பார்த்து அவர்கள், ''உமக்கேன் சிரமம்? டாட்டரே பாடம் நடத்தட்டும்!'' என்றார்கள்.

நரசிம்மாச்சாரி கோபமாக இருந்தார்.

அவர்கள் போனதும், ''வேதாந்தம் நீ பண்றது உனக்கே நன்னா இருக்கா? அது சின்னக்குழந்தைடா. அதுக்கு எதும் தெரியாது. அத்தனை பேர் பார்வையும் அலையறதுரா... அதுக்குத் தெரியவே இல்லை!''

......பாரும்... ஆள் சேர்ற வரைக்கும் ஒரு வாரம் இவ வந்துட்டுப் போகட்டும். சபாவில இன்ஸ்பெக்ஷன் வர வரைக்கும்தானே? பாரும்... ஒரு ப்ராடக்டை விக்கணும்னா அதை அலங்காரமா கண்ணாடி, காயிதம் எல்லாம் போட்டு விக்கறதில்லையா... அந்த மாதிரிதான்!''

......எனக்கு இதில சம்மதமே இல்லை வேதாந்தம்!''

......ஒரு வாரம் சமாளிச்சு அம்பது பேர் சேந்துட்டா, ஆயிரம் ரூபா தர்றதா சொல்லியிருக்கா சபாவில.''

மறுநாள் அட்மிஷனுக்கு இன்னும் சில பேர் விண்ணப்பம் செய்தார்கள். காலையே வந்து சிலர் விசாரித்து விட்டுப் போனார்கள். ஜாக்கிரதை யாகத்தான் பதில் சொன்னோம். எங்கும் இந்தி என்கிற வார்த்தையே பயன்படுத்தவில்லை. மாடி ஹாலில் முப்பது பேருக்கு மேல் உட்கார இடமில்லாததால் இரண்டு கிளாஸ் ஷிஃப்ட் போடுவதாக முடிவெடுத் தோம். யார் யாரோ மேல அடையவளைஞ்சான், நொச்சியம் போன்ற இடங்களில் எல்லாம் வந்து சேர விருப்பம் தெரிவித்தார்கள்.

விஷயம் இந்தி எதிர்ப்புப் போராட்டக் குழுவுக்குத் தெரிந்து போய்விட்டது. இவர்கள் மாற்றுப் பெயரில் இந்தி கற்றுத் தருகிறார்கள் என்பதை அறிந்த இளைஞர்கள், 'புறப்படு தமிழா... ஆரிய மாயையை அடக்கக் கொதித்து எழு!' என்று ஒரு கோஷ்டி நரசிம்மாச்சாரியின் வீட்டைச் சூழ்ந்துகொண்டு ''ஆரியப்

பதரே வெளியே வா!'' என்று சத்தம் போட்டார்கள். சாரி புறக்கடையை விட்டு வெளிவரவில்லை. கல்யாணி தான் வெளியே வந்து, ''அப்பா கோட்டைக்குப் போயிருக்கார்!'' என்று பொய் சொன்னது. விஷயம் தீவிர மாகிவிட்டது. அவசர அவசரமாக ரங்கு கடைக்கு வந்து சாரியின் பக்கத்து வீட்டுப்பையன்! '' ''மாமா உங்களை இந்தி வாத்தியார் அழைச்சுண்டு வரச்சொன்னார். ஒரே கலாட்டா... நெருப்பு வெக்கப் போறாளாம்.''

நாங்கள் ஓடிச் சென்று பார்த்த போது ஊர்ப்பையன்கள் யாரையும் காணோம். பொன்மலையிலிருந்து வந்த ரௌடி கும்பல். அவனவன் கையில் கழி – கம்பு, அரிவாள் வைத்திருந்தார்கள்.

வேதாந்தம் நிலைமையை எடை போட்டான்.

......பாருப்பா... யாரோ உங்களுக்குத் தப்பா சொல்லியிருக்கா. இந்தியாவது தொந்தியாவது... என்ன எங்களுக்குப் பைத்தியமா? தையல் கிளாஸ், பாட்டு கிளாஸ் நடத்தறா இந்தப் பொண்ணு.''

......இவளா, பாட்டா! ஏய் எங்க பாடு... பார்க்கலாம்'' என்றான்.

கல்யாணி உடனே கணீர் என்ற குரலில், 'பாரத தேசம் என்ற பெயர் சொல்லுவார் துயர் வெல்லுவார்!' என்று பாடி 'நீராரும் கடலுடுத்த'வும் பாடினாள். எல்லாரையும் திகைக்க வைத்தாள். கூடவே அதன் தங்கையும் பாடியது. வேதுவும் சேர்ந்துகொண் டான்.

......சார் கோட்டைக்குப் போயிருக் கார். வந்ததும் சொல்றேன். கலாட்டா பண்ணணும்னா நிச்சயம் பண்ணுங்கோ. இன்ஸ்பெக்டர் ராஜகோபாலுக்குச் சொல்லி அனுப்பிச்சிருக்கேன்.'' ராஜகோபால் முரடர். சேர்த்தி உற்சவத்தின்போது மாந்தோலாலேயே மட்டையடி அடித்துக் கூட்டத்தைக் கட்டுப் படுத்துவார்.

இவர்கள் இந்தி கிளாஸ் எதுவும் நடத்தவில்லை என்ற உறுதிமொழியில் வேதாந்தத்தின் கையெழுத்தைப் பெற்றுக்கொண்டுதான் கலைந்தார்கள்.

வேதாந்தமும் நானும் உள்ளே சென்றோம். புறக்கடையில் தோக்கிற கல்லில் சாரி உட்கார்ந்திருந்தார். ''சாரி உமக்கு ஹெல்ப் பண்ண நினைச்சு, உயிருக்கே ஆபத்தாயிடுத்து. கொஞ்ச நாளைக்கு இந்தி கிளாஸே வேண்டாம்!'' என்றான்.

......நான் போய் காவேரில குதிக் கிறேன்'' என்றார்.

......அப்படி சொல்லாதீங்கப்பா..!''

......ஓய் காவேரில முழங்கால் அளவு கூட ஜலம் இல்லை. குதிச்சா முட்டிதான் பேரும். கொஞ்சம் பொறுமையா இரும்... நான் உமக்கு வழி சொல்றேன்'' என்றான்.

......நீ வரதுக்கு முன்னாடி வீதில நின்னுண்டு என்னவெல்லாம் கத்தினான் தெரியுமா? பொண்ணை அனுப்பு. இந்தி கிளாஸ் வேண்டாம் வேற கிளாஸ் நடத்தலாம்னான்!''

கல்யாணி, ''என்ன கிளாஸ்ப்பா..''

......சும்மார்றி அறிவுகெட்ட முண்டம்!''

சாரிக்கு வேறு மார்க்கம் பார்க்க முடியாத நிலையில் எனக்கு டெம்பரரி டிரான்ஸ்ஃபர் முடிந்து லீவில் போன ஏ.ஏ.ஓ. வந்துவிட்டதால் மீண்டும் மீனம்பாக்கத்துக்கு டியூட்டிக்கு திரும்ப வரும்படி ஆர்டர் வந்துவிட்டது. எனக்குச் சாரியை நினைத்து வருத்தமாகத்தான் இருந்தது.

ஊருக்குக் கிளம்புமுன் ஸ்ரீரங்கம் ஸ்டேஷனில் ஜங்ஷன் போவதற்கு லால்குடி பாசஞ்சர் பிடிக்கக் காத்திருந்தேன். வாசலில் இந்தி எதிர்ப்பு உண்ணாநோன்பு என்று பெரிசாக போர்டு எழுதி பந்தல் போட்டு ச் சிலர் ஜமக்காளத்தில் உட்கார்ந்திருந்தார்கள். போராட்டத்தை முன்னின்று நடத்துபவர் பேராசிரியர் மறை யிறுதி என்று என் கையில் திணிக்கப்பட்ட நோட்டீஸிலிருந்து தெரிந்தது. அவர் தலைமையில் சாகும் வரை உண்ணாநோன்பு எனத் தெரிந்தது.

...மைய அரசே ராணுவத்தை வாபஸ் வாங்கு!' என அதட்டலாக எழுதியிருந்தது. நான் அந்தக் கூட்டத்தைக் கடக்கும்போது உண்ணாவிரதம் இருப்பவர் முன்னால் துண்டுவிரித்து 'போராட்ட நிதிக்கு

பொற்குவை தாரீர்!' என்று எழுதி கண்ணாடிப் பெட்டியில் ரூபாய் நோட்டுகள் அடைந்திருந்தன. ‘‘தமிழ் வாழ்க... இந்தி ஒழிக...’’ என்று அவ்வப்போது கோஷம் லேசாக எழுந்தது. நிறைய நோட்டுகளும் நாணயங்களும் சிதறியிருக்க... அவ்வப்போது கண்ணாடிப் பெட்டியைத் திறந்து பெரிய பையில் திணித்துக் கொண்டிருந்தார்கள். பேராசிரியர் மறையிறுதியை கவனித்தேன். மூன்று நாள் தாடி... முழங்கையில் முறுக்கிவிட்ட ஜிப்பாவினால் அடையாளம் கண்டுகொள்ளச் சற்று நேரமாயிற்று.

......வேதாந்தம் நீயா?’’

......வா... வா... பக்கத்தில உக்காரு. தோழர்களே இவர் என் நண்பர் அரங்கத்தரசு. தாய்மொழிக்காக எதுவும் செய்வார். ஆரம்ப எழுத்தாளன். மைய அரசுப் பணியை நிராகரித்துவிட்டு நம் போராட்டத்தில் கலந்துகொள்ள வந்திருக்கிறார்... வா கொஞ்ச நேரமாவது உக்காரு. ரயில் எங்களை மீறிப் போகாது!’’

......அரங்கத்தரசு வாழ்க!’’ என்று கோஷம் எழுந்தது. சங்கடமாக இருந்தது. நான் அவன் அருகில் அசௌகரியமாக உட்கார்ந்து காதருகில், ‘‘இதெல்லாம் என்னடா வேதாந்தம்?’’

......தாய்மொழியைக் காப்பாத்தப் போராட்டம். ஒரே நாளில் ஐயாயிரம் ரூபாய் சேர்ந்திருக்கு.’’

......இந்த நிதியை என்ன பண்ணப் போறே...’’

மெள்ளக் குரலைத் தாழ்த்தி ‘‘நரசிம்மாச்சாரிக்கு கொடுக்கப் போறேன்’’ என்று கண் சிமிட்டினான் வேதாந்தம்.

---

# ஸ்ரீரங்கத்து தேவதைகள்

**சுஜாதா**



## பாப்ஜி

*யாருளர் களைகண் அம்மா*
*அரங்கமா நகருளானே!*

**– திருமாலை**

அமெரிக்கா சென்றிருந்தபோது 1999–ல் பெர்க்லி பல்கலைக்கழகத்தில் தமிழ் இருக்கையைத் துவக்கிவைத்துப் பேசச் சொன்னார்கள். ஜார்ஜ் ஹார்ட் போன்ற அறிஞர்களும் பல அமெரிக்கத்

தமிழர்களும் தமிழ் மாணவர்களும் வந்திருந்தனர். தேநீர் இடைவேளையின்போது ஒருவர் என்னையே பார்த்துக் கொண்டிருந்தார். என் வயசுதான் இருக்கும். ‘இவரை எங்கேயோ பார்த்திருக்கிறேனே..’ என்று என் அத்தனை ந்யுரான்களிலும் தேடினேன்.

அவரே அருகில் வந்து, ‘‘ரிமெம்பர் மீ? ஐ’ம் பாப்ஜி!’’

……மைகாட்! பாப்ஜி... டேய் இங்கே என்ன செய்கிறாய்?’’ முன்மயிரை இழந்திருந்ததால் சட்டென்று கண்டு பிடிக்க முடியவில்லை. மனசுக்குள் அடர்ந்த முடியை வைத்துப் பார்த்த அடுத்த கணமே, அடையாளம் தெரிந்துவிட்டது. ஐந்தாவதிலிருந்து பி.எஸ்ஸி வரை என் கிளாஸ்மேட்.

……நான் அமெரிக்கா வந்து பதினைந்து வருஷமாகிறது. பெர்க்லியில் நான் இப்போது ஆராய்ச்சி பண்ணிக் கொண்டிருக் கிறேன்.’’

……இஸ் இட்? கிரேட்!’’

……நீ பெரிய எழுத்தாளனாகிவிட் டாயாமே... என் கதையை எழுதி னாயா?’’

……இல்லை... இன்னும் இல்லை!’’ என்றேன்.

……நீ மட்டும் அன்றைக்கு என்கூட எஸ்.ஆர்.பி. காலில் விழ வரவில்லை யென்றால்... இந்த உலகம் ஒரு ந்யுரோபார்மாகாலஜிஸ்டை இழந்திருக் கும். எங்கேயாவது ஏ.ஜி. ஆபீஸில் கிளார்க்காக இருந்திருப்பேன்!’’ என்று என்னைக் கட்டிஅணைக்காத குறையாகத் தோள்மேல் கைபோட்டு கிளாஸை உயர்த்தினான். அவன் அமெரிக்க மனைவி, அவனைவிடப் பெரியவள் போல இருந்தாள். ‘‘ஜேன், ரிமெம்பர்? ‘என்னைக் காப்பாற்றி யவன்’ என்று சொல்வேனே... ரங்கி!’’

……ராங்கி! ஓ... யா! எப்படி மறக்க முடியும்? பூ இதுவரை என்னிடம் அதை நூறு தடவை சொல்லிவிட் டாயே!’’ என்று சொல்லி நகர்ந்தாள்.

கூட்டத்திலிருந்து விலகி மொட்டை மாடியில் இரண்டு சேரை இழுத்துப் போட்டு உட்கார்ந்தோம்.

……ரங்கி!’’ என்னைக் கட்டித் தழுவிக்கொண்டு முதுகில் தட்டிக் கொடுத்தான்.

……லால்குடி பாசஞ்சர் – ஆபீஸர்ஸ் ட்ரெய்ன். பிஆர்எஸ். திஸ் இஸ் அன்பிலீவபிள். நானும் நீயும் பெர்க்கிலியில். நீ எழுத்தாளனாக; நான் ஆராய்ச்சியாளனாக!’’

ஆபீஸர்ஸ் ட்ரெய்ன்!

திருச்சி ஜங்ஷனுக்கு லால்குடியி லிருந்து புறப்பட்டு ஸ்ரீரங்கத்துக்குச் சரியாகக் காலை ஒன்பது எட்டுக்கு வரும் லால்குடி பாசஞ்சரை, நாங்கள் ‘ஆபீஸர்ஸ் ட்ரெய்ன்’ என்போம். முனிசிபாலிட்டியில் ஒன்பது மணிக்கு சங்கு பிடிப்பார்கள். கீழச்சித்திரை வீதியிலிருந்து அப்போது புறப்பட் டால்கூட ஆராமாக ஸ்டேஷன் போய்ச் சேர்ந்துவிடலாம். என்னுடன் பாப்ஜியும் வருவான். இருவரும் சின்ன வயசிலிருந்து ஒரே கிளாஸ். ஒரே வயது. பூவராகவன் என்ற நிஜப் பெயர் சொல்லி யாரும் அழைப் பதில்லை. எல்லாருக்கும் பாப்ஜிதான். நன்றாகப் படிப்பான். பாடுவான். நன்றாக கிரிக்கெட் ஆடுவான். அப்போதெல்லாம் தமிழ்நாட்டிலேயே கிண்டி, அண்ணாமலை, காரைக்குடி என்று மூன்று இன்ஜினீயரிங் கல்லூரிகள்தாம். ஃபார்வார்டு கிளாஸ் என்பதால் இன்ஜினீயரிங் ஸீட் கிடைக்காதவர்கள் பி.எஸ்ஸி பிஸிக்ஸ் சேர்ந்தோம். கிளாஸில் பக்கத்தில் பக்கத்தில் உட்கார்வோம். ரொம்ப மடிசஞ்சி இல்லை. அவ்வப்போது சிகரெட் குடிக்கத் தயங்கமாட்டான். உற்சாகமாகப் பேசுவான். யாரையும் கிண்டல் பண்ணமாட்டான். எதையும் அலசிப்பார்த்து அறிந்துகொள்வான். பாப்ஜியும் நானும் ரயிலில் உட்கார ஸீட் இருந்தாலும் கதவைத் திறந்து வைத்து, காலைத் தொங்கப்போட் டுக்கொண்டு வழி நடையில் பயணம் செய்வதுதான் பெரிய சாதனையாகக் கருதுவோம். டவுன் ஸ்டேஷன் போவதற்கு முன் காலடியில் காவிரி ஓடும். இப்போதுபோல் பெண்களை சைட் அடிப்பதெல்லாம் கிடையாது. காரணம், பெண்களே கிடையாது. ஸ்ரீரங்கத்திலிருந்து ஹோலிகிராஸ் கல்லூரிக்கு அனுப்பமாட்டார்கள். போனால், ‘சிஸ்டராக்கி விடுவார்கள்’ என்கிற அபத்தமான பயம். இந்திராகாந்தி, எஸ்.ஆர்.சி. கல்லூரியெல்லாம் அப்போது இல்லை. அதனால் பெண்களில் மேற்கொண்டு படிக்க வெகு சிலரே சென்னைக்கு அனுப்பப்பட்டனர். ஸ்ரீரங்கம் கேர்ள்ஸ் ஹைஸ்கூலில் எஸ்.எஸ்.எல்.சி. படித்தபின் வீட்டில் இருந்துகொண்டு கல்யாணத்துக்குக் காத்திருப்பார்கள். தையல் கிளாஸ், இந்தி கிளாஸ், தவறாமல் பாட்டு கிளாஸ், சித்திரை வீதியெங்கும் பாட்டுக்கார நாணா வாத்தியார், அவரது புத்ர – புத்ரிகள் மேற்பார்வையில் ‘லம்போதர’வை ஆர்மோனிய சுருதியுடன்

அபஸ்வரத்தை இறைப்பார்கள். சில பெண்கள் வயலின் கற்றுக் கொள்வது பூனை பிரசவிப்பதுபோல் கேட்கும். பணக்கார வீட்டுப் பெண்கள் பரதநாட்டியம் கற்றுக்கொண்டு ஹைஸ்கூலிலோ ரங்கராஜா கொட்டகையிலோ, தேவர் ஹாலிலோ அரங்கேறுவார்கள். மற்ற பெண்கள் ஏரோப்ளேன், பாண்டி ஆடு வார்கள். புளியங்கொட்டை கிளித்தட்டு ஆடுவார்கள். நவராத்திரிக்கு அலங்காரம் பண்ணிக் கொள்வார்கள். ஒருத்தருக்கொருத்தர் மருதாணி இட்டுக்கொண்டு, 'உனக்குப் பத்திருக்கா... எனக்குப் பத்திருக்கா...' என்று சர்ச்சை பண்ணுவார்கள். போர்! இவ்வாறு தினம் தினம் கல்லூரிக்கு பி.எஸ்ஸி – பிஸிக்ஸ் பாடம் படிக்க ஜாலியாகச் சென்று கொண்டிருந்த பரவசமான நாட்களில், பாப்ஜியின் வாழ்க்கையில் ஒரு பெரும்புயல் அடித்தது. முதல் வருடம் படிக்கையில் எஸ்.ஆர்.பி. என்னும் எஸ்.ஆர். பரமேச்வரன் 'ப்ராப்பர்ட்டிஸ் ஆஃப் மேட்டர்' எடுப்பார். மொத்தம் நாற்பத்தைந்து நிமிஷ வகுப்பு. முப்பது நிமிஷம் சொல்லித் தருவார். பதினைந்து நிமிஷம் நோட்ஸ் கொடுப்பார். அதை நாங்கள் எழுதிக் கொள்ளவேண்டும்.

ஒரு முறை பாப்ஜி நோட்டுப் புத்தகம் எடுத்து வரவில்லையோ, பேனா பென்சில் இல்லையோ... உடம்பு சரியில்லையோ – ஏதோ ஒரு நியாயமான காரணத்துக்காக எல்லோரும் எழுதிக் கொண்டிருக்க... இவன் மட்டும் கன்னத்தில் கை வைத்துப் பக்கத்தில் எழுதிக் கொண்டிருந்த என்னைப் பார்த்துக் கொண்டிருந்தான். ஜோசப் காலேஜின் பி.எஸ்ஸி வகுப்பறைகள் காலரியாக இருக்கும். நவராத்திரி கொலு மாதிரி உட்கார்ந்திருப்போம். மாணவர்கள் எல்லாரும் விரிவுரை யாளர் கண்ணுக்குத் தெரிவார் கள். முன் பெஞ்சின் பின் பம்ம முடியாது.

எழுதாத பாப்ஜியை, எஸ்.ஆர்.பி. நோட்ஸ் கொடுப்பதை நிறுத்திவிட்டுப் பார்த்தார்: ''எனி ப்ராப்ளம்?''

அவருக்குச் சற்று மாறுகண். மாணவனைப் பார்க்கிறாரா, கடிகாரத் தைப் பார்க்கிறாரா என்பது சிலவேளை குழம்பும். பாப்ஜி என்னைத்தான் கேட்கிறார் என்று எண்ணி, என் முகத்தைப் பார்த்தான்.

......யூ வித் தி ப்ளூ ஷர்ட்! யு...'' என்றார். ''வாட்ஸ் ஹிஸ் நேம் மானிட்டர்?''

பாப்ஜிதான் நீலச்சட்டை.

......ஆர். பூவராகவன் ஸார்...''

......எழுந்திரு!'' என்றார். எழுந்தான்.

......உடம்பு சரியில் லையா?''

பாப்ஜி தலையாட்டி னான். நன்றாகப் படிப்பானே தவிர, இங்கிலீஷ் வராது. நாக்குப் புரள வில்லை.

......பின் ஏன் நோட்ஸ் எடுத்துக் கொள்ளவில்லை? உனக்கு எல்லாம் தெரியும் என்றால் கிளாஸுக்கு எதற்கு வருகிறாய்? என்னால் அறியாமையை மன்னிக்க முடியும். அலட்சியத்தை மன்னிக்க முடியாது!'' என்று இங்கிலீஷில் பிளந்துகட்டி நல்லபாம்பு போல மூச்சுவிட்டு பாப்ஜியை வெளியே அனுப்பினார்.

நாங்கள் ஒருத்தன்கூட எழுந்து, 'சார் அவன் அப்ப டிப்பட்டவன் இல்லை!' என்று ஒரு வார்த்தை சொல்லவில்லை. எல்லோருக்கும் பயம். பாப்ஜி கண்ணைத் துடைத்துக்கொண்டு வெளியே போனான்.

கிளாஸ் முடிந்ததும் வாயிற்படி யிலேயே கன்னத்தில் கைவைத்து உட்கார்ந்திருந்தான். மானிட்டர் ஜி.ஆர். ''ஏண்டா, உடம்பு சரியில்லை... ரங்கராஜன் நோட்ஸ் பார்த்து எழுத்திக்கறேன்னு சொல்றதுதானே?'' என்றான்.

......அந்த அளவுக்கு இங்கிலீஷ் தெரியாதுரா எனக்கு...''

எஸ்.ஆர். பரமேச்வரன், அவரது அடுத்த கிளாஸில் பாப்ஜியை முதலில் பார்த்து, ''என்ன நோட்ஸ் எழுதிக் கொள்ள உத்தேசமா, இல்லை உனக்கு நோட்ஸே தேவையில்லையா?''

அவன் அசட்டுச் சிரிப்பைத் தப்பாகப் புரிந்துகொண்டு அவனை கடைசி மேல் வரிசைக்கு அனுப்பி னார். விதி பாருங்கள்... அவனை வைத்தே விளையாடியது! அப்போதெல்லாம் சென் ஜோசப்ஸ் காலேஜில் நன்றாகப் படிக்கிற பையன்கள் ஒரு கோஷ்டி. வாளாடி, லால்குடி, பிக்ஷாண்டார்கோவில், உத்தமர்கோவில், ஸ்ரீரங்கம், திருச்சி ஆண்டார் ஸ்ட்ரீட், பட்டர்ஒர்த் ரோடிலிருந்து வரும் எங்களை 'தயிர்வடைகள்' என்பார்கள். முன் வரிசையில் அவசரமாக இடம்பிடித்து உட்காருவோம். படிக்காமல் ஊர் சுத்துகிற தடிப்பசங்கள் ஒரு கோஷ்டி. பெரும்பாலும் கண்டோன்மெண்ட் கேம்பியன் போல ஆங்கிலோ இந்தியப் பள்ளிகளிலிருந்து வருவார்கள். சிவப்பாக வாட்டசாட்டமாக இருப்பார்கள். ஹாக்கி, பாஸ்கெட்பால்

நன்றாக ஆடுவார்கள். பிஸிக்ஸ், மேத்ஸ் எல்லாம் சுட்டுப்போட்டாலும் வராது. கடைசி மேல் வரிசையில் உட்கார்ந்துகொண்டு பாடப்புத்தகத் துக்குள் துப்பறியும் கதைகள் படிப் பார்கள். இங்கிலீஷ் பேசுவார்கள். லெக்சரர் போர்டில் ஏதாவது எழுதும்போது பேப்பர் அம்பு அடிக்கும் கெட்ட பழக்கம் சிலரிடம் இருந்தது. பாப்ஜியின் புது வரிசையிலிருந்து அப்படி திறமையாக ஏவப்பட்ட அம்பு ஒன்று கிளாஸ் முழுவதும் கிளைடர் போல பறந்து எஸ்.ஆர்.பி–யின் கிராப்பின் பின் பகுதியில் போய்ச் செருகிக் கொண் டது. அவர் தலை திருப்ப அதுவும் திரும்பியது.

பையன்கள் சிரித்துவிட... பாப்ஜி அதிகமாகவே சிரித்தது தப்பாகி விட்டது. அவர், ''பூவராகவன் கெட்அப்!'' என்றார் அநியாயமாக. ''உடனே வெளியே போ. கிளாஸ் முடிந்ததும் என்னை ஸ்டாஃப் ரூமில் வந்து பார்!'' என்றார்.

அவன் துடைகள் நிஜமாகவே நடுங்கின. உடனே ஜுரம் வந்திருக்கும். அவனைக் கடுமையாகப் பார்த்து, ''நீ நல்ல குடும்பத்துப் பையன் என்று நினைத்தேன். உனக்கு நான் ஏன் டி.சி. கொடுத்து அனுப்பக்கூடாது?''

......நான் என்ன சார் செய்தேன்?'' என்றான் அழாக்குறையாக.

......ஆரோ அடித்தது?''

......அது யாரோ அடித்தது சார்!''

......யார் சொல்லு... விட்டுவிடுகிறேன்.''

......நான் முன் பெஞ்ச் ஆசாமி சார். அவர்கள் பெயர்கூடத் தெரியாது.''

......அது யார், பெயர் என்ன என்பதை வியாழக்கிழமைக்குள் கண்டுபிடித்துக் காகிதத்தில் எழுதிக் கொண்டு வரவேண்டும். அதன்பின் தான் உன்னை கிளாஸில் உட்கார அனுமதிப்பேன். இல்லையேல் உனக்கு டிஸ்மிஸ்!'' என்றார்.

பாப்ஜி, ''என்னடா வம்பாப் போச்சு!'' என்று ஜி. ரங்கராஜனிடம் சொன்னான். அவன் தான் மானிட்டர்.

......டிசோஸாதான் அடித்தான். அவங்க யாரையும் காட்டிக் கொடுத்துடாதே. முரட்டுப் பசங்க. ஆக்கி ஸ்டிக்கால முட்டியைப் பேத்துடுவான்.''

......பின்ன நான் என்னடா செய்வேன்? வியாழக்கிழமை கேப்பாரேடா...''

......நான் வேணா சொல்லிப் பார்க்கறேன். ஆனா, அவர் கேக்கற ஜாதியா தெரியலை!''

......ஆரோ அடிச்சது யார்னு சொல்லலேன்னா டி.சி. கொடுத்துருவேன் கறார்ரா..''

......பண்ணினாலும் பண்ணுவேர். அது முசுடு. எதுக்கும் நீ நேஷனல்ல விசாரிச்சு வை. பாதி டெர்ம்ல எடுத்துப்பாளான்னு.''

......அங்க பி.எஸ்ஸி பிஸிக்ஸ் கிடையாதேடா!'' (அப்போதெல்லாம்)

......வேற எதாவது சேரேன். பி.ஏ. இங்கிலீஷ், ஹிஸ்டரினு...''

......எங்கப்பா கேட்டா, தோலை உரிச்சுருவார்றா!'' என்றான்.

......பேக் பெஞ்ச் பசங்க பண்றாங்க பாரு... அதுமாதிரி நோட்ஸ் எடுக் கலைன்னாலும் எடுக்கறாப்பல பாவனை பண்ணனும்டா. இந்த ட்ரிக் கூட தெரியலையா... அவர் ரொம்ப கோபிஷ்டு. எதை வேணா மன்னிப்பார். நோட்ஸ் எடுக்கலைன்னா மன்னிக்கவே மாட்டார். உனக்கு இருக்கு... என்னடா நாத்தம்?''

பாப்ஜி அடக்க முடியாமல் வேஷ்டியில் கொஞ்சூண்டு நம்பர்டூ போய்விட்டான். வந்தது வரட்டும் என்று வியாழக்கிழமை பிரச்னையை எதிர்கொள்ளாமல் பாலுவைப் போய்க் கேட்டான்.

அவன் ஒரு குருட்டு யோசனை சொல்லியிருக் கிறான். ‘‘எஸ்.ஆர்.பி–யுடைய அடுத்த ரெண்டு மூணு கிளாஸை கட் அடிச்சுரு மறந்துருவேர்.’’

நல்ல யோசனையாகப்பட்டதால் அவர் கிளாஸ் மூன்றை நழுவவிட்டான்.

நான், ‘‘வேண்டாம்டா... விஷப்பரீட்சை!’’ என்றேன்.

......பாரு! வேற எதாவது உருப்படியா யோசனை இருந்தா சொல்லு!’’

எனக்கு சட்டென்று எதுவும் தோன்றவில்லை.

வியாழன், வெள்ளி, சனி, திங்கள்கிழமையும் நழுவவிட்டு, செவ்வாய் போவதாகத் தான் இருந்தான். சற்றும் எதிர்பாரா மல் திங்களன்று எல்.கே.கே–க்கு பதில் இவர் வந்துவிட்டார். பாப்ஜி சகலமும் ஸ்தம்பித்துப் போய் உட்கார்ந் திருக்க...

......பூவராகவன் ஸ்டாண்ட்அப்!’’ என்றார். ‘‘என் வகுப்புகளுக்கு வராமலிருந்தால் பொறுப்பிலிருந்து மீளலாம் என்று எண்ணுகிறாயா? நாளை பிரின்சிபால் அலுவலகத்தி லிருந்து லெட்டர் வாங்கிப்போ...’’

......சார் ப்ளீஸ்...’’

......நோ மோர் எக்ஸ்க்யூஸஸ். உன் மாதிரி ஒழுங்கற்ற மாணவனை நான் என் 25 வருஷ சர்வீஸில் பார்த்த தில்லை. கெட் அவுட்!’’

பெனின்சுலார் ஓட்டலில் போய் தோசை, காபி சாப்பிடும்போது அவன் சாப்பிடவே இல்லை! பெல் அடிப்பதன்முன் லாலிஹாலில் நான், குல்ஸார், பாபு, கலாம், பாப்ஜி எல்லோரும் பேசிக் கொண்டு இருக்கையில் அவன் நிஜமாகவே அழுதுவிட்டான். சொக்காயால் அடிக்கடி கண்ணைத் துடைத்துக்கொண் டான். ‘‘எல்லாம் போச்சு. டி.சி. கொடுத்து அனுப்பிவிடத் தீர்மானித்துவிட்டார்றா! ஆபீஸில் கேட்டேன்.பிரின்ஸிபாலிடம் கையெழுத்து வாங்கியாச்சு. இனி என்னை ஸ்ரீரங்கநாதர்கூடக் காப்பாற்ற முடியாது. என்ன செய்வேன்? நாளைக்கு தபாலில் லெட்டர் போய்விடும்.’’

......அதிகாலைல எழுந்து போஸ்ட் மேனை துரத்திப் புடிக்கலாமேடா.’’

......அதையும் பார்த்துவிட்டேன். ரிஜிஸ்தர் தபால். கொடுக்கமாட் டான். பேசாம செத்துப்போய்டட் டுமா? ’’

......கேனத்தனமாப் பேசாதே.’’

......எந்த மார்க்கமும் தென்படலை யேடா...’’ என்றது, குரல் கம்மிப்போய் விட்டது.

ரங்கு கடையில் இதுபற்றிப் பேச்சு வந்தது. ‘‘ரங்கு, எதாவது வழி சொல்லேன்.’’

......ஒரே ஒரு மார்க்கம்தான் இருக்கு.’’

......என்ன?’’

......நேராப் போய் அவர் கால்ல விழுந்துரு. பிடிச்ச காலை விடாதே. எழுந்திருக்காதே. நம்ம வைஷ்ணவ சம்பிரதாயமே சரணாகதிதான்.’’

பாப்ஜி என்னைப் பார்த்தான். ‘‘நீயும் வரியாடா?’’

......கால்ல விழறதுக்கா?’’

......கால்ல விழவேண்டாம்டா. ஒரு மாரல் சப்போர்ட்டுக்கு.’’

மெயின்கார்டு கேட்டில் முன் ஸ்டாப்பில் இறங்கி சர்ச்சைத் தாண்டி, ரோட்டைக் கடந்து ஐஸ்க்ரீம் பார்லருக்குப் பின்னால் கல்லூரி சார்ந்த ஸ்டாஃப் காலனி குவார்ட்டர்ஸில் இருந்தார் எஸ்.ஆர்.பி. நாங்கள்

போனபோது நாலைந்து டியூஷன் பையன்கள் காத்திருந் தார்கள். ஓர் இளம்பெண், ‘‘யார் வேணும்?’’ என்றது.

நாங்கள் பதுங்கி, ‘‘சார் இருக்காரா?’’ என்றோம்.

……பேரு?’’

……ரங்கராஜன்னு சொல்லுங்கோ..’’

……என்னைப் போய்‘ங்கோ’னு சொல்லிண்டு!’’ என்று சிரித்தாள் அப்பெண். ‘‘உக்காரு. வருவார். அப்பா... யாரோ ரங்கராஜனாம்...’’

அந்தப் பெண் ஒரு ஆறு வயசுப் பையனை பாதுகாத்துக் கொண்டிருந் தாள். அந்தப் பையன் யாரையும் பார்க்காமல் சுவரையே பார்த்துக் கொண்டிருந்தது விநோதமாக இருந்தது. பாப்ஜி ஃப்ரெண்ட் பண்ணிக் கொள்ளும் உத்தேசத்தில் ‘‘பையன் பேர் என்ன?’’

……கோவிந்தன்’’ என்றாள்.

……கோவிந்து, எப்படி இருக்கே? ஷேகாண்ட் குடு.’’

அந்தப் பையன் கையைப் பிடித்தான். அவன் பாப்ஜியின் கைவிரலைப் பிடித்து எடுத்துப் பார்த்துக் கைகுலுக்கிவிட்டு ‘களுக்’ கென்று சிரித்தான்.

அந்தப் பெண் ஆச்சரியத்துடன், ‘‘ரொம்ப நாள் கழிச்சு இப்படிப் பண்றான்!’’ என்றாள்.

……இவனுக்கு என்ன?’’ என்றேன்.

……பிறந்ததிலிருந்தே இப்படித்தான் இருக்கான். யாரையுமே நேரா பார்க்கமாட்டான். இன்னிக்கு ஒரு நாளைக்குத்தான் உங்களை நிமிர்ந்து பார்த்திருக்கான். தலை சின்னது. அதனாலதான்னு டாக்டர் சொல்லியிருக்கார் சரியாபோய்டும்னு. ஒண்ணு ரெண்டு தலைகீழா சொல்வான். ஃபிட்ஸ் வரும்.’’

கோவிந்து, பாப்ஜியின் கைவிரலை, முன்னும் பின்னும் ஆட்டிச் சிரித்துக் கொண்டிருந்தான். உடல் நன்றாக வளர்ந்திருக்க... மூளைதான் சற்றுப் பின் தங்கியிருந்தது.

எஸ்.ஆர்.பி. வெளியே வந்தார். காலேஜில் புஷ்கோட்டும் பி.யூ. சின்னப்பா நடையுமாக இருப் பவரை, வீட்டில் பனியனுடன் பார்க்கும்போது அவ்வளவு பயமாக இல்லை.

……நீயா?’’ என்றார். முகம் இறுகியது.

……உன் மேட்டர் முடிஞ்சு போச்சே. நத்திங் கேன் பி டன். பிரின்ஸிபாலை பார்த்துட்டு டி.சி. வாங்கிட்டு ப்போ!’’

……அப்பா! கோவிந்து இவனைப் பார்த்து சிரிச்சான்பா!’’

……இஸிட்!’’ என்றார்.

பாப்ஜி, தன் வாழ்க்கையே அதில் தான் தொங்குவது போல் கோவிந் துக்கு விளையாட்டுக் காட்டினான். ‘ஆனை ஆனை அழகர் ஆனை’ என்று கை ரெண்டையும் காதாக்கிக் கொண்டு தலையை ஆனை போல ஆட்டினான். கோவிந்து அடக்க முடியாமல் சிரித்தான்.

எஸ்.ஆர்.பி–யின் கண்களில் முதல் முறையாக நீரைப் பார்த்தேன்.

……He has never done this before. கடவுள் ஏதோ உன்னைப் பத்தி இவன் மூலம் சேதி சொல்ல விரும்பறார்.’’

……ஆமா சார்.. ஆமா சார்.. இவன் நீங்க நினைக்கிற மாதிரி ரௌடி இல்லை சார்’’ என்றேன்.

......நீ ஏண்டா அழறே?''

......ரொம்ப ஃப்ரெண்டு சார்.''

எஸ்.ஆர்.பி., பாப்ஜிக்கு கொடுத்த தண்டனையை மூன்றுநாள் தள்ளிப் போடச் சம்மதித்தார். நீ வராத நான்கு கிளாஸின் பாடங்களை நோட்ஸ் எழுதிப் படித்துவிட்டு வரவேண்டும். அதன்மேல் ஒரு டெஸ்ட் வைப்பேன். அதில் சரியாக எழுதிவிட்டால் மன்னிப்பு, போனால் போகிறது என்று.''

பாப்ஜி என்னைப் பார்த்தான். ''மூணு நாளா?''

......உடனே ஒப்புக்க!'' என்றேன்.

பாப்ஜியின் பிரச்னை அதோடு தீரவில்லை.

என்னிடமிருந்து எல்லா நோட்ஸையும் வாங்கி காப்பி எடுத்துக்கொள்ள சாயங்காலம் வந்திருந்தான். நாலு மணிக்கு வந்தவன் தொடர்ந்து எழுதி இரவு எட்டு மணியாகிவிட்டது.

......ஐயோ இதை எல்லாம் படிக்கணுமே. ரெண்டு நாள்ல எப்படிடா படிக்கப் போறேன்?'' என்று ஏறக்குறைய அழுதுகொண்டே கேட்டான். ''எல்லாத்தையும் கடம் அடிச்சுரு!'' அவன் வீட்டுக்குத் திரும்பும்போது வானம் இருண்டு மழை வந்தது. தொப்பலாக நனைந்துவிட்டான். அவன் எழுதின நோட்ஸெல்லாம் பாழாகிவிட்டது. சொட்டச் சொட்ட நனைந்து வந்து வீட்டு சங்கிலி கேட்டை அசைத்தான். உள்ளே வந்து சட்டையைப் பிழிந்தான்.

......நான் அவ்வளவுதாண்டா! என் விதிதாண்டா என்னைத் துரத்தறது.''

......என்னடா ஆச்சு?'' என்றாள் பாட்டி.

......மழை வந்து எல்லாம் வீணாய்டுத்து பாட்டி. பெருமாள் சதி பண்றேர்.''

......இதுக்காக மழையில வந்தியா?''

......டேய்... நீ படிச்சிருக்கியாடா அந்தப் பாடமெல்லாம்!''

......ஆளை விடு! என்னால சொல்லித் தர முடியாது.''

......எனக்கு மட்டும் ஏண்டா இப்படி எல்லாமே தப்புத் தப்பா நடக்கணும்? என் ஜாதகம் அப்படியா? ஒரு நாள் நோட்ஸ் எழுதாம இருந்தது ஒரு பெரிய குற்றமா? அதுக்கு இப்படி அடுத்தடுத்துத் தண்டனையா... எனக்கு பேப்பர்ல அம்பு எப்படி பண்றதுன்னுகூடத் தெரியாது பாட்டி.''

பாட்டி, ''கவலைப்படாதே. சில வேளைல கிரகம் அப்படித்தான் படுத்தும். திருமஞ்சனக் காவேரி தாண்டி, அம்மா மண்டபம் ரோட்டில் அனுமார் கோயில் இருக்கு பாரு! அவருக்கு வடைமாலை சாத்தறதா வேண்டிக்கோ.''

......பாட்டி, இத்தனை லேட்டா வேண்டிண்டா எந்த அனுமாரும் என்னைக் காப்பாத்த முடியாது!''

......அப்படித்தான் நினைச் சிண்டிருக்கே... உடனே சைக்கிளை எடுத்துண்டு போய் சேவிச்சுட்டு வேண்டிண்டு வந்துரேன்.''

மெள்ள நசநசவென்று பெய்த மழை, அவன் திரும்பி வந்ததும் வலுத்தது. வானமே உடைவது போல சத்தம் கேட்டது. வளைகுடாவில் காற்றழுத்தம் குறைந்து சைக்ளோனிக் ஸ்டார்மாகி. ராத்திரி முழுக்கப் பேயாய் காற்றடித்தது. ஜன்னல்கள் எல்லாம் 'மடேர் மடேர்' என்று திட்டின. பக்கத்து வீட்டு பாலு குடையை எடுத்துக்கொண்டு தெருவில் நுழைந்த அடுத்தகணம் அது கூடாகி, கறுப்புத்துணி மட்டும் விண்ணில் பறந்தது. நல்லவேளை! குடையை கைவிட்டான். இல்லையேல் அவனை யும் தூக்கிக்கொண்டு போயிருக்கும். முழுமையான புயல்காற்று வீச... கரண்ட் போய்விட்டது. தந்திக் கம்பங்கள் கொண்டை ஊசிகள் போல வளைந்தன. சித்திரைத் தேர்முட்டியிலிருந்து ஒரு தகரப் பாளம் விடுதலை பெற்றுப் பிரிந்துகொண்டு சித்திரை வீதி முழுவதும் கன்னா பின்னாவென்று அல்லாடிவிட்டு ரங்கசாமி கோனார்

வீட்டில் போய் மோதி ஓட்டைப் பெயர்த்தது. ஒருவரும் வெளியே போக முடிய வில்லை. பாப்ஜி வீட்டு க்குப் போகாமல் அரிக்கேன் லைட்டில் என் நோட்ஸை வைத்து உருப் போட்டான். ராத்திரி எங்களுடனேயே கூடத்தில் சுருண்டு படுத்துவிட்டான்.

......ஒரு எழவும் மண்டைல ஏறலை!'' என்றான்.

மறுநாள் காலைதான் கரண்ட் வந்தது. ரேடியோ போட்டதில் ஒரு வாரத்துக்குப் பள்ளிக்கூடங்கள் காலேஜ்கள் லீவு என்று அறிவித் தார்கள்.

......சட்டுனு ஞாபகமில்லை. எஸ்.ஆர்.பி. என்ன சொன்னார். என்ன ஆச்சு?''

......புயல்னால ஒரு வாரம் லீவு கிடைச்சுடுத்தில்லை. நன்னா படிச்சுட்டேன். அவரானா டெஸ்ட் எல்லாம் வேண்டாம்னுட்டார். ரங்கி ஒண்ணு கவனிச்சியோ?''

......என்ன?''

......உங்க பாட்டி அன்னிக்கு அனுமாருக்கு வேண்டிக்கச் சொன்னா பாரு. நிஜமாவே வேண்டிண்டேன். பலன் கிடைச்சுடுத்து பாரு.''

......எப்படிச் சொல்றே?''

......அனுமார் யாரு? வாயுபுத்ரன். அன்னிக்கு அடிச்சது என்ன? புயல் காத்து.''

......போடாச்சீ. அமெரிக்கால உக்காந்துண்டு இதையெல்லாம் நம்பறியா? பாப்ஜி டெஸ்டுக்கு சரியா படிக்கலைன்னு பேய்க்காத்தை ஸ்ரீரங்கத்திலிருந்து நாகப்பட்டினம் வரைக்கும் ஊரெல்லாம் சேதம் உண்டாக்க அனுப்புவாரா? அவருக்கு வேற வேலை கிடையாதாடா?''

......எனிவே இப்படி நினைச்சுப் பார்க்க ரொமாண்டிக்கா இருக்கில்லை.''

......எனக்குத் தோணலை. அப்புறம் நீ எஸ்.ஆர்.பி–யைப் பார்த்தியோ?''

......ஒரு முறை பார்த்தேன். எங்கப்பா போனபோது, ஸ்ரீரங்கம் போயிருந்தப்ப. அந்தப் பையன் கோவிந்து தொடர்ந்தேர்த்தியா ஃபிட்ஸ் வந்து போய்ட்டானாம். அந்தச் சோகத்திலேயே அவர் பாதியாயிட்டார். ஒரு காலத்தில இவரைப் பார்த்தா அப்படிப் பயந்தோம்னு இருந்தது.''

இருட்டிவிட்டது. அவன் மனைவி பின்னால் வந்து நின்றாள்.

......என்ன, எல்லாம் பேசியாகி விட்டதா... இந்த மனிதரை எதற்கு அமெரிக்கா அனுப்பினீர்கள்?'' என்றாள். வேடிக்கையாக அவன் மேல் ஒரு ஜாக்கெட்டை அணி வித்தாள்.

......இன்றைக்கு ஒரு ப்ரோஸாக்கும் ஒரு டைலான்டினும் அந்தப் பையனைக் காப்பாற்றியிருக் கும்!''

......பாப்ஜி, நீ என்ன ஆராய்ச்சி பண்ணுகிறாய் பெர்க்லியில்?''

......நியூரோ பார்மோகாலஜி. போஸ்ட் டாக்டரேட் ரிஸர்ச் பண்ணுகிறேன். அட்டென்ஷன் டெபிஷென்சி. சிண்ட்ரோம் பாராப்ளிஜியா எபிலெப்சி மாங்கோலிசம் பற்றி ஆராய்ச்சிக் கட்டுரைகள் எழுதி அதற்கான மிதைல்ஃபெனிடேட் சார்ந்த ஒரு புது மாத்திரையும் கண்டுபிடித் திருக்கிறேன். ஆனா, இன்னிக்குகூட காகித அம்பு எப்படி அடிக்கிறதுனு தெரியாது!'' என்று சிரித்தான்.

......நீ கண்டுபிடிச்ச மருந்து பேரு என்ன?''

......கோவிந்த்!'' என்றான்.

# ஸ்ரீரங்கத்து தேவதைகள்

★ சுஜாதா

## மஞ்சள் சட்டை



*...ஒரு மகள் தன்னை உடையேன்*
*உலகம் நிறைந்த புகழால் திருமகள் போல வளர்த்தேன்*
*செங்கண்மால் தான் கொண்டுபோனான்'*

**– பெரியாழ்வார் திருமொழி**

**லா**ல்குடி பாசஞ்சரில் பெட்டிக்குப் பெட்டி தினசரி வியாபாரங்கள் நடக்கும். இஞ்சிமுரப்பா, வேர்க்கடலை, அண்ணாக்கயிறு, பாச்சா உருண்டை, நாடா போட்ட பட்டாபட்டி டிராயர், கத்தரிக்கோல், கத்தி போன்ற வஸ்துக்கள், புருவத்தில் தடவ குல்கந்து, ஜெண்டு போன்ற வாசனாதி திரவியங்கள், நோட்டுப் புத்தகங்கள், இங்கிலீஷ் கற்றுக் கொடுக்கும் புத்தகங்கள், பேனா எதுவும் கிடைக்கும். நிறைய பேரம் பேசலாம்.

டவுன்ஸ்டேஷன் வரும் வரை வாக்குவாதம் நடக்கும். கடைசியில் சிறுவியாபாரி இறங்குமுன் கெட்டவார்த்தை சொல்லி விட்டுப் போவான். பால்வியாபாரிகள், வாழைத்தார், வாழை இலைக்கட்டு, கறிகாய், அரிசி – பருப்பு, கீரை போன்ற பலதரப்பட்ட வியாபாரிகள் திருச்சியின் நுகர்வோர் பொருளாதாரத்தின் நரம்பாக இருப்பவர்கள் அந்த பாசஞ்சரில் தான் பயணம் செய்வார்கள். மற்றொரு பெட்டியில் லைட்மியூஸிக். ஆர்மோனியம் வைத்துக்கொண்டு ஒருவர் இனிமையாகப் பாடுவார். கூடவே டோலக் வாசிப்பார்கள். 'வெய்யிற்கேற்ற நிழலுண்டு' என்ற பானுமதி – கண்டசாலா பாடிய பாட்டைப் பாதி பாடிக் கொண்டிருக்கும்போது அந்தப் பிச்சைக்காரன், பெட்டி தாவி வந்து வயிற்றில் பயங்கரமாக அடித்துச் சத்தம் பண்ணிக் கொண்டு தாளம்போட... அவனருகே ஒரு சிறுமி 'ஐயா... சிறுபெண் ஏழையென்பால் மனமிரங்காதா?' பாடுவாள்.

நான் சொல்வது ஸ்ரீரங்கம் ரயில்நிலையம், கார்டு லைனில் மீட்டர்கேஜில் இருந்த சமயம். நீராவி இன்ஜின்களின் சமயம். அதுவும் அந்த பாசஞ்சருக்கென்று சோனி இன்ஜின். புகையும் நீராவியும் பிரமாதமாக கக்குமே ஒழிய, வேகம் பிடித்து நான் பார்த்ததில்லை. அதனால்தான் ஒரு நாள் அதில் ' மோஷ'னில் ஏறப் போந்தேன் (அதுபற்றி அப்புறம்). சாதாரணமாகப் புறப்படும் போதே சக்கரங்கள் கொஞ்சம் வழுக்கும். பெரிசாகச் சுவாசிக்கும். பலவிதமான முக்கல் சத்தங்கள் கேட்கும். அந்த இன்ஜினை இப்போது டெல்லி மியூஸியத்தில் பார்க்கலாம்.

ஆபீஸர்ஸ் டிரெய்னில்தான் புரொபசர் பெருமாள்ராஜை முதலில் சந்தித்தேன்.

ஒரு முறை தள்ளிவைக்கப்பட்ட அரைவருடப் பரீட்சைக்கு அவசர அவசரமாகக் கடைசி நிமிஷம் வரை படித்துக்கொண்டிருந்ததால், ஒன்பது மணி சங்கு ஊதியதைக் கவனிக்கவில்லை. பாட்டி சொன்னாள், ‘‘ ஏண்டா இன்னிக்கு காலேஜ் லீவா?’’

……உண்டு பாட்டி. போணும் பாட்டி!’’

……சங்கு ஊதியாச்சு. ஃபுல்சூட் ஐயங்கார்கூடப் போயாச்சே?’’

ஐயங்கார் குடுமி பறக்கச் சென்றுவிட்டார் என்றால், அதன் பின் ரயிலைப் பிடிக்க சான்ஸே இல்லை!

……ஐயோ, பாட்டி... இன்னிக்கு எனக்குப் பரீட்சை!’’

தூரத்தில் ‘மே’ என்று லால்குடியின் குரலும் கேட்டது.

எதையோ அள்ளிப் போட்டுக் கொண்டு சகலங்களையும் சேகரித்துக்கொண்டு இரைக்க இரைக்க ஓடினேன். ஹைஸ்கூல் வாசலிலேயே ‘லால்’ லெவல் கிராஸிங்குக்கு வந்துவிட்டது. அன்றைக்குப் பார்த்து தாமதம் இல்லாமல் கிளம்பி நான் போய்ச் சேருவதற்குள் ரயில் புறப்பட்டு வேகம் பிடிக்க ஆரம்பித்து... எல்.வி. தெரிய ஆரம்பித்தது. நான் கூட ஓடினேன். எனக்கு ஓடுகிற ரயிலில் தொத்தி ஏறிப் பழக்கமே இல்லை. எத்தனையோ பிச்சைக் காரர்களும் வியாபாரிகளும் சக மாணவர்களும் தினம் செய்யும் காரியம்தான். எனக்குப் பயிற்சி இல்லாத தால் பரீட்சை தவறிவிட்டால் என்ன ஆகுமோ என்கிற கிலியில் பைத்தாரத் தனமாகக் கம்பியைப் பிடித்து ஏற முயற்சித்தேன். நல்ல உயரம். ஒரு தடவை என்னை ரயில் இழுத்து ஒரு விசிறு விசிறியது. நான் காலி என்று நினைத்தேன். நல்லவேளை, கதவருகே நின்றவர் என்னை அப்படியே அணைத்து உள்ளே இழுத்து விட்டார். இல்லையேல் இந்தக் கதை எழுதியிருக்க முடியாது.

……என்ன தம்பி இத்தனை அவசரம்?’’

……ரயில் போய்ட்டா பரீட்சை போய்டும்!’’

……உயிர் போயிருக்குமே தம்பி.’’

பெரிசாக மூச்சுவிட்டுக் கொண்டேன். ‘ஹ.. ஹ..’ என்றேன்.

ஃப்ளாஸ்கிலிருந்து காபி கொஞ்சம் மூடியில் கொட்டிக் கொடுத்தார்.

……இனிமே இந்த மாதிரி செய்யாதே’’ என்றார் என்னைக் காப்பாற்றியவர்.

……ஐயா... உங்களுக்கு எப்படி நன்றி சொல்றதுன்னே தெரியலை!’’

……உன் பேரு என்ன?’’

சொன்னேன்.

……என் பேரு பெருமாள் ராஜ்.’’

……உங்களுக்கு எப்படி நன்றி சொல்றதுன்னே...’’

……சமயம் வரப்ப சொல்றேன். நீ ஸ்ரீரங்கம்தானே?’’

……ஆமா.’’

அவருக்கு முப்பது வயதிருக் கலாம். கையில் கறுப்பு ரெக்ஸின் பெட்டி வைத்திருந்தார். அமெரிக்கன் கிராப். பென்சில் மீசை வைத்து, சந்திரலேகாவில் ரஞ்சன்போல ஷோக்காகத்தான் இருந்தார். கண்களில் லேசாக மைதடவினாற்போல இருந்தது. எலுமிச்சை மஞ்சளில் பளிச்சென்று சட்டை அணிந்திருந்தார். அதன் கழுத்தில் ஒரு ‘போ’ டை, பட்டாம் பூச்சி போல இருந்தது. ஒருக்கால் ஏதாவது சர்க்கஸில் யானை,

சிங்கம் பழக்குபவராக இருக்குமோ என்று யோசித்தேன். திருச்சிக்கு ஜெமினி சர்க்கஸ் போன மாதமே வந்து போய்விட்டதே!

......நான் வாளாடிலருந்து தினம் வரேன். வாளாடி புள்ளம்பாடி எங்கருக்குத் தெரியுமா?''

......நான் கொள்ளிடம் பாலந்தாண்டி வடக்கே பிச்சாண்டார் கோயில் கூடப் போனதில்லை.''

......ஸ்ரீரங்கத்தில் எந்த வீதி?''

......கீழச் சித்திரைவீதி.''

......ஸ்ரீனிவாசநகர்னு ஒரு காலனி இருக்கா?''

......ஆமா லெவல்கிராஸிங் தாண்டி... ஏன்?''

......சும்மாதான்.''

மறுதினம் வண்டியின் வாசலில் நின்றுகொண்டு என்னை வரவேற்றார் அதே மஞ்சள் சட்டை. பட்டாம் பூச்சி டை. என்னைப் பார்த்ததும், ''ரங்கராஜி இங்க வா...''

......எம் பேரு ரங்கராஜி இல்லைங்க. ரங்கராஜன்.''

......எனக்கு நீ ராஜிதான்.''

ஒரு முறை பிராக்டிகல் கட் அடித்துவிட்டு கெயிட்டியில் 'ஆவாரா' பார்த்துவிட்டுத் திரும்பும்போது பாட்டிக்கு லேட்டானதற்கு என்ன காரணம் பாக்கியிருக்கிறது என யோசித்து நடந்து கொண்டிருந்தேன்.

தெப்பக்குளத்தருகில் ''ராஜி'' என்று குரல் கேட்டது.

தெப்பக்குளத்தின் சுற்றுச் சுவரருகில் வெட்டவெளியில் உயரமான ஒரு ஸ்டாண்டின் மேல் பெட்டி வைத்துக் கொண்டு, ஒரு பெரிய லென்ஸ் வைத்துக்கொண்டு கைரேகை பார்த்துக் கொண்டிருந்தார்.

**புரொபசர் பெருமாள்ராஜ் எம்.ஐ.ஏ.ஏ.**

நான்கைந்து பேர் காத்திருந்தார்கள். அவர்களிடம் ஆளுக்கு நாலணா வாங்கிக்கொண்டு லென்ஸ் மூலம் கையைத் திருப்பித் திருப்பிப் பார்த்து விட்டு லேசாகப் புன்னகைத்துவிட்டு தியானம் போல கண்ணை மூடிக் கொண்டிருந்துவிட்டு, மடைதிறந்த பிரசங்கம்போல்,

......இஜ்ஜாதகருடைய கையில் தன ரேகையும் ஆயுள் ரேகையும் வலுவாக இருப்பதால் சமீபத்தில் ஏற்பட்ட உடலழற்சி மூலம் பவுத்திரம் ஃபிஸ்டுலா போன்ற உபாதைகளத்தனையும் விலகிப் போய், வரும் தை மாதத்துக்குள் அதாவது ஜனவரி பதினாலுக்குள் வடக்கேயிருந்து நல்ல சேதியும் வர வேண்டிய பணங்கள் குத்தகைப் பணங்கள் சம்பளங்கள் கொடுப்பினை களத்தனையும் வரும்'' என்று ஃபுல்ஸ்டாப் இல்லா மல் சொன்னார்.

கொடுத்த ஒரு ரூபாய் நோட்டை பஸ் கண்டக்டர் போல் மடித்துப் பெட்டி ஓரத்தில் செருகி பாக்கி சில்லறை கொடுத்துவிட்டு, ''நெக்ஸ்ட்'' என்று பெட்டியில் நாணயத்தால் தட்டி னார்.

......நடவுக்கு வெதை நெல் எடுக்க கடன் கேட்டிருக்கங்கய்யா'' என்றார் நாலணாவுக்கு ஜோஸ்யம் போதாத முந்தையவர்.

......மேல் வெவரம் வேணும்னா ஒரு ரூபாய் அட்வான்ஸ வெச்சுட்டு டீலக்ஸ் ஜோஸ்யம் பாத்துக் கறீங்களா..? மேலப்புலிவார் ரோட்டில பத்தாம் நம்பர்ல பத்து மணிக்கு வந்தா எல்லாப் பலாபலன்களும் சொல்றேன்.''

அந்த விவசாயி அவசர மாக, ''சின்னக்கடை வீதி வரை போய்ட்டு வரப்ப, வரேங்க'' என்று சொல்லிவிட்டுப் புறப்பட்டார்.

......இரு ராஜி முடிக்கிற சமயம் தான் என்ன தெகைச்சுப் போய் யோசிக்கிறே...''

......என்னவோ நீங்க பெரிய கடை வெச்சிருக்கறதா நெனைச்சேங்க.''

......மூலதனமில்லாத பெரிய கடை ஒரு மணி நேரத்துக்கு இருபது பேத்துக்கு பாத்துருவன். ஒரு மாதத்துக்கு ரயில்வே ஆபீஸருங்களவிட அதிகமா சம்பாதிக்கிறேன். லைட்டு போட்டு வெளிச்சம் கூடத் தேவையில்லை. விளம்பரம் இந்த போர்டு மட்டும்தான். ஜகஜ்ஜோதியா தெருவிளக்குங்க...

கிராமத்திலருந்து சரக்கெடுக்க வர்றவங்க அத்தனை பேரும் புரொபசர் ராஜ்கிட்ட கையைக் காட்டிட்டுத்தான் போவாங்க நல்ல சேதியா சொல்வேன் கெட்ட சேதிய மறைக்கமாட்டேன் இரு பத்மால காபி சாப்ட்டுட்டு போவோம்.'' என்றவர்,

......ராஜ், எங்கே உன் கையைக் காட்டு!'' என்றார்.

......எங்கிட்ட நாலணா இல்லை'' என்றேன்.

அவர் என்னை அடிபட்ட பார்வை பார்த்து, ''பாத்தியா... உங்கிட்ட காசு வாங்குவனா? உன்னால ஆகவேண்டி யது நிறையவே இருக்கு''

என் கையைப் பார்த்து, ''பிரமாதமான தனரேகை உண்டு. உனக்கு வாய்க்கப் போகிற பெண்ணால சௌபாக்கியங்கள் உண்டு.''

......இதெல்லாம் எங்க எழுதிருக்கு?''

......சீய்ரோ படிச்சிருக்கியா? இது ஒரு அற்புதமான சாஸ்திரம். கைரேகையில யும் மேடுகள்ளயும் விரல்களிலயும்தான் உன் வாழ்க்கையே எழுதி இருக்குது. இதபாரு... இது சந்திர மேடு. கற்பனாசக்தி. குழந்தைகளுடைய எண்ணிக்கை மூணு. படுக்கைல மஜா பண்ற திறமை எல்லாம் இதிலருந்து தெரியுது''

நான் கையை வேகமாக பின்வாங்க முயன்றேன். ''இது ஜூபிட்டருக்கு உண்டான மேடு. இது உனக்கு ஸ்ட்ராங்கா இருக்கு. உனக்கு ஈகோ ஜாஸ்தி. நிறைய சாதிக்கணும்னு வெறி இருக்கில்லை?''

......ம்... ஆமாங்க'' என்றேன், என்ன சாதிக்கவேண்டும் என்பதுதான் சரியாகப் புரியாமல். ''உன் கையைத் தொட்டுப் பார்த்தே எத்தனையோ சொல்லலாம். இது உழைக்காத கை, மிருதுவான கை, பெண்ணுடைய கை இது. இந்தக் கை படம்போடும். வாத்யம் வாசிக்கும்.''

......கிரிக்கெட் நல்லா ஆடுமா?''

......நான் சொல்றதில் நம்பிக்கை இல்லேல்லை?''

......உருப்படியா எதாவது சொல்லுங்க. 'ஆவாரா' மாதிரி ராஜ்கபூர் படம் இன்னொரு முறை பார்க்க சில்லறை வரும், கெமிஸ்ட்ரில தொண்ணூறு மார்க் வரும், இப்படி ஏதாவது சொன்னா... நடந்தா, நம்பறேன்.''

அவர் என் கட்டைவிரலை இப்போது ஆராய்ந்து கொண்டிருந்தார். அந்தத் தொடுகையிலேயே ஒரு நளின நாசூக்கு. இன்னும் கொஞ்சம் தொடலாம் போல இருந்தது. என்ன என்னவோ எண்ணிக்கை எடுத்தார். காகிதத்தில் கணக்குப் போட்டார். ''நிறைய வில்பவர்ப்பா உனக்கு. சரி உனக்காக ஒரே ஒரு விஷயம் – இந்த வாரம் நடக்கப் போற விஷயம் சொல்றேன்... உன் வீட்டு விலாசம் என்ன?''

......197, கீழ சித்திரை வீதி.''

......கூட்டினா எட்டு வருது. பரவாயில்லை, இதே விலாசத்துக்கு வியாழக் கிழமை ஒரு பொண்ணு உன்னை தேடிக்கிட்டு வரும். அவ பேரு ஜ எழுத்தில ஆரம்பிக்கும்.''

......அந்தப் பொண்ணு எதுக்கு என்னைத் தேடிண்டு வரணும்?''

......வர்றப்ப நீயே கேட்டுப் பாரேன்...''

வியாழக்கிழமை காலேஜிலிருந்து திரும்பியபோது பாட்டி, ''புது சகவாசம் எல்லாம் வராப்பல இருக்கு. உங்கப்பாவுக்கு லெட்டர் போடட்டுமா?''

……பாட்டி, என்ன சொல்றே?''

……யாரோ ஜயந்தியாம். திமுசுக்கட்டை மாதிரி ஒரு பொண்ணு உன்னைத் தேடிண்டு வந்தது. இல்லைன்னு சொல் லிட்டேன்!''

……பாட்டி, எனக்கு எந்த ஜயந்தியையும் தெரியாது.''

……உம் பேர் சொல்லி, ரங்கராஜு இருக்காரான்னு கேட்டுது.''

எனக்கு சட்டென்று பொறி தட்டியது. புரொபசர் பெருமாள்ராஜ் சொன்ன பெண்.

……என்னவாம்?''

……காயிதத்ல எழுதிக் கொடுத்துட்டுப் போயிருக்கா. நீ போற போக்கே சரியில்லை. கெட்ட சகவாசம். சிகரெட் குடிக்கிற தத்தாரிப் பசங்க ளோட சினிமா போறே. கேக்கவே நன்னால்லை!''

……பாட்டி, இதெல்லாம் சொல்லியாச்சு. அந்தப் பொண்ணு என்ன ஏதுன்னு விசாரிக்காம...''

……உனக்கு அந்தப் பொண்ணைத் தெரியுமா, தெரியாதா?''

……நிச்சயம் தெரியாது!''

……அப்றம் ஏன் உன்னைத் தேடிண்டு வரணும்?''

……விசாரிக்கறேன்...''

……ஒண்ணும் வேண்டாம். உனக்கு சம்பந்தமில்லைன்னா உடனே வெட்டிடணும். அலையறாளுக கெடந்து!''

……அந்தக் காயிதம் இருக்கா?''

……கிழிச்சுப் போட்டுட்டேன்.''

……நல்ல காரியம் பண்ணே...'' என்றேன் ஏமாற்றத்துடன்.

நல்லவேளை, நாலாகத்தான் கிழித் துக் குப்பைத்தொட்டியில் போட்டிருந்தாள். ஒட்டிப்பார்த்ததில் ஒரு ஸ்ரீனிவாச நகர் அட்ரஸ் எழுதியிருந்தது.

சேர்மன் வீட்டைத் தாண்டி ரயில்வே கேட்டுக்கு அந்தப் பக்கத்தில் இருந்தது அந்த வீடு. ஸ்ரீனிவாச நகர் என்பது ஸ்ரீரங்கத்தின் முதல் புறநகர். வசதியுள்ளவர்கள். தனி வீடுகள். தோட்டத்தோடு கட்டிக்கொண்டு குடியேறிய முதல் காலனி. அந்த வீட்டு வாசலில் ஆர். காளிதாஸ் என்று பெயர்ப்பலகை இருந்தது. ஒரு பிரவுனி நாய் கட்டியிருந்தது. வராந்தாவில் ஊஞ்சல் போட்டிருந்தது. நிறைய செடி கொடிகளும் வாதா மரமும் மாமரமு மாக பச்சு பச்சென்று இருந்தது. மல்லிகைப் பந்தல் இருந்தது. மஞ்சள் ரோஜாச்செடி இருந்தது. லட்சுமி சிலை தண்ணீர் ஊற்றிக் கொண்டிருந்தது.

……யாருப்பா?''

……ஜயந்தின்னு..''

……நீ யாரு?''

அந்த மாது, ''வா தம்பி உக்காரு'' என்று தம்ளரில் தண்ணீர் கொடுத்தாள். நடுத்தர வயதுப் பெண்மணி.

அவள் என்னை சந்தேகமாகக் கொஞ்ச நேரம் பார்த்தாள்.

......ஜயந்தி வரச் சொல்லிருந்தாங்க.''

......ரங்கராஜா கொட்டாய்ல படம் மாத்திட்டாங்களா?''

நான் விழிக்க, ஜயந்தி என்பவள் என்னை வந்து சந்தித்தாள்.

......வா மாடிக்குப் போலாம்'' என்றாள். எனக்கு பல்ஸ் எகிறியது.

பெண்மணி, ''அரிதாஸ் ஓடிக்கிட்டிருந்தது. எடுத்துட்டாங்களா?'' என்றாள்.

நான் யோசிக்க, ''இதுக்கெல்லாம் பதில் சொல்லிக் கிட்டிருக்காதே. கிறுக்கு இது. இந்த வீடே கிறுக்குப் பட்டாளம்'' என்றாள் ஜயந்தி.

மாடியில் தரையில் புலித்தோல் விரித்து தலைமட்டும் முழுசாக, கோபமாக இருந்தது. வீட்டில் யாரோ வேட்டைக்காரர் போலும். மான், கொம்புடன் சுவரில் எட்டிப் பார்த்துக் கொண்டிருந்தது. அருகே மாட்டியிருந் தது 'நிஜ துப்பாக்கியா?'

ஜயந்தி பாவாடை – மேலாக்கு அணிந்திருந்தாலும் வாட்டசாட்டமாக வயசு என்னைவிட அதிகம் – இருபதுக்கு மேல் இருக்கும். நிறைய நகை போட்டிருந்தாள். தங்க வளையல் எடுத்ததுக்கெல்லாம் சத்தம் பண்ணியது. என்னை உன்னிப்பாகப் பார்த்தாள்.

......யார்கிட்டேயும் சொல்லாதே!'' என்றாள்.

......என்ன?''

......உனக்கு பெருமாளை எப்படித் தெரியும்?''

எனக்கு கனெக்ஷன் புரிந்தது. ''அவர்தான் உன்னை அனுப்ச்சாரா?''

......ஆமாம். உன்னைப் பாக்கச் சொல்லி சேதி அனுப்பியிருந்தாரு. தினம் அவரை டிரெய்ன்ல பாக்கிறியாம்!'' என்றபடி தன் ரவிக்கையில் குத்தி யிருந்த பேனா எடுத்து சரசரவென்று ஒரு காகிதத்தில் எழுதினாள். ''மாள் கிட்ட கொடுத்துர்றியா? இந்தப் பைத்தியக்கார வூட்டுல ஒரு வாரம் தாங்காதுன்னு கண்டிஷனா சொல்லிரு. நல்லா இருக்கேன்னு சொல்லு. அவருக்குத்தான் காத்துக் கிட்டிருக்கேன்னு சொல்லு. கக்கூஸ் கூட தனியா போக விடமாட்டேங்கறாங்கன்னு. கல்யாணத்துக்கு மும்முரமா ஏற்பாடு பண்றாங்கனு சொல்லு. சொல்லு... இதை எப்படியா வது அவர்கிட்ட சேத்துரு!''

......உனக்கு பெருமாள் ராஜை எப்படித் தெரியும்?'' என்றேன்.

......அது பெரிய கதை. கைரேகை பார்க்கத்தான் முதல்ல போனேன். கையைத் தொட்டுட்டு உள்ளத்தைத் தொட்டுட்டாரு. அப்றம் சொல்றேன்'' என்று கண் சிமிட்டினாள். எனக்குப் பெருமாள் மேல் பொறாமையாக இருந்தது. ''பெருமாள் பெரிய ஆளு தான்!'' என்றேன். அவள் அந்தக் கடிதத்தை என்னி டம் கொடுக்கும்போது, ''ஜயந்தி'' என்று குரல் கேட்டது.

......ஐயோ... வந்துட்டான் அப்பன். பாடம் படிக்க வந்ததாச் சொல்லு. என்ன? பயப்படாத... சமாளிக்கலாம்'' என்றாள்.

மரப்படிகளில் ஏறிவரும் சத்தம் கேட்டது. காலடி ஓசையே அதட்டலாக இருந்தது.

......ஜயந்தி, என்ன பேச்சுக் குரல் கேக்குது?''

அவர் லெக் அம்பயர் மாதிரி தொப்பி வைத்திருந்தார். பெரிசாக மீசை. என்னைக் கண்களால் பதம் பார்த்தார்.

......யாருப்பா நீ?''

……நைனா... இது வந்து கிளாஸ்மேட். உஷாவுடைய தம்பி. நோட்ஸ் கொடுக்க வந்திருக்கான்.''

சுற்றுமுற்றும் பார்த்தார். சுவரில் மாட்டியிருக் கும் துப்பாக்கியைப் பார்த்தார். பத்து நிமிஷத்துக்குள் அதைப் பிரயோகிக்கும் உத்தேசம் கண் களில் தெரிந்தது.

……ஏய் பக்கெட் சாம்பார், தயிர்வடை, யார் அனுப்னது... உண்மை சொல்லு!''

நான் அவளைப் பார்த்தேன். கிடைத்த சின்ன சந்தர்ப்பத்தில் 'சொல்லாதே' என்று சைகை செய்தாள். அவர் என்னருகே வந்து காலரைப் பிடித்தார். ''லொக் லொக்'' என்றேன்.

……யாரையாவது, எதாச்சும் பார்க்கறேன்னு தெரிஞ்சுது... சுட்டுப்போட்டு மான் தலை பக்கத்தில் மாட்டிருவேன். உனக்கும்தான். கைல என்ன? காயிதம் கொடுத்தாளா?''

……இல்லைங்களே... பஸ் டிக்கெட் – காலாவதியானது.''

……கையக் காட்டு.''

காட்டினேன்.

……பையைக் காட்டு...''

காட்டினேன். ''நை...னா... ஆனாலும் நீங்க மோசம். இந்தப் பையனைப் பார்த்தா எத்தனை சாது?''

……பின்ன எதுக்கு வந்தே?''

ஜயந்தி மேல் பரிவு வந்துவிட்டது. அவள் என்னை அழுத்தமாகப் பார்த்த பார்வை 'பொய் சொல்... பொய் சொல்' என்று கட்டளையிட்டது. ''சொல்றேனில்லை... எங்கக்கா, ஜயந்தி கிளாஸ்மேட்டு.''

……இப்ப என்ன பண்ணுது உங்கக்கா?''

……மேற்கொண்டு படிக்கலை. வீட்டில வீணை கத்துக்கிட்டிருக்கா. அவதான் பொறந்த நாளைக்கு கூப்பிட்டு வரச் சொன்னா'' இஷ்டத்துக்கு சுத்தினேன். எனக்கு அக்காவே கிடையாது.

……ஜயந்தி வூட்டைவிட்டு வரமாட்டான்னு சொல்லு. வேணும்னா உங்கக்கா வந்து பாத்துக்கட்டும், பொம்பளைங்க... உம்மாதிரி தயிர்வடை பசங்கன்னா பரவால்லை. நீ ஐயங்கார்தானே? யாரோ பேமானி பையனைப் பாத்து வெச்சிருக்கா. சொல்லமாட்டா... அழுத்தக்காரி!''

……நைனா!'' என்றாள் அதட்டலாக.

……நான் நோட்ஸ் கொடுக்க வந்தேன் ஆமாம்.''

……எந்தத் தெரு?''

……தெற்கு அடைய வளைஞ்சான்.''

மாற்றிச் சொன்னேன்.

……அங்க கண் டாக்டர் இருக்காரே... அந்த வூடா?''

……பக்கத்தில்'' என்றேன்.

தன் மகளைக் கடுமையாகப் பார்த்தார். ''இது ஓடுகாலி. எப்படிச் செல்லம் கொடுத்து ராஜாத்தி மாதிரி வளத்தேன் தெரியுமா? ஒரே பொண்ணு. ஆயி வேற சரியில்லை. அரைக்கிறுக்கு?!'' அவர் சென்றதும்தான் நான் மூச்சுவிட்டேன். ஜயந்தி ''ஸாரிடா'' என்று என் தலையை மார்போடு அணைத்து, '' நல்லவேளை சமாளிச்சே. லெட்டரை என்ன பண்ணே?'' என்றாள்.

நான் வாயிலிருந்து எடுத்துக் காட்டினேன். ''வேற எழுதிக் கொடுத்துரு!''

கன்னத்தில் முத்தமிட்டாள்.

......ஆமடா'' என்றேன் மறுதினம் ரங்கு கடையில்.

......எப்படி இருந்தது?'' ''ஜில்லுனு இருந்தது வாசனையா..''

......உதைபடப்போறே. மஞ்சச் சட்டையும் மாட்டப் போறான். அந்தாள் காளிதாஸ்... யாரு தெரியுமோ? கள்ளுக்கடைக் குத்தகைக்காரன். நுங்கு சீவறாப்பல சீவிடுவான்.''

......நான் முட்டாளில்லை ரங்கு. தெற்கு அடையவளைஞ் சான்னு தப்பா விலாசம் சொல்லிட்டு, பேர்கூடச் சொல்லலை.''

......அவ அப்பனால கண்டுபிடிக்க முடியாதுன்னு நினைக்கிறயா? பைத்தியக்காரா. அந்தப் பொண்ணு உங்காத்துக்கு வந்ததா இல்லையா?''

......ஆமாம்.''

......அவளை வேவு பாத்திருக்கமாட்டான்னு என்ன நிச்சயம்?''

......ஆமடா... சொல்லாதே எனக்கு பாத்ரூம் வரது!''

மனசாட்சி தலையெடுத்ததை ஆர்வமும் பொறாமையும் வென்றுவிட, அந்தக் கடிதத்தைப் படித்தும் விட்டேன்.

...என் தெய்வமே! புதன் கிழமைக்காகக் காத்திருப்பேன். வரவில்லையென்றால் என்னை மறந்துவிடவும். இறந்து போவேன்.'

மறுதினம் லால்குடி பாசஞ்சரில் பெருமாள் ஆவலுடன் எனக்குக் காத்திருந்தார். வண்டி பிளாட்பாரத்தில் நிற்பதற்குள் ''ராஜி வா இங்க வா...'' என்று அனைவரும் திரும்பிப் பார்க்கும் படி கூப்பிட்டார்.

நான் வண்டியில் ஏறிக் கொண்டதும்,

......பாத்தியா ஜயந்தியை?''

......என்ன சார்... விவகாரம் இப்படின்னு சொல்லியிருக்க வேண்டாமா? வெட்டிவம்பில மாட்டிவிட்டு ட்டிங்க!''

......ஏன்... என்ன ஆச்சு?''

......அந்தாளு கோவக்காரர். துப்பாக்கியைத் தூக்கிட்டார்.''

......அவ என்ன சொன்னா?''

நான் கடிதத்தை இங்குமங்கும் பார்த்து விட்டுக் கொடுத்தேன். ''தப்பிச்சது தம்பிரான் புண்ணியம். இனிமே இந்த தூது வேலைக்கெல்லாம் என்னைப் பயன்படுத்தாதீங்க.''

......தாங்க்ஸ் ராஜி. இந்த உதவியை என்னிக்கும் மறக்கமாட்டேன். இனிமே எங்களால உனக்கு எந்தத் தொந்தரவும் வராது!''

......ஒரே ஒரு விஷயம் தெரிஞ்சுக்கலாமா?''

......தெரியும். என்னையும் அந்தப் பொண்ணையும் பொருத்த முடியலைன்னு கேப்பே. அதான் லவ். அப்புறம் புரியும். அந்தப் பொண்ணை நான் கல்யாணம் பண்ணிக்கப் போறேன். எந்த... எந்த இவனும் தடுக்க முடியாது. நீயும் தாலூகாபீஸ் வரியா?''

......ஆளை விடுங்க சார்!''

புதன்கிழமை சென்ஜோசப்பில் அரைநாள் வாராந்திர லீவு. மத்யானம் வந்ததும் ரங்கு கடையில் ஒரு அன்ரூல்டு வாங்கப் போனபோது ரங்கு, ''நீ இன்னம் உயிரோட இருக்கியா?'' என்றான்.

......ஏன் ரங்கு?''

......தெற்குவீதில நம்ம சுந்தாச்சு இல்லை... மொட்டை கோபுரத்துக்குள்ள கடையில உக்கார்ந்திருப்பானே மஞ்சச்சட்டை போட்டுண்டு..''

......ஆமா..''

......அவனை காளிதாசுடைய ஆட்கள் ஓட ஓட விரட்டி நாயடி அடிச்சுட்டாங்களாம். அப்புறம்தான் ஆள்மாறாட்டம், சீனிவாசநகர்ப் பக்கமே போனதில்லைன்னு மூதரிச்சப்றம்தான் விட்டாங்களாம். இப்பதான் உன்னைத் தேடிண்டு நாலு பேர் வந்தாங்க. பாட்டிகிட்ட கேட்டிருக்கான். விஷயம் தெரியாம ரங்கு கடைக்கு அனுப்பிச்சிருக்கா.''

......என்னையா?''

......உன் முப்பத்திரண்டு பல்லையும் பேத்துக் கைகால் எலும்பெல்லாம் முறிக்கப்போறதா சொல்லிருக்காங்க!''

......ஐயோ...''

......நீ என்னடா கிருஷ்ண பரமாத் வா? எதுக்குடா... யாரோ, யாரையோ காதல் பண்ணட்டும். நீ தூது போற? தான் கெட்டதும் இல்லாம சந்திர புஷ்கரணியையும் கெடுத்தானாம்ங்கற மாதிரி என்னைப் போட்டு ரெண்டு சாத்துச் சாத்திட்டுப் போனாங்க. நல்லவேளை, அடையாளம் சொன்னனோ... விட்டாங்க. சுந்தாச்சு மாட்டிண்டான் பாவம்.''

......என்ன அடையாளம் ரங்கு?''

......நீதான் சொல்லிருக்கியே உன் புது சினேகிதனைப் பத்தி? மஞ்சள் சட்டை, கழுத்தில் பட்டாம்பூச்சி டை, தெப்பக்குளத்தின் பக்கத்திலன்னு...''

......ஐயோ... எதுக்குரா சொன்ன?''

......இல்லாட்டா? கொத்தா அள்ளிப்பிடிச்சுத் திருகிண்டே கேட்டா, எவனும் ஆண்டவனையே காட்டிக் கொடுத்துடமாட்டானா? மஞ்சச் சட்டை போட்டுண்டிருந்தவாளெல்லாம் அடிக்கறானுவளாம். ரொம்ப வலிச்சுதுரா. குரலே கம்மிப் போச்சே, தெரியலை?''

எனக்கு உள்ளம் பதறியது.

......இன்னேரம் உன் புரொபசர் காலி. கிறிஸ்தவாளா? எரிப்பாளா, புதைப்பாளாடா?''

நான் மற்ற எதையும் யோசிக்காமல் பஸ் ஸ்டாண்டுக்கு ஓடி மெயின்கார்ட் கேட்டுக்கு டிக்கெட் எடுத்து தெப்பக்குளத்தருகே புரொபசரின் ஆஸ்தான இடத்துக்கு ஓடினேன்.

காலியாக இருந்தது.

அருகே பதினைந்து அடி தள்ளி 'புரொபசர் யோகேச்வரன், ஆரூட நிபுணர்' என்று ஒருவர் நின்று விவசாயிகளுக்கு ரேகை பார்த்துச் சொல்லிக் கொண்டிருந்தார்.

......ஐயா, இங்க புரொபசர் பெருமாள் ராஜ்னு...''

......அவரை புதன்கிழமைலருந்து காணலைப்பா. ஏதாவது தகவல் தெரியுமா... யாரோ சொன்னாங்க?''

நான் மேலே கேட்க விருப்பமின்றி நொந்து போய் தொய்ந்துபோய் தெப்பக்குளத்தின் பக்கத்துக் கட்டைச் சுவரில் சாய்ந்து கொண்டு தலையைப் பிடித்துக்கொண்டு உட்கார்ந்தேன்.

அதற்கப்புறம் பெருமாளை நான் பார்க்கவில்லை. ஜயந்திக்கு என்ன ஆச்சு? விசாரிக்க ஸ்ரீனிவாச நகர் போக தைரியம் இல்லை. கால்வருடப் பரீட்சை முடிந்து மைக்கெல்மாஸ் லீவு விட்டிருந்தார்கள். ஒவ்வொரு முறையும் தெப்பக்குளத்தைக் கடந்து செல்கையில் அந்த வெற்றிடத்தைக் குற்ற உணர்ச்சியுடன் பார்த்துக் கொண்டுதான் செல்வேன். லீவு முடிந்து மறுபடி காலேஜ் போவதில் அசதியுடன் வருத்தமும் இந்த முறை இருந்தது. இப்போதெல்லாம் ஜன்னலோரம் ஸீட் கிடைத்தால் பட்டென்று உட்கார்ந்துவிடுகிறேன். சீட்டாட்டத்தைக் கவனிப்ப தில்லை. திருப்புகழ் பஜனை டிரெய்னில் ஏறுவதில்லை. வியாபாரிகளும் பிச்சைக்காரர்களும் வண்டி தாவிக் கொண்டிருக்க, அவர்களைக் கவனிப்பதை நிறுத்திவிட்டேன். நான் உண்டு என் படங்கள் உண்டு. லால்குடி பாசஞ்சர் எனக்குப் பொலிவிழந்து விட்டது.

ஒரு முறை 'ஐயா... சிறுபெண் ஏழையென்பால் மனமிரங்காதா?' என்று ஒரு பிச்சைக்காரச் சிறுமியின் ' கணீர்' பாடலும் அவள் தோளில் கைவைத்த பிச்சைக்காரனும் என் கவனத்தைக் கவர்ந்தார்கள்.

காரணம், அவனும் அந்தப் பெண்ணும் தம் ஏழ்மைக்குப் பொருத்தமில்லாத சட்டை அணிந்திருந்தார்கள். மஞ்சள் சட்டை.

......இங்க வாய்யா... இந்தச் சட்டையை யார் கொடுத்தாங்க?''

......உங்க மாதிரி ஒரு சீமானுங்க. பெரிய மனுசங்க. முன்னல்லாம் நெதம் இந்த வண்டிலதான் வருவாரு. ரேகை பாக்கறவரு. ஒரு நா என்னைக் கூப்ட்டு ஆறு சட்டை மஞ்ச கலர்ல கொடுத்தாருங்க'' என்று அடுத்த பெட்டிக்குத் தாவினான்.

நான் இதன் முழு அர்த்தம் புரியாமல் திகைத்துக்கொண்டிருக்க... ''ரங்கராஜி'' என்ற குரல் கேட்டுத் திடுக்கிட்டேன்.

புரொபசர் பெருமாள்ராஜ் முழுவதும் மாறியிருந்தார். மஞ்சள் சட்டை கிடையாது. கருநீல அரைக்கை சட்டை. கிராப்பை மாற்றி நேர் வகிடெடுத்திருந்தார். வெயில் கண்ணாடி அணிந்திருந்தார்.

......கம்பெனி ரெப்பா இருக்கேன் ராஜி.''

......சார்... ரொம்ப பயந்து போய்ட்டேன். உங்களுக்கு ஒண்ணும் ஆகலியே?''

......தப்பிச்சேன்பா. ரௌடிப்பசங்க மஞ்ச சட்டைங்களைத் துரத்தி அடிக்கறாங்கன்னு கேள்விப்பட்டதுமே கம்ப்ளீட்டா அடையாளம் மாறிட்டேன். இப்ப என் பேரு ராஜ்மாள்.''

......ஜயந்தி?''

......பத்திரமா புள்ளம்பாடில இருக்குது. யாருக்கும் சொல்லாதே. காளிதாஸ் ஆளுங்க இன்னும் தேடிக்கிட்டிருக்காங்க. ஒரு முறை வீட்டுக்கு வா. கொஞ்சம் களைப்பில இருக்கு. பொண்ணு பொறந்தா ராஜின்னும்.. பிள்ளைன்னா ரங்கராஜின்னும் வெக்கப் போறேன்.''

......ரங்கராஜன் சார்'' என்றேன்.

---

# ஸ்ரீரங்கத்து தேவதைகள்

★ சுஜாதா



# ராமன்

தொத்தார் பூங்குழல் கன்னி ஒருத்தியை சோலைத்தடம் கொண்டுபுக்கு
முத்தார் கொங்கைபுணர்ந்து இராநாழிகை மூவேழு சென்றபின் வந்தாய்...

**– பெரியாழ்வார்**

புண்ணியத்தலமானதால் ஸ்ரீரங்கம் தொழில்துறையில் முன்னேறவில்லை. அரங்கநாதப் பெருமாள் சார்ந்த சிறுதொழில்கள் தான் அதிகம். தொன்னை தைப்பார்கள். கதம்பம்

மல்லிகை பூ கட்டுவார்கள் பூப்பல்லக்கு கட்டுவார்கள். சந்தனம் அரைப்பார்கள். தெற்குவாச லில் புனுகுப்பூனை வைத்து வாசனைத் திரவியங்கள் தயாரிப்பார் ஒருவர். தேர் இழுக்க வடம் கொண்டு வருவார்கள். சீசந்திக்கு கிருஷ்ணன் கோட்டை வாசலில் சுண்ணாம்பு அடித்து, மீசை வைத்த ஆசாமிகள் பொட்டுவைத்த பெண்கள் சித்திரங்களைக் காவி வண்ணத்தில் வரைவார்கள். சிறு தொழில்கள்தான் இருந்தன. எஸ்.எஸ்.எல்.சி. வரை நான் பார்த்த சிக்கலான தொழில்நுட்பங்கள் சாணை பிடிப்பதும் தரையில் துருத்தி வைத்து ஈயம் பூசுவதும்தான். ஒரு டார்ச்லைட் ரிப்பேருக்குக்கூட கோட்டைக்குத்தான் செல்லவேண்டும். திருச்சியும் அப்படி ஒன்றும் பெரிசாக முன்னேறவில்லை. காவிரிப் பாசனத் தால் நெல், நெல், நெல், வாழைதான். கரும்பு ஆரம்பித்திருந்தது. மின்சார மீட்டர்கள் தயாரிக்கும் ஒரு தொழிற்சாலை இருந்தது. சில பல லேத்துப்பட்டறைகள் இருந்தன. ஜங்ஷன் போகும் வழியில் டி.வி.எஸ். இருந்தது. கோல்டன் ராக் – பொன்மலையில் ரயில்வே வொர்க் ஷாப். ராமகிருஷ்ணா தியேட்டர். எதிரில் ஹாட்டின் பீடி தொழிற் சாலை. உறையூரில் சுருட்டு... அவ்வளவுதான். பி.எச். இ.எல்., ஸ்மால் ஆர்ம்ஸ் ஃபாக்டரி எல்லாம் வராத நாட்கள். திருச்சி ஒரு கல்வி மையமாகத்தான் பெயர் பெற்றிருந்தது.

இந்தச் சூழ்நிலையில் ஆர். வீர ராகவ ஐயங்கார் ஒரு புரட்சியைத் துவக்கி வைத்தார் என்றுதான் சொல்ல வேண்டும். ஸ்ரீரங்கத்தை ஒரு தொழில் பேட்டையாக்கும் முன்னோடியாக விரும்பினார். ரயில்வே கேட் தாண்டி அந்தப் பக்கம் இருந்த ஹ்யூம் பைப் கம்பெனியை பெரிசாக தொழிற்சாலை என்று சொல்லமாட்டேன். பெரிய வட்டவடிவ கான்க்ரீட் குழாய்கள் எங்கோ பாதாள சாக்கடை போடுவதற்கு இங்கே போட்டு அனுப்பப்பட்டன. மற்றபடி தென்னஞ்சோலை. அதில் அவருக்கு தோப்பு இருந்தது.

அங்கே ‘வி.ஆர். இண்டஸ்ட்ரீஸ்’ என்று ஆரம்பித்து முதன் முதலாக, இப்போது எங்கு பார்த்தாலும் சீப்படுகிறதே கிரைண்டர்கள், அவற்றை மோட்டாருடன் தயாரிக்கத் தொழிற்சாலை நிறுவினார். வீயார்தான் மானேஜிங் டைரக்டர் அவர் மச்சினன் தேவநாதன் பார்ட்னர், ஆடிட்டர், அக்கௌண்டண்ட் எல்லாம். மகன் கோபால் என் க்ளாஸ்மேட், எம்.ஐ.டி–யில், வெகு வேகமாக ஓடிவந்து ரொம்ப ஸ்லோவாக ‘போல்’ பண்ணுவான் அவன். இதைப் பற்றிக் கவலைப்படாமல் அப்பாவின் ஃபாக்டரியைப் பற்றிக் கேட்கும்போது ‘போது போகலை... அது என்னவோ பண்ணிண்டிருக்கு!’ என்று அஃறிணை யில் பேசுவான். ஒருமுறை போய்ப் பார்த்தேன். அஸ்பெஸ்டாஸ் கூடத்தில் சுறுசுறுப்பாக இருந்தது. ஒரு ஓரத்தில் காயில் சுத்தும் கைமெஷின்கள் இருந்தன. மற்றொரு புறத்தில் பெஞ்ச் வைஸ் வைத்துத் தட்டிக்கொட்டி டின்ஸ்மித்துகள்

வேலை செய்து கொண்டிருந்தார்கள். பிறிதோர் ஓரத்தில் மோட்டார்களை அசெம்பிள் பண்ணிக்கொண்டிருந்தார்கள். அசெம்பிளி இன்ஸ்பெக்டர் ஒருவர் காதில் பென்சில் வைத்துக்கொண்டு எல்லோரையும் அதட்டிக் கொண்டிருந்தார். ஓவராலில் நான்கைந்து திருவானைக்காவல் பெண்கள் உலவினார்கள். பேக்கிங் செக்ஷன் தனியாக இருந்தது. பூர்த்தி செய்த கிரைண்டர்கள் ஓரத்தில் பளபளப்பாகக் காத்திருந்தன. தார் உருகிய வாசனை, டர்ப்பண்டைன் வாசனை, சால்டரிங் ஈயம் உருகும் வாசனை, கெரசின் வாசனை... எல் லாம் விரவியிருந்தது. ஒரு கண்ணாடித் தீவின் உள்ளே வி.ஆர். உட்கார்ந்து போன் பேசிக்கொண்டிருந்தார்.

சுமார் பத்துப் பன்னிரண்டு தொழிலாளர்கள், லாளிகள். தொழில் நுட்பம் வீ.ஆருடையதே. அவர் வடக்கே மெக்கானிக்கல் இன்ஜினீயரிங் படித்தவராம். மிலிட்டரியில் இருந்திருக்கிறார். இரண்டாவது உலக யுத்தத்தில் எகிப்தில் சண்டைபோட்டிருப்பதாக ரங்குவிடம் சொல்வார். அவனுக்கு அவரிடம் இருந்த சில அம்கு போட்டாக்கள் மீது பிரேமை. ஒரு தடவை காட்டியிருக்கிறான், ஷூவைக் கழட்டாமல் கெட்டகாரியம் பண்ணும் ஜோடிகள்.

வி.ஆரைப் பார்த்தால் தொழிலதிபர் போல் தெரியாது. நெற்றியில் ஒற்றை ஸ்ரீசூர்ணம், சாம்பு மூக்கு, வேஷ்டி, கோட்டு. ஒரு கிளார்க் மாதிரி இருப்பார். நல்ல செயல்திறன் உள்ளவர். மோட்டார் ஆர்மேச்சர், காயில் சுத்துவது டரான்ஸ்ஃபார்மர் டிஸைன் பட்றை வேலைகள் எல்லாம் அவருக்குத் தெரிந்திருந்தது. மற்ற சாமக்கிரியைகள் கல்லுரல் தகரஃப்ரேம் தற்கால டில்டிங் கிரைண்டர்களுடன் ஒப்பிட்டால் அவர் செய்தது புராதனம் ஆனாலும் அவருக்கு கோவையிலிருந்தும் மதுரையிலிருந்தும் ஆர்டர்கள் இருந்தன. ஒருமுறை ரங்கு கடையில் வீ.ஆரைப் பார்த்தேன்.

......என்ன ஓய் கொழிக்கிறீராமே... ஏண்டா நீயும் இன்ஜினீயர்தானே இவர் கம்பெனியில சேர்ந்துடேன். எதுக்கு டெல்லிக்கெல் லாம் இண்டர்வியூ போயிண்டு லோல் பட்டுண்டு...'' என்றான்.

வி.ஆர். என்னைப் பார்க்காமல், ''ரங்கு! எனக்கு எஸ்.எஸ்.எல்.சி., டிப்ளமா ஆசாமிகள் போதும். என் பையனையே சேர்த்துக்கலையே... இவாள்ளாம் அதிகம் படிச்சவா.''

......ஃபாக்டரி எப்படிப் போயிண்டிருக்கு?''

......எல்லாம் ரங்கநாதன் கிருபை'' அவர் இங்குமங்கும் சதிப்பார்வை பார்த்து, ''ஒரு ரகசியம் காப்பாத்து வியா?''

......காப்பாத்தறேன்... எங்கம்மா மேல சத்தியம்! சொல்லும்.''

......உங்கம்மா போய் பத்து வருஷம் ஆச்சேடா.''

......பரமபதத்தில் தினப்படி அக்கார அடிசில் சாட்டுண்டு இருக்கா. ராத்திரி கனால வரா. சொல்லும்.''

......சத்தியமா. இங்க உள்ளவா யார்ட்டயும் சொல்ல மாட்டயே?''

......ரங்கு, நான் புறப்படறேன்'' என்றேன்.

......இருப்பா... நீயும் இரு! ரங்கு எனக்கு கோயமுத்தூர்லருந்து ஒரு பெரிய ஆர்டர் வந்திருக்கு. எட்டு லட்சம் ரூபாய்க்கு.''

ரங்கு தாழ்வாகச் சீட்டியடித்தான்.

......அவா லேபலைப் போட்டுண்டு சிங்கப்பூருக்கு எக்ஸ்போர்ட் பண்றா. போட்டுக்கட்டுமே. நாய் வித்த காசு குலைக்குமா என்ன? யார்கிட்டயும் சொல்லாதே ரங்கு.''

......ரொம்ப சந்தோஷம். என் சின்ன மச்சினனுக்கு எதாவது வழிபண் ணுமே. கழுதை, மண்டபத்தில உக்காந்துண்டு பங்கி அடிச்சிண் டிருக்கான். வேலை போட்டுக் கொடுத்தா சந்தோஷப்படுவேன்.''

......பேர் என்ன?''

......ராமன்.''

நான் 'ஐயோ' என்று வாய் பொத்திக்கொண்டேன். ராமனை எனக்குத் தெரியும்.

......அனுப்பு. பேக்கிங் கேஸ்ல அட்ரஸ் எழுதற வேலை. கோணிஊசி, சாக்குப்பை தச்சு பேக் பண்ணணும்.''

......எட்டூருக்குப் பண்ணுவன். படிக்கலையே தவிர பதவிசு.''

......ராமனா.''

......சும்மார்றா சும்பா.''

அவர் போனதும் ''ரங்கு, அநியாயம். ராமனையா அனுப்பப்போற? தூணுக்கு புடவை கட்டிருந்தாகூட விடமாட்டானே.''

......மாறிட்டாண்டா. இப்பல்லாம் சொன்ன பேச்சு கேக்கறான். வேளைக்கு வந்து கொட்டிக்கறான். என் ஆம்டையாளுக்கு ஒத்தாசையா டீத்தூள், நெருப்புபெட்டி, ரேஷன் அரிசி எல்லாம் வாங்கிண்டு வரான். அந்த கன்னியப்பன்கிட்ட உதை வாங்கினப்புறம் பொம்மனாட்டி பக்கமே திரும்பறதில்லை. அவாள்ளாம் தெய்வம்ங்கறான். என்ன கொஞ்சம் காசு திருடுவான். அலமாரில நாலணாக்கு மேல வெக்கக்கூடாது!''

......அவனா?'' என்று உறுமிவிட்டு வந்தேன்.

ராமன் கீழசித்திரைவீதியிலும் வடக்கு வீதியிலும் கைவைக்க முயற்சிக்காத பெண்களே கிடையாது! ஓவர்சியர் பெண் மாலாவிலிருந்து ஆரம்பித்து செவளா என்கிற வீதி கூட்டுகிற பெண், பரட்டைத்தலை பைத்தியக்காரி முத்தம்மா வரை வயசு, ஜாதி, மனநிலை எந்த வித்தியாசமும் பார்க்காமல் 'இதுமட்டும் கெடைச்சா...' என்று முணமுணத்துக்கொண்டே கடையில் காலாட்டி உட்கார்ந்து கொண்டு கையாண்ட அழிச்சாட்டியன். 'அவனைப்போய் ஃபாக்டரி வேலைக்கு அனுப்ப ரங்கனுக்கு பைத்தியம் பிடித்திருக்க வேண்டும். அதும் பெண்கள் வேலை செய்யும் ஃபாக்டரிக்கு' என்று எண்ணினேன். மச்சினனானதால் கண்ணை மறைக் கிறது. வீ.ஆரிடம் சொல்விடலாம் என்றுதான் யோசித்தேன். அதற்குள் ராமன் ஃபாக்டரியில் சேர்ந்து விட்டான்.

பின் நான் ஒருமுறை டெல்லிக்கு யு.பி.எஸ்.சி. இண்டர்வியூவுக்குப் போய்த் திரும்பி வந்தபோது கடையில் வீ.ஆர். உட்கார்ந்திருந்தார். பெரிசாக ரங்குவிடம் வாதாடிக்கொண்டிருந்தார். ''போக்கடா ராஸ்கல்டா உம்மச்சினன். ஃபாக்டரில இருக்கற நாலு பெண் களையும் ட்ரான்ஸ்ஃபார்மர் காச்சற சேம்பர் பின்னாலயே... சேச்சே, இத்தனை மோசமான ஆளுன்னு முன்னாலயே சொல்லிருக்கணும் ரங்கு!''

......சரி... விடும்! அவனை நான் கண்டிச்சு வெக்கறேன்.''

......கண்டிச்சாவது... சீட்டைச் கிழிச்சுட்டேன். இன்னும் பத்து நாள் இருந்தா நாலையும் புள்ளைத்தாச்சி ஆக்கிடுவான்'' அவர் போனதும்,

......என்னாச்சு ரங்கு'' என்றேன்.

......ஒண்ணுல்லை! இவர் பெரிசு பண்றார். ராமன் போய் ஃபாக்டரில ரெண்டு மூணு குட்டி களோட கொஞ்சம் விஷமம் பண்ணிருக்கான். அதுல ஒண்ணு புருஷன்காரன் அருவாளைத் தீட் டிண்டு அவரை வெட்ட வந்துட்டான்.''

......என்ன ரங்கு, சாதாரணமா சொல்றே?''

......என்னடா இப்ப? இவன்தான் கையைப்புடிச்சு இழுத்தா அந்தப் பொண்ணுகளுக்கு புத்தி எங்க போச்சு?''

அப்போது ராமனே, ''அத்திம்பேரே! ஒரு எட்ணா குடுங்க அர்ஜண்டா. சக்கரத்தாழ்வாருக்கு வௌக்கேத்த நெய் வாங்கணும்'' என்று வந்தான்.

......படவா! நெய்யா வாங்கறே? என் வார்த்தைக்கு மதிப்பு வெச்சு வீரராகவ மாமா ஃபாக்டரிக்கு சேத்துண்டப்ப... தலை குனிய வச்சுட்டியே ராமா.''

ராமனைப் பார்த்தால் பெண் களிடம் அவன் வசீகரம் உடனே புரியும். மல் ஜிப்பா. கழுத்தில் துவளும் சங்கிலி. கன்னத்தில் அதக்கிய பன்னீர்புகையிலையின் கம். உதட்டில் லேசான வெற்றிலைக்காவிக்கறை. ஒழுங்கான பல்வரிசை. அப்படி ஒரு கொள்ளைகொள்ளும் சிரிப்பு. கனமான அழுத்தமான பாடிக்காட்டி விடக்கூடிய குரல் வளம். குறும்புத் தனமான கண்கள். கண்ணன் என்று பெயர் வைத்திருக்க வேண்டும்.

......அண்ணா, எப்படி இருக்கே? வேலை ஏதவாவது கெடைச்சுதா? நான்வேணா ஏற்பாடு எண்ணட்டு மா? நங்கவரம் பண்ணைல ஒரு பெரிய ஃபாக்டரி திறக்கபோறா.''

......ஒண்ணும் வேண்டாம். உனக்கு கொடுத்த வேலையை தக்க வெச்சுக்கோ முதல்ல!'' என்றான் ரங்கு. அவனுக்கு ரொம்ப கோபம். ராமன் அருகே வந்ததுமே ஒரு கலந்த வாசனை தூக்கியது. லட்சணமான போக்கிரி.

அப்போது ஒரு ஹைஸ்கூல் பெண் வந்து, ''மாமா, நாப்பது பக்கம் அன்ரூல்டு இருக்கா?''

......உனக்கில்லாமயா எச்சுமி'' என்று நோட்டை எடுத்து, கூட ஒரு காகித பென்சில், ரப்பர் எல்லாம் சேர்த்து அவளைக் கையைத் தொட்டுத் தடவிக்கொடுத்தான். ''எத்தனாவது படிக்கறே?''

......பத்தாவது மாமா.''

......அடுத்த வருஷம் எஸ்.எஸ்.எல்.சி. போகணும்.''

......ஆமாம் மாமா.''

......நன்னா படிக்கறயா? வயசுக்கு வந்துட்டியா? கோம்பளி எப்படி இருக்கா?''

......அக்கா சீவில்லிபுத்தூர் போயாச்சே.''

......பிரசவத்துக்கு வருவாளோல் லியோ?''

அவள் போவதைக் கண்களால் தொடர்ந்தான்.

ரங்கு, ''யார்றா கோம்பளி?'' என்றான்.

......இதுன் அக்கா கோமளா. நின்னு விளையாடும். முதல்ல ரங்கநாயகி. அப்புறம் அலமேலு. அப்புறம் கோம்பளி. அப்புறம் எச்சி. அதுக்கடுத்தது ஒண்ணு இருக்கு. பட்டுபட்டுங்கறா. முழு பேர் இன்னம் தெரியலை. பட்டாபிக்கு அஞ்சும் பொண்ணு. பீஜத்தில எதோ இருக்கு. அத்திம்பேரே, நீரும்தான் வருஷா வருஷம் முக்கறீர்... ஒரு புழு பூச்சி?'

என்னைப் பார்த்துக் கண்சிமிட்டி ''ரங்கநாயகிலருந்து எல்லாத்தையும் பாத்தாச்சு!'' என்றான்.

......புளுகு'' என்றேன் பொறாமையுடன்.

......ஒவ்வொண்ணும் அப்படி ஒரு அட்டகாசமான கட்டை. வரட்டும் விசாரிக்கறேன்.''

......பிள்ளைத்தாச்சியையா டேய்!''

......அதனால என்ன?'' என்றான். ''இப்பவே எவ்வளவு தலைமயிர் பாரு இதுக்கு... சாட்டை மாதிரி.''

......உன்னைப் பத்தித்தான் ராமா பேசிண்டிருந்தோம்.''

......என்னைப் பத்தி நல்லதா எதும் அத்திம்பேர் சொல்லமாட்டாரே...''

......அத்திம்பேர்னு கூப்டாதே. வம்சத் துரோகி. இப்ப அவருக்கு எட்டு லட்சம் ரூபாய்க்கு ஆர்டர் வந்திருக்கு. நீ மட்டும் அவர்கிட்ட ஒழுங்கா வேலை செய்திருந்தே... இந்நேரம் எங்கேயோ போயிருப்ப...''

......என்னது? எட்டு லட்சம் ரூபாயா?'' என்றான். அவன் கண்கள் விரிந்தன.

ரங்கு துணுக்குற்றான். வாக்கு மீறிவிட்டான். ''அதென்னவோ... சொன்னார். எனக்கு சரியா காதில விழலை.''

......எட்டு லட்சம் ரூபாயா? அடடா! தெரியாமப் போச்சே. அதான் அரசல் புரசலா எக்ஸ்போர்ட் ஆடர்னு பேசிண்டா. அப்படியா சேதி... ம் பாத்துர்றேன்.''

......வேண்டாம்டா. வாக்கு கொடுத்திருக்கேண்டா. யார்கிட்டயும் சொல்லலைன்னு!''

......பின்ன ஏன் என் கிட்ட சொன்னீங்க?''

......வாய் தவறி வந்துடுத்து. நீ அங்க போய் எதாவது வில்லங்கம் பண்ணி வெக்காதே.''

......நான் எதுக்கு பண்றேன். எனக்குத்தான் சொட்டை சீட்டுக் கிழிச்சுட்டானே. எட்டு நாளைக்கு வேலை செஞ்சிருக்கேன்... ஆறுநாள் சம்பளம்தான் கொடுத்தான். ஒரு நோட்டீஸ் உண்டா... ஒரு வார்னிங் உண்டா?'' என்று ராமன் தலையை ஆட்டிக் கொண்டே சென்றான். ''இரு.. இரு..''

அடுத்த வாரம் எனக்கு ஓ.சி.எஸ். வேலைக்கு யு.பி.எஸ்—ஸிலிருந்து இண்டர்வியு கார்டு வந்ததும், மறுபடி டெல்லிக்குப் போக வேண்டி இருந்தது. வி.ஆர். கடைக்கு வந்தபோது ரொம்ப உற்சாகமாக இருந்தார். '' சொன்ன டயத்தில் சப்ளை பண்ணிட்டேன். கஸ்டமர் ரொம்ப ஹாப்பி. ரங்கு, என் மச்சினன் கீழ நாராயணன்னும் ரங்கநாதன்னும் அக்கௌண்டண்ட் இருக்காங்க. அப்பழுக்கில்லாம பளிங்கு மாதிரி கணக்கு. ஒவ்வொரு வவுச்சரும் தேதி வாரியா ஃபைல்பண்ணி வெச்சிருக்கான். கமர்ஷியல்டாக்ஸ் ஆபீஸருக்கு ஸ்டேட்மெண்ட் அனுப்பிச்சிருக்கோம். பாரு... பாத்துட்டு அவருக்கு ரொம்ப சந்தோஷம். கண்ல ஒத்திண்டு 'வீர்ராகவன், நோ ப்ராப்ளம் அட்ஆல். உடனே க்ளியர் பண்ணிடறேன். என்னை வந்து ஆபீஸ்ல பாருங் கோ'ன்னு கூப்ட்டிருக்கார். ரங்கு, நான் பாக்யம் பண்ணவண்டா. சுத்துப்பட்ட மனுசாள்ளாம் ரொம்ப நல்லவா. ஒவ்வொருத்தனும் ஜெம், உன் மச்சினனைத் தவிர.''

......அவன் பேச்சை எடுக்காதேயும். என்னவோ உமக்கு நல்லது நடந்தா ஸ்ரீரங்கத்துக்கே நல்லது. ஃபாக்டரி பெரிசாயி ஸ்ரீரங்கத்தில பல பேருக்கு வேலை கொடுப்பீர்..''

......தாராளமா. அடுத்த வருஷம் நூறு பேரை ரெக்ரூட் பண்றதா ப்ளான். இந்த வருஷம் டாக்ஸ் போக நெட் ப்ராஃபிட் என்ன தெரியுமோ? '' ரங்கன் காதருகில் சொன்னார்.

அவன் ''இஸிட்!'' என்று வியந்தான். ''ஸ்ரீரங்கத்தில திண்ணை தேச்சுண்டிருக்கற அத்தனை மிராசுகளையும் அடிச்சுட்டீர்.''

அதன்பின் ஒரு வாரம் நான் அவரைப் பார்க்கவில்லை. தஞ்சாவூர் டீம் ஒன்று எங்களுடன் மேட்ச் ஆட வருகிறார்கள் என்று கேவி ஒரு டீம் தயாரித்துக் கொண்டிருக்க... நெட் ப்ராக்டீசில் பிசியாக இருந்துவிட்டேன். நான்தான் ஓபனிங் போக வேண்டும் என்று கேப்டன் அம்பி சொன்னான்.

ஒரு சாயங்காலம் ப்ராக்டீஸ் முடிந்து களைத்துத் திரும்பியபோது வி.ஆரும் களைத்துப் போய் கன்னத்தில் கைவைத்து உட்கார்ந்திருந்தார்.

என்னைப் பார்த்ததும், ''ரங்கு, உனக்கு கமர்ஷியல் டாக்ஸ் ஆபீஸ்ல யாரையாவது தெரியுமா?''

......தெரியாதே...''

......உங்கப்பா என்னவா இருக்கார்?''

......அவர் எலெக்ட்ரிசிட்டி டிபார்ட்மெண்டலன்னா இருக்கார். என்ன ப்ராப்ளம் ரங்கு?''

வி.ஆர். என்னை வேதனையுடன் பார்த்தார். ''பிக் ப்ராப்ளம், வெரி பிக் ப்ராப்ளம்...''

......என்னாச்சு...''

......ஏன் கேக்கறே... அன்னிக்கு ஆபீஸரை போய் பார்த்தேனா, அவன் முதல்ல என்ன சொன்னான்? கணக்கெல்லாம் சரியாத்தான் இருக்கு. க்ளியர் பண்ணிடறேன்னுதானே? இப்ப ரெண்டாயிரம் ரூபாய் கொடும்னான். நான் கணக்கு வழக்கெல்லாம் சரியா இருக்குன்னா எதுக்கு ரெண்டாயிரம் கொடு க்கணும்னேன்?''

......சரி, அப்டின்னா நாளைக்கு வந்து லெட்டர் வாங்கிண்டு போம்னான். செவ்வாக்கிழமை மூணு – நாலரை ராகு காலத்தில போனேன். அவன் லெட்டர் டைப் அடிச்சு கொடுத்திருக்கான் பாரு, மோட்டார் எக்சைஸபிள் அயிட்டமாம். க்ளாசிபிஃகேஷன் சரியில்லையாம். அம்பதாயிரம் டாக்ஸ் பாக்கி கட்டிருக்கணுமாம். உடனே கட்டினா கிளியரன்ஸ் தரேன்னான்.''

......கணக்கெல்லாம் சரியா இருந்துமா...''

......யார் கேக்கறது? ஏதோ ஒரு ஆக்ட்ல ஏதோ ஒரு கிளாஸை கோட் பண்றான்.''

......பேசாம ரெண்டாயிரம் ரூபாயை கொடுத்துர வேண்டியதுதானே...''

......எதுக்கு கொடுக்கணும்? கணக்குல தப்பு பண்ணேனா.. ஒவ்வொரு அயிட்டத்துக்கும் சின்னத் திருகாணி விடாம டேட் வாரியா வவுச்சர் காட்டி சேல் டாக்ஸ், சென்ட்ரல் – ஸ்டேட் டாக்ஸ் லொட்டு லொசுக்கு எல்லாம் காட்டி...''

......அதாவது இரண்டாயிரம் லஞ்சம் கேக்கறான்... மாட்டேங்கறீர்..''

......எதுக்கு கொடுக்கணும்... வென் மை அக்கௌண்ட் இஸ் ஃப்ளாலெஸ்? அப்புறம் ரெண்டாயிரத்தோட நிறுத்துவான்னு என்ன நிச்சயம்கறேன்?''

......இப்ப என்ன?''

......வக்கீல்கிட்ட கேட்டேன். உடனே கமிஷனருக்கு அப்பீல் போட்டிருக்கார். இந்த ஆர்டரை எதிர்த்து பெட்டிஷன் கொடுத்திருக்கேன்.''

......அவ்வளவுதானே..?''

......தீர்ப்பாற வரைக்கும் அம்பதா யிரத்துக்கு பேங் கியாரண்டி கொடுக்கணுமாம்.''

......கொடுத்தீரா?''

......வேற வழி? என்ன ஒரு அநியாயம் பார்த்தியா. ப்ளெட்ஜ் பண்ணி கடன் வாங்கினேன். அம்பதாயிரத்தைப் போட்டு எடுக்க முடியாது. சே... இந்த தேசத்தில ஒருத்தன் ஜனங்களுக்கு நல்லது பண்ண நெனச்சா, அதிகாரிகள் கரப்டா இருக்கறதால...''

......எனக்கென்னவோ ரெண்டாயிரத்தோட தொலையறதுன்னு குடுத்துறலாம்னு...''

அவர் முகம் சிவந்தது. ''ரங்கு, உன்னை மாதிரி ஆசாமிகள் இருக்கறதாலதான் இந்த தேசமே உருப்படல. அநியாயத்தை எதிர்க்கணுமா இல்லையா..?''

......வேற யாராவது எதுத்துட்டுப் போறா... இப்ப உம்ம சரக்கு போச்சா இல்லையா..?''

......இல்லை ரிலீஸ் ஆகலை. அப்பல்லேட் கமிஷனர் என்ன சொல்றார்ங்கறதைப் பொறுத்தது. நான் இதை விடமாட்டேன். சுப்ரீம் கோர்ட் வரை போவேன்.'' வி.ஆர். என்னைப் பார்த்தார்.

......என்ன சொல்றே, நான் சொல்றது ரைட்டா இல்லையா?''

ரங்குவுடன் ஒத்துப் போகலாம் என்றுதான் தோன்றியது. அவர் கோபத்தில் கன்னத்தில் பளார் என்று அறைந்து விடுவார் என்று தோன்றி யது.

......நீங்க செய்றதுதான் ரைட்டு மாமா...''

......தட்ஸ் தி ஸ்பிரிட். நம்ம நாட்ல இளைய சமுதாயத்துங்கிட்டதாண்டா நம்பிக்கை இருக்கு. ரங்கு, யாரோ எக்ஸ்போர்ட் ஆர்டரைப் பத்தி கமர்ஷியல் டாக்ஸ் ஆபீஸ்ல வத்தி வெச்சிருக்கான். நானா எக்ஸ்போர்ட் பண்றேன்? கோயமுத்தூர்காரன்னா பண்றான்.''

......யார் வத்தி வெச்சானோ... யாராயிருக்கும்?''

......யாராயிருக்கும்?'' என்று ரங்கு நெளிந்தான்.

......உன் மச்சினன்ட்ட இதைப் பத்தி பேசினியா?''

......சேச்சே!'' என்று ரங்கு என்னைப் பார்த்தான்.

அவர் போனதும் ''ரங்கு, ராமன்தான் இதை செய்திருக்கணும். வரான் பாரு. ராமா, உன் மேலதான் பலத்த சந்தேகம்.''

......என்ன சந்தேகம்?''

......டாக்ஸ் ஆபீஸ்ல வத்தி வெச்சிட்டியாமே...''

......நான்தான் சொன்னேன். என்ன திட்னானா? மவனே... என்னை அனுப்ச்ச இல்லை, இப்பப் பாரு... ஒரு மோட்டார் போகாது. சிங்கி அடிக்கப்போறது.''

......என்னடா இப்டி பண்ணிட்டே..''

......அதெல்லாம் இரக்கம் கூடாது அத்திம்பேர். நான் என்ன தப்பு செஞ்சேன்? டீ கொடுக்கறப்ப அங்க ஒரு பொண்ணு... என்னவோ பேர் சொன்னாளே முத்தம்மாவோ அங்கம்மாவோ.. டயம் கேட்டுது.. சொன்னேன். கண்ல தூசின்னுது ஊதினேன். புடவை தலைப்பை வெச்சு ஒத்தடம் கொடுத்தேன். இது தப்பா? ரவிக்கை பட்டன் போட்டுவிட்டேன்.''

......அவர் என்னமோ நீ ட்ரான்ஸ்ஃபார்மர் பின்னால அழைச்சுண்டு போனதா?''

......ஆமாம்! எல்லாருக்கும் முன்னால பட்டன் போட்டுவிட முடியுமா... அதும் கல்யாணம் ஆன கட்டை.''

......கேக்கவே நன்னால்லை ராமா..''

......இப்ப கூட அவர் எனக்கு வேலை தரவேண்டாம். கூட்டு வெச்சு வேலை குடுக்க ஆள் இருக்கு எனக்கு. என்னை எல்லாருக்கும் முன்னால அவமானப்படுத்தினது தப்புன்னு மன்னிப்பு கேக்கட்டும்... அவர் டாக்ஸ் பிரச்னையை தீர்த்து வெக்கறேன்னு சொல்லு!''

......ஒப்புத்துக்கமாட்டார். சுப்ரீம்கோர்ட் வரை வாதாடப் போறேன்னு சொல்லிருக்கார்.''

அலகாபாத்தில் டிரெயினிங் எடுத்து முடிந்து கல்கத்தா, பம்பாயில் பிராக்டிக்கல் போய்விட்டு மீனம்பாக் கத்தில் போஸ்டிங் பெற்று திரும்பி வர... நடுவே ஒரு வாரம் ஜாய்னிங் டைமின்போது ஸ்ரீரங்கம் வந்திருந் தேன்.

முதல் காரியமாக ''வி.ஆர். ஃபாக்டரி என்ன ஆச்சு?'' என்று ரங்குவைக் கேட்டேன்.

......வி.ஆர். போயிட்டாரே.. தெரியாது? 'இண்டு' ஆபிச்சுவரிலகூட வந்திருந்ததே.''

......அடப்பாவமே! எனக்கு தெரியாத போச்சே ரங்கு. வடக்கே போய்ட் டனா.. அந்த கேஸ் என்ன ஆச்சு?''

......அது இழுக்கடிச்சுது. அப்பெல் லேட் கமிஷனர் சாதகமாத்தான் தீர்ப்பு கொடுத்தார். இந்த பிராமணன் போய் ஆபீஸர் ரூம்ல போய் சத்தம் போட்டுட்டு, கன்னாபின்னான்னு அவனைத் திட்டியிருக்கார். கியாரண்டியை ரிலீஸ் பண்றதுக்கே முதல்ல இழுத்தடிச்சான். அப்புறம் அவரையே அந்த ஆபீஸர்

கூப்ட்டனுப்பிச்சான். ஏன் இந்த மாதிரி பிடிவாதமான இருக்கீர்? பேசாம ரெண்டாயிரம் ரூபா கொடுத்திருந்தா உம்ம ஃபைல் எல்லாத்தையுமே பாஸ் பண்ணியிருப் பேனில்லையா. அடுத்த கன்ஸைன் மெண்டையும் அதே காரணத்துக்காக நிறுத்தி வெக்கப் போறேன்னானாம்.''

......இதனால ரொம்ப நொந்து போய் பி.பி. எகிறிப்போய் எட்டு வருஷமானாலும் சரி, நியாயம் என் பக்கத்தில இருக்கறதால சொத்தையெல்லாம் அழிச்சுட்டு உன்னை மாதிரி கரப்ட் ஆசாமிகளை காட்டிக் கொடுத்துட்டுத்தான் மறு காரியம்னு கத்திட்டு வந்திருக்கார். அன்னி ராத்திரியே செரிப்ரல் எமர்ரேஜ் வந்து பதினஞ்சு நாள் கோமாவில இருந்து போய்ட்டார்.''

......ஐயோ, பாக்டரி என்ன ஆச்சு?''

......அவர் பையன் – உன் க்ளாஸ் மேட் கோபாலன்தான் எடுத்து நடத்தறான். நீயே போய்ப்பாரேன்.''

போனபோது கோபு, ''வா ரங்குஸ்கி... எப்படி இருக்க? டேய் டீ கொண்டாப்பா.''

......உங்கப்பா போய்ட்டாராமே... ரொம்ப சாரிடா கோபு. அவர்னா உதாரண புருஷர். ரொம்ப பிரின்சிப்பிள்டு மேன். கடைசி வரைக்கும் விட்டுக் கொடுக்காம லஞ்சம் கொடுக்க மாட்டேன்னுட்டாரே. அவர் மாதிரி மனுஷாள்ளாம் ரொம்ப ரேர் கோபு!'' என்று புகழ்ந்து தள்ளினேன். ''எப்படி அந்த டாக்ஸ் மேட்டரை சமாளிச்ச?''

......நானா, அவர் செத்துப் போய் சுபஸ்விகாரம் ஆன கையோட அந்த ஆபீஸரே வந்திருந்தான். பாத்து, கொடுக்க வேண்டிய பணத்தை ராமன் சாரை கொடுத்துரச் சொல்லிட்டேன். தொந்தரவு தீர்ந்தது.''

......ராமனா..''

......எப்படி இருக்கேண்ணா..''

ராமன் நீலத்தில் சீருடை அணிந் திருந்தான். 'வி.ஆர். இண்டஸ்ட்ரீஸ்' என்று பேட்ஜ் அணிந்திருந்தான். அதே வெற்றிலைக் காவிக்கறை. சிரிப்பு. வாயோரத்தில் அதக்கிய புகையிலை.

......ராமன் சார்தான் அட்மின் பார்த்துக்கறார். டாக்ஸ் ஆபீஸ்ல ப்ராப்ளமே இல்லை. என்ன பண்றது? எடுத்து நடத்த வேண்டியதாயிடுத்து. எனக்கு குவைத்தில ரிஃபைனரில வேலை காத்துண்டிருக்கு. அதுக்குள்ள இந்த ஃபாக்டரியை ஒரு வழி பண்ணி ஸ்திரப்படுத்திட்டு வித்துறலாம்னு பாத்தேன். பாத்தா பெரிய ஆப்பர்ச் சூனிட்டி டைவர்சிஃபை பண்ணிட்டேன். இப்ப சிங்கிள் ஃபேஸ், திரீ ஃபேஸ் டிரான்ஸ்ஃபார்மர்லாம் பண்றேன். நிறைய ஆர்டர்.''

ஃபாக்டரி விரிவடைந்திருந்தது வெளிப்படையாகத் தெரிந்தது.

......அப்பப்ப டாக்ஸ் ஆபீஸருக்கு ரூபாய் கொடுத்துர்றேன். அவா கோமில்க், வைகுண்ட ஏகாதசி பெருமாள் முத்தங்கி, ரத்னங்கி சேவைக்கெல்லாம் ஏற்பாடு பண்றது... மற்றதெல்லாம் ராமன்சார்தான் பாத்துக்கறார். இவருக்கு டாக்ஸ் ஆபீஸ்ல ஏகப்பட்ட நண்பர்கள். ஃபிலோமினான்னு ஒரு அசிஸ்டண்ட் இருக்காங்க. ரொம்ப நல்ல மாதிரி. நாம போகவே வேண்டியதில்லை. அவாளே வந்து உடனுக்குடனே ராமன் சார் ரூமுக்கு வந்து ஃபைலை க்ளியர் பண்ணிடறா. அது என்ன மேஜிக்கோ..''

கோபுவின் அலுவலக அறை நவீனமாக இருந்தது. டீ சாப்பிடும் போது, வீரராகவனின் போட்டோ பெரிசாக மாட்டப்பட்டிருந்தது.

......இருக்கேளா... பெரியவர் படத் துக்கு இன்னிக்கு வெள்ளிக்கிழமை பூஜை.''

வி.ஆரின் போட்டோவைப் பார்த் தேன். ரத்னா ஸ்டூடியோவில் பெரிது பண்ண போட்டோ. அவர் அங்கிருந்து மொத்தத் தொழிற்சாலையையும் மௌனமாக மேற்பார்வை பார்த்துக் கொண்டிருந்தார்.

......எப்பேர்ப்பட்ட மகாபுருஷன்! ரங்கநாதருக்கு அடுத்தபடியா எங்களுக்கு வி.ஆர்-தான்'' என்று ராமன் 'குலந்தரும் செல்வம் தரும்' பாடினான். அவனருகில் ஒரு டைப்பிஸ்ட் பயபக்தியுடன் நின்று கொண்டு அவளும் பாடி முடித்தாள்.

......உன்னை பார்த்த மாதிரி இருக்கே?'' என்றேன்.

......நம்ம எச்சுமி'' என்றான் ராமன்.

......அப்பா போட்டோவை திருப்பி வை'' என்று கோபுவிடம் சொன்னது அவனுக்குப் புரியவில்லை.

---

# ஸ்ரீரங்கத்து தேவதைகள்

★ சுஜாதா

......விடம் கலந்த பாம்பின்மேல்
நடம் பயின்ற நாதனே''

**– திருச்சந்த விருத்தம்**



பள்ளி நாட்களில் நான் 'வீரசிம்மன்' என்கிற நாடகத்தில் பெண்வேஷம் போட்டதையும் அப்போது என் வயசுக்காரர்களுக்கு ஓர் அரிஸ்டாட்டில் போல இருந்த வரதனைப் பற்றியும் ஸ்ரீரங்கத்து தேவதைகள் முதல் பாகத்தில் சொல்லியிருக்கிறேன். படித்தவர் களுக்கு ஞாபகம் இருக்கலாம். இந்த வரதன் ஜி. வரதன். ' ஜி.வி.'

என்ற பெயரில், அரு. ராமநாதனின் 'காதல்' பத்திரிகையில், 'சலனம்' என்ற ஒரு கதை எழுதியவன். இலக்கிய ஆர்வம் உள்ளவன். 'வீரசிம்மன்' உட்பட பல நாடகங் களை எழுதி நடித்தவன். இவன் வேறு, பகுத்தறிவுப் பாசறை வரதராஜன் (ஏ.வ. அரசு) வேறு. இரு வரையும் குழப்பிக்கொள்ளாதீர்கள்.

ஸ்ரீரங்கத்தில் ரங்கநாதன், ரங்கராஜன், வரதராஜன் போன்ற பெயர்கள் நிறைய வரும். தெருவில் நின்றுகொண்டு 'வரதூ' என்று கூப்பிட்டால், குறைந்தபட்சம் நாலு பேர் திரும்பிப் பார்ப்பார்கள்.

...வீரசிம்மன்' நாடகத்தின்போதே வரதனுக்கு முப்பத்தைந்து வயது. வேலை யேதும் அப்போதும் பார்த்ததில்லை. திண்ணையில் கால்மேல் கால்போட்டு உட்கார்ந்துகொண்டு, கீழச்சித்திரை வீதியில் போவோர், வருவோரை விசாரித்துக்கொண்டிருப்பான்.

சின்னப் பயல்களைப் பலவகை 'எர்ரண்டு'களுக்கு அனுப்புவான். அவர்களுக்கு லெமன் ஸ்பூன் ரேஸ், காய்ந்த ரொட்டியை யார் சீக்கிரம் கடித்துச் சாப்பிடுகிறார்கள் போன்ற பந்தயங்கள் வைப்பான். ராமனுடன்

இவனுக்குப் புகையிலை சிநேகிதம்.

நான் சிவில் ஏவியேஷனில் சேர்ந்து, சென்னை மீனம்பாக்கத்தில் பொறுப் பேற்றுக்கொண்டு, பரீட்சை பாஸ் பண்ணி டெல்லிக்கு மாறி, சப்தர்ஜங் விமானநிலையத்தில் டெக்னிக்கல் ஆபீஸ ராக வேலைபார்த்துக் கல்யாணமாகி, அப்பா ரிட்டயராகி, ஸ்ரீரங்கத்தில் செட்டில் ஆகி, ஒரு முறை ஸ்ரீரங்கம் வந்தேன்.

…நான் ஒரு எழுத்தாளனாவேன்' என்று தெரிவதற்குள், பாட்டி 1955–ல் பாபனாசத்தில் இறந்துபோனாள். பாட்டி, பரமபதத்தில் 'இந்தப் பிள்ளை என்ன செய்கிறானோ, எப்படிப் பிழைக் கிறானோ?' என்று கவலைப்பட்டுக் கொண்டிருப்பாள். 'பாட்டி ஐம் ஓகே' என்று எஸ்.எம்.எஸ். அனுப்ப முடிய வில்லை.

இன்ஜினீயரான என் மாமனார், அப்போது திருச்சியில் போஸ்டிங் ஆகியிருந்தார். அதனால் என் இரு பிள்ளைகளும் ஸ்ரீரங்கத்தில்தான் பிறந்தார்கள். மனைவி பிரசவம் முடிந்து தாய்வீட்டில் இருந்தபோது ' குழந்தையை யும் பார்த்துவிடலாம், அப்பாவுட னும் இருக்கலாம்' என்று லீவு சேர்த்துக்கொண்டு ஸ்ரீரங்கம் வந்தேன். மறுபடி வரதனை ஏறத்தாழ பன்னிரண்டாண்டு இடைவெளிக்குப் பின் ரங்கு கடையில் சந்தித்தேன்.

……என்னடா, டெல்லியெல்லாம் எப்படி இருக்கு? கல்யாணமாயி அதுக்குள்ள குட்டி போட்டுட்டியே... பேஷ், பேஷ்!''

வரதன் மாறியிருந்தான். தலைமுடி நரைத்துப்போய், தொப்பை வந்து பொலிவிழந்திருந்தான். டயாபடிஸாக இருக்கலாம். ஸ்ரீரங்கத்தில் ஒவ்வொரு பண்டிகைக்கும் அக்காரவடிசிலும் அதிரசமும் குஞ்சாலாடும் சாப்பிட்டே பலருக்கு டயாபடிஸ்.

நீண்டநாள் புகையிலைப் பழக்கம்... பற்களில் வெளுப்பே தெரியவில்லை. இப்போதும் அரை மணிக்கொரு தடவை கொப்பளித்துக் கொண்டிருந்தான். முன்பெல்லாம் வெள்ளி தம்ளர், கூஜா. இப்போது வெண்கலம்.

கொஞ்சம் இளைத்திருந்தான். கண்களில் மட்டும் பழைய பிரகாசம். ''எப்படி இருக்கே வரதன்? ' வீரசிம்மன்' டிராமாவெல்லாம் இன்னும் போட்டுண்டிருக்கியா?''

……ஓ! வருஷா வருஷம மார்கழித் திருநாள்ம்போது என் டிராமா இல்லாமயா? இருப்பியா... பாத்துட் டு ப் போறியா... ஆக்ட் பண்றியா?''

நான் அவசரமாக, ''வேண்டாம்... வேண்டாம். நான் மெட்ராஸ் போயிண்டே இருக்கேன்...''

நான் நடித்த முதல் நாடகம் ஒரு கெட்ட கனா போல் இப்பவும் நடு இரவில் திடீர் என்று உடலெங்கும் வியர்வையுடன் என்னை எழுப்பும்.

வீரசிம்மன் (வரதன்) சிம்மாசனத்தில் உட்கார்ந்திருக்க, படுதா ஓரத்தில் நின்று கொண்டு தோழிப்பெண்ணாக நான் விசிற, என் மேலாடை விலகி பெரிய கலாட்டாவானதும் ஒரு குடிகாரன் என்னைத் துரத்தினதும் இப்போது நினைத்தாலும் வயிற்றில் ஐஸ்கத்தி பாய்ச்சுகிறது.

……டிராமாவெல்லாம் சரி... ஜீவனத்துக்கு என்ன பண்ணிண்டிருக்கே?''

……நிலத்திலிருந்து வருமானம் போறாது. விளைச்சல் சரியில்லைன்னா, தாத்தாச்சாரியார் தோப்புக்குப் பக்கத்தில் பிளாட் போட்டு, ப்ராபர்ட்டி டெவலப் பண்றேன். கொள்ளிடம் பக்கத்தில நொச்சியம் இந்த மாதிரி எடத்திலயும் பேசிண் டிருக்கேன். அர்பன் லேண்ட் சீலிங் வந்தப்பறம் அக்ரிகல்ச்சர் லேண்டை மாத்தறதுக்கு லஞ்சம் கொடுக்கவேண்டியிருக்கு. ஃபிலிம் ஃபீல்டுலயும் வரப்போறேன். ஒரு படம் எடு க்கலாமானு யோசிச்சிண்டிருக்கேன். உங்கிட்ட நல்ல ஸ்டோரி இருக்கா, ஜெய்யை வெச்சு? விகடன்லல்லாம் எழுதறியாமே...''

……சும்மா போதுபோக்குக்கு!''

……இப்ப டிஸ்ட்ரிப்யூஷன் பண்ணிண் டிருக்கேன்...''

……அட!''

……புதுப் படத்தை எடுக்கமாட்டேன். ஒரு தடவை ஓடிக் களைச்சதை செகண்ட் ரன் எடுத்து, டூரிங்

கொட்டாய்ல எல்லாம் பெட்டி மாத்தி ஓட்டறது. அங்கங்கே போய் கலெக்ஷன் பண்றதுக்கு காரியஸ்தன் இருக்கான். வண்டி ஓடணுமோல்லியோ?''

......பசங்கள்லாம்?''

......பையன் ஜமால்ல படிக்கிறான்... பொண்ணு எஸ்.எஸ்.எல்.சி.!''

......அப்பப்ப கலைச்சேவை...'' என்றான் ரங்கு. ''இந்த வருஷம் யார் வரா, கேளு...''

......இந்த வருஷம் வர மாசம் 'வாழ்வா, சாவா'னு ஒரு சமூக நாடகம் போடறேன். அதுக்குத் தலைமைதாங்க சாவித்திரி வர்றாங்க...''

......சாவித்ரின்னா?''

......நடிகை சாவித்திரி... நீ 'மிஸ்ஸியம்மா' பார்த்ததில்லை?''

......பாத்திருக்கேன்... நிஜமாவா?''

......என்னடா இவன்! அம்பி, நீ ஆத்துக்குப் போய் மாமிகிட்ட 'சாவித்திரி எழுதின கடுதாசியை மாமா கேக்கறார்'னு வாங்கிண்டு வா...''

......சாவித்திரியா...''

......என்னடா வாயைப் பொளக்கறே?''

......நிஜமாவே சாவித்திரியா?!''

ரங்கு, ''சாவித்திரி என் அபிமான நடிகை. அருமையா நடிப்பாங்க...''

......இந்தியாவிலயே பெஸ்ட் – 'தேவதாஸ்'ல பார்வதியா வருவா பாரு... 'ஓ ஓ ஓ தேவதாஸ்...' பாத்தல்ல?'' என்றான் வரதன்.

ரங்கு ''ஏய், வரதா... என்னை ஒரு முறை இண்ட்ரோட்யூஸ் பண்ணிர்றா. ஒரு முறை கையைக் குலுக்கிடறேன். ரத்னா ஸ்டூடியோல சொல்லி, போட்டோ எடுத்துரலாம். மை காட்! அது என்ன ' வாராயோ வெண்ணிலாவே...'னு பாடுவா பாரு... ஃபேஸ்ல ஒரு இன்னொசென்ஸ்!''

......இந்த வருஷம் டிராமாவுக்கு அத்தனை டிக்கெட்டும் புக் ஆயிடும் முதல் ரெண்டு வரிசையில சோபா போட்டு, 'டோனர்'னு அம்பது ரூபா டிக்கெட். மற்றதெல்லாம் பாரபட்சம் இல்லாம பத்து, பத்து ரூபா. லாஸ்ட் ரோ நின்னுட்டுப் பாக்கணுமானா, அஞ்சு ரூபா...''

......எல்லாமே கொஞ்சம் வெலை ஜாஸ்தியா இருக்கே!''

......காத்துள்ளபோதே தூத்திக்க ணும்... என்ன ரங்கு?''

......ஆமாண்டா!''

இதற்குள் அந்தக் குட்டிப்பையன் அந்தக் கடிதத்தைக் கொண்டுவந் தான்.

......கொண்டா...'' என்று ரங்கனுடைய கண்ணாடியை இரவல் வாங்கிப் போட்டுக்கொண்டு படித்துக் காட்டினான்.

அந்தக் கடிதம் இங்கிலீஷில் இருந் தது. லெட்டர்ஹெட்டில் சாவித்திரியின் சிரிக்கும் போட்டோ இருந்தது.

...அன்புள்ள ஸ்ரீ ஜி. வரதராஜன்.

தங்கள் கடிதம் பார்த்து மிஸ் சாவித்திரி மிகவும் மகிழ்ந்தார். இதனுடன் கையெழுத்திட்ட புகைப்படம் இணைத்திருக்கிறோம்.

இப்படிக்கு

(கையெழுத்துப் புரியவில்லை!)

மிஸ் சாவித்திரியின் செக்ரெட்டரி...'

......ஸ்ரீரங்கத்துக்கு வர்றதா போடலையே...''

......இரு... இதுக்கப்புறம் போன்ல பேசி னேன். ரமேஷ் ராகவ்னு அவருடைய செக்ரெட்டரியை அகஸ்மாத்தா சந்திச்சேன். பெருமாளைச் சேவிக்க வந்திருந்தார். சாவித்திரியும் வராங்களாம். அப்படியே நம்ம நாடகத்தையும் அட்டெண்ட் பண்ணிட்டு, ராத்திரியே கார்ல புறப்பட்டுர்றா மாதிரி ஏற்பாடு பண்ணிடலாம்னார். சாவித்திரிக்கு ஒரு ரசிகர் மன்றம் ஆரம்பிக்கப் போறேன்...''

......நான் வரேன். எனக்கு ஏகப்பட்ட வேலை இருக்கு. போஸ்டர் அடிக்கணும். நோட்டீஸ் அடிக்கணும். டிக்கெட் புக் நம்பர் போடணும். கேன் சேர், தகர சேருக்கு ஏற்பாடு பண்ணணும். இதுக்கு நடுவில் ரிகர்சல் பண்ண ணும். எனக்குன்னா பரவாயில்லை, சமாளிச்சுருவேன். கோட்டையில் இருந்து லேடி ஆர்ட்டிஸ்ட் வரா. சுட்டுப் போட்டாலும் தமிழ் வரலை. இப்பக்கூட லேட்டில்லை... நீ நடிக்க வரேன்னா, ஒரு பார்ட் பாக்கியிருக்கு...''

......அய்யோ... நான் வரலைப்பா...'' என்று பதறினேன்.

...... ...வீரசிம்மன்'ல நீ லேடி காரெக்டர் பண்ணதை, இத்தனை வருஷம் கழிச்சும் ஜனங்கள் ஞாபகம் வெச்சிண்டிருக்கு!''

மறுபடி ஐஸ்கத்தி. ''அதான் பிரச்னை...'' என்றேன்.

அவன் போனபின் ரங்குவிடம், ''இவன் சம்பாத்தியம் எப்படி ரங்கு? அரிசி, பருப்புக்கெல்லாம் என்ன பண்றான்?''

......ஏன் கேக்கறே... சம்பாத்தியமே கிடையாது. பெருங்காய சொப்பு. வீட்ல நெலமெல்லாம் வித்தாச்சு. பெஞ்சு, நாற்காலியெல்லாம் வித்துண்டிருக்கான். இவாத்துல பழைய காலத்து சோபா, கட்டில், இவன் தாத்தா பெரிய ஸ்காலர்... அவர்ட்ட ஏகப்பட்ட அரிதான புஸ்தகங்கள்லாம் இருக்கு... எல்லாத்தையும் கோட்டைக்குக் கொண்டுபோய் எடைக் குப் போட்டுருவான். பழைய கிராமபோன், நல்ல நல்ல பிளேட்டு... அரியக்குடி, எம்.எஸ்.!''

......அடப்பாவமே... நீ உதவி பண்ணக் கூடாதோ?''

......கேக்கமாட்டானே... ரொம்ப வெத்து ஜம்பம். கார்வார்... இப்படித்தான் ஐயங்கார் ஜாதியே சீரழிஞ்சிண்டிருக்கு. படிப்பு இருக்கறவன் பொழைச்சுக்கறான். எல்லாரும் ஊரைவிட்டுப் போயிட்டாங்க. சித்திரை வீதில பாதிக்குமேல வீட்டை வித்தாச்சு. முன்பக்கம் லாந்திட்டு வாசல்ல, சிமெண்ட் பூசின வீடெல்லாம் புதுசா வந்தவா வீடு. நம்முது எல்லாம் கூரை...''

......கொஞ்ச நாள்ல வாசல்ல ஆடு கட்டினாலும் ஆச்சரியப்படமாட்டேன்...''

......இதெல்லாம் தவிர்க்கமுடியாத சமூக மாறுதல்கள் ரங்கு...''

......என்னவோ போறது... டிராமாவில் நிகரமா பத்தாயிரம் ரூபா பண்ணா, ஒரு வருஷம் ஓட்டிடுவான். அதில்தான் ஹோப் வெச்சுண்டு, சப்புகொட்டிண்டு இருக்கான். சாவித்திரி, சரஸ்வதினு ஊருரா அலையறான் கிடந்து...''

......சாவித்திரி வருவாங்களா?''

......வரணும்... யாருக்கோ அட்வான்ஸ் கொடுத்திருக்கான். சாவித்திரி வரலைன்னா, கொட்டாயை

எரிச்சுருவாங்க... ரிஸ்க்கு. அந்தப் பேரைச் சொல்லித்தான் டிக்கெட் அடிச்சு விக்கப்போறான்...''

அடுத்த வாரம் ஸ்ரீரங்கம் எங்கும் நடிகை சாவித்திரியின் போட்டோ போட்டு சுவரொட்டிகள் இருந்தன.

மிஸ்ஸியம்மா ஸ்ரீரங்கம் வரு கிறார். 'வாழ்வா, சாவா' நாடகத்துக் குத் தலைமைதாங்கவும் ஸ்ரீரங்கம் சாவித்திரி ரசிகர் மன்றத்தைத் துவக்கி வைப்பதற்கும்... டிக்கெட்டுக்கு முந்துங்கள். இவண் ஜி. வரதராஜன், செயலர், ஸ்ரீரங்கம் சாவித்திரி ரசிகர் மன்றம் (ரி)... மொட்டைமாடியில் 'வாழ்வா, சாவா' ஒத்திகை நடந்துகொண்டு இருந்தது.

– சேகர் இதுதான் உன் கடைசி முடிவென்றால், நான் கிணற்றில் விழுந்து உயிரிழப்பேன்.

– கலங்காதே கண்மணி.

– என் வயிற்றில் வளரும் சிசுவினை மனதில்கொண்டு என்று கக்குண்டு பேசிக்கொண்டிருந்தான். வரதன் டைரக்ட் பண்ணிக்கொண்டிருந்தான். இதில் நடிக்கும் பெரிய ஆபத்திலிருந்து தப்பித்தேன் என்று மனசுக்கள் மகிழ்ந்தேன்.

......வாடா... எல்லா டிக்கெட்டும் வித்துப்போச்சு. எக்ஸ்ட்ரா டிக்கெட்டுக்கு ஏகப்பட்ட டிமாண்டு. இன்னும் ரெண்டு ரோ சேர் போடலாம்னா, கந்தசாமி கடையில மேற்கொண்டு சேர் இல்லை... கரூர், குளித்தலை போனா கிடைக்கும்ங்கறான். ரொம்ப செலவு...''

......சாவித்திரி கன்ஃபர்ம் பண்ணிட்டாங் களா?''

......அதுதான், இப்ப பெரிய ப்ராப்ளம். கிணத்துல கல் போட்டாப்பல இருக்கு. சாவித்திரி வந்துருவாங்க. அவங்களுக்குத் தந்தி அடிச்சுட்டு, லெட்டரும் போட்டுட்டேன். மார்கழி மாச உச்சவத்துக்கு எப்படியும் வந்தே தீரணும். கல்லணையில ஷூட்டிங் வேற இருக்காம்...''

......அதாவது, நீ எங்கிட்ட காட்டின ஃபேன் லெட்டரைத் தவிர, சாவித்திரிகிட்டருந்து வேற எதும் வரலை?''

......அப்படி இல்லைடா... அதுக்கப் புறம் நாலு லெட்டர் போட, ரமேஷ் ராகவுக்கு ஸ்ரீரங்கம் புரோகிராம் விவரத்தையும் சேர்த்து அனுப்பிருக்கேன்...''

......பதில் வந்ததோ?''

......வரலை... அப்படின்னா என்ன அர்த்தம்... சம்மதம்னுட்டுதானே?''

......அது எப்படி வரதன்?''

......சம்மதம் இல்லைன்னு இத்தனை நாழி அடிச்சுப் புடைச்சுண்டு லெட்டர் வந்திருக்கணுமில்லையா?''

......வந்திருக்கணும்...''

......வரலையே இதுவரைக்கும்...'' – எனக்கு இந்த விநோதமான லாஜிக் புரியவில்லை.

......போன் போட்டுப் பேசினியா?''

...... ...குண்டூசி'யில ஒரு நம்பர் கொடுத் திருந்தா. யாரோ தெலுங்கில பேசினா. நான் விவரத்தைச் சொல்லிட்டு அட்ரஸையும் கொடுத்திருக்கேன்...''

......ஆனாலும் உனக்கு ரொம்ப தைரியம் வரதன்... எந்தவிதமான உத்தரவாதமும் இல்லாம டிக்கெட் அடிச்சு வித்துட்டு...''

......என்ன சொல்றே நீ?''

......எதுக்கும் நீ ஒரு தடவை மெட்ராஸ் போய்ப் பார்த்துப் பேசிட்டு வர்றது நல்லது வரதன்...''

……எங்கடா டயம்... நான் ஒருத்தனே எல்லாத்தையும் பாத்துக்கணும்னா?''

நான் டெல்லிக்குத் திரும்பும்போது, ஒரு நாள் சென்னையில் இருப்பதால் விசாரிப்பதாகச் சொன்னேன்.

அவன் உடனே எட்டு இடமும் குளிர்ந்து, ''உண்மையான ஃப்ரெண்ட் நீதாண்டா எனக்கு வேணும்... இந்த டிராமா பண்ணிட்டேன்னா, எங்கயோ போகப்போறேன் பாரேன்...''

……யார் இந்த ரமேஷ் ராகவ்? யாருக்கு போன் பண்ணே? எல்லா விவரமும் சொல்லு...''

அழுக்கான ஒரு விசிட்டிங்கார்டைக் கொடுத்தான். அதில் 'ரமேஷ் ராகவ்' என்ற பேர் போட்டு, ஒரு பிபி நம்பர் டெலிபோன் எண் போட்டிருந்தது.

சென்னைக்குக் காலை வந்து சேர்ந்து, க்ளாக் ரூமில் பெட்டி படுக்கையைப் போட்டுவிட்டு, மாலைதான் ஜி.டி. பிடிக்கவேண்டும் என்பதால், நேரமிருந்தபோது சித்தப்பா வீட்டிலிருந்து டெலிபோன் செய்தேன்.

……அப்படி யாரும் இல்லையே இங்க...'' என்றார்கள்.

……இந்த நம்பர் என்ன?''

……இது தையக் கடைன்னா...''

என்னிடம் 'குண்டூசி' கொடுத்த சாவித்திரியின் எண்ணும் இருந்த தால், அங்கே போன் பண்ணபோது ஒரு இளம் குரல் ''ஷூட்டிங்லோ... ஷூட்டிங்லோ...'' என்றது. எனக்குத் தெரிந்த ஒரே தெலுங்கு வார்த்தை யைப் பிரயோகித்து, ''எக்கட?'' என்றேன். ''வாஹினிலோ, ப்ரசாத்லோ, ஏவிஎம்லோ தெலியலேது...''

நான் டிரங்கால் புக் பண்ணி, ரங்கநாதா மெடிக்கல்ஸ் மூலம் வரதனைக் கூப்பிட்டுப் பேசினேன்.

……வரதன், நீ கொடுத்த அந்த நம்பர் தப்பு. அவனுக்கு ஏதாவது பணம் கொடுத்தயா?''

……அதை ஏன் கேக்கறே? பணத்தை வாங்கிண்டு கம்பி நீட்டிட்டான்... ஆள் அட்ரஸே இல்லை. அட்வான்ஸ் கேட்டான். ஆயிரம் ரூபா வாங்கிண் டான்...''

……என்ன வரதா... நீ இப்படிப் போய் ஏமாந்திருக்கியே! நாடகம் எப்ப?''

……நாளைக்குடா... டேய், நீ எனக்கு ஒரு உபகாரம் பண்ணணும். நான் வரமுடி யாது. நீ ஏவிஎம்மோ, வாஹினியோ போய், சாவித்திரி... அவங்களை எப்படியாவது சந்திச்சு, நான் எழுதின நாலு கடுதாசியைப் பத்திச் சொல்லி...''

ஏவிஎம்மில் ஒரு பாடல் காட்சியில் நாகரா ஒலிக்க, ஒரே வரியை எட்டு தடவை எடு த்துக்கொண்டிருந்தார்கள். என்னால் அந்தச் சந்தடியில் மிஸ் சாவித்திரியை கிட்டே போய்ச் சந்திக்க முடியவில்லை. சட்டென்று கார் ஏறிப் போய்விட்டார். அவரது செக்ரெட்டரி யைக் காட்டினார்கள். சந்தித்து என்னை அறிமுகம் செய்து கொண்டு விவரம் சொன்னேன்.

……ரமேஷ் ராகவ்... அப்படி யாரையும் தெரியாதே! ஓயெஸ்... யாரோ ஒரு ஆள் வந்து ராகவனோ, யாரோ... டேட்ஸ் கேட்டார்... இல்லை. அப்ப ஊட்டி ஷூட்டிங் போறம், வருஷம் பூரா டேட்ஸ் இல்லைனு சொல்லிட்டேனே...''

……சார்... உங்களுக்கு ஒரு அட்வைஸ். அந்தாளை நம்பாதீங்க. எல்லார்கிட்டயும் 'சாவித்திரி டேட்ஸ் வாங்கித் தரேன்'னு பொய் சொல்லிக்கிட்டுத் திரியறார். பணம் கேட்டாரா?''

வரதனை போனில் பிடிக்க முடிய வில்லை. தந்தி கொடுத்தேன் – 'Stop all arrangements. Savithri not coming' என்று. எனக்கு வரதன் அதை எப்படிச் சமாளிக்கப் போகிறான் என்று கவலையாக இருந்தது.

டெல்லி திரும்பினவுடன் ஆபீஸில் காலிப்ரேஷனுக்காக அகர்தாலா போகச் சொன்னார்கள். போய்வந்து ஒன்றரை மாதம் கழித்து திருச்சி விஓரை காலிப்ரேட் பண்ண சந்தர்ப்பம் வந்தபோது கிடைத்த அவகாசத்தில் ஸ்ரீரங்கம் சென்றிருந்தேன்.

......ரங்கு, வரதனுடைய ‘வாழ்வா சாவா’ என்ன ஆச்சு?’’

......ஏன் கேக்கறே... அமோகமா நடந்தது!’’

......சாவித்திரி வந்தாங்களா?’’

......வந்தாங்களே!’’

......வந்தாங்களா... எப்படி?’’

......திருச்சியிலிருந்து சாவித்திரி மாதிரி இருக்கிற ஒரு நடிகையை அழைச்சுண்டு வந்துட்டான். கடைசி நிமிஷத்துக்கு அது பொளந்து கட்டிடுத்து. மிமிக்ரி மாதிரி, சாவித்திரி மாதிரியே பேசிக் காட்டினா. முன்வரிசையில இருந்தவாகிட்ட ‘சினிமா நட்சத்திரமெல்லாம் நேர்ல பாக்கறதுக்கும் மேக்கப்போட சினிமால பாக்கறதுக்கும் வேற மாதிரி இருப்பா’னு சமாதானம் சொல்லிட்டு, லைட்டை அடிச்சே சமாளிச்சுட்டான். இன்னும் முக்காவாசி பேருக்கு, வந்தது நிஜ சாவித்திரி இல்லைன்னே தெரியாது...’’

அப்போது வரதன் வந்து உட்கார்ந்தான். ‘‘என்னப்பா... எப்படிருக்கே? டெல்லியெல் லாம் எப்படி இருக்கு?’’

...... ...வாழ்வா சாவா’ நன்னா போச்சாமே!’’

......அமோகம் போ... அடுத்தது சிவாஜி சாரைக் கூப்பிடலாம்னு இருக்கேன்!’’ என்றான் வரதன்.

---

# ஸ்ரீரங்கத்து தேவதைகள்

**சுஜாதா**



...**மா**னிடவர்க்கென்று பேச்சுப்படில் வாழகில்லேன் மன்மதனே’

– ஆண்டாள் நாச்சியார் திருமொழி

**ரா**மானுஜம், பார்த்தசாரதி என்று பெருமாள் பெயராக சுந்தாச்சு ஐயங்கார் தன் மகன்களுக்கு வைத்தார். அந்தப் பெயர்கள் மாஞ்சு, பாச்சு என்று சுருக்கப்பட்டது அவருக்கு வருத்தம்தான். இருந்தும் சாகும்வரை மகன்களை முழுப்பெயர் வைத்துதான் கூப்பிட்டார்.

சுந்தாச்சு ஐயங்கார் எங்கள் ஞாபகத்தில் வேலைக்குப் போய்ப் பார்த்ததில்லை. கல்யாணம் லேட்டாகப் பண்ணிக்கொண்டார். டயாபடீஸின் விளைவுகளால் சீக்கிரமே ஆசார்யன் திருவடி எய்துமுன் காங்ரின் வந்து ரொம்ப அவஸ்தைப்பட்டார். அவர் செத்துப்போனபோது மாஞ்சு வுக்குப் பன்னிரண்டு வயசு. பாச்சாவுக்குப் பத்து. இடையே ஒரு பெண் பிறந்து போய் விட்டது.

ஐயங்கார் இறந்தபின் அவர் விட்டுப்போன கடன்கள், மெள்ள மெள்ள கலைந்த புற்றிலிருந்து புறப்படும் குட்டிப்பாம்புகள் போல பிராமிஸரி நோட்டு வடிவங்களில் வெளிவந்தன.

ஒரு பட்டாளமே பழுப்பான காகிதங்களைக் கொண்டுவந்து அதட்டிவிட்டுப் போனார்கள். ஆண்டாள் என்ன செய்வாள்? பாவம்... பிள்ளைகள் படிப்புக்கு ஃபீஸ் கட்ட வேண்டும். பால் தயிர், பண்டிகை என்று பல செலவினங்களை முதல் மாதங்களில் பாத்திரம், நகைகளை தெற்குவாசல் கடையில் அடகு வைத்துச் சமாளித்தாள். அவள் பெயரில் அவள் அப்பா விட்டுப்போனது திருச்சி டவுன் ஸ்டேஷன் அருகில் கொஞ்சம் நிலம் மட்டுமே. வாழை போட்டிருந்தார்கள். அது லிட்டிகேஷனில் இருந்ததால் ஐயங்கார் அதை விற்கவில்லை. அது ஜி.எஸ்.டி. பைபாஸ் அருகில் இருந்ததால், வீட்டுமனையாகப் பிரித்து விற்றால் நல்ல காசு வரும் என்று வில்லங்கங்களை நீக்கி விற்றுக் கொடுப்பதில் கணவனின் தூரத்து உறவு ஆராவமுதன் ரொம்ப ஒத்தாசையாக இருந்தார். ‘‘இங்கே தனியாக இருந்துகொண்டு ஏன் கஷ்டப்படுகிறாய்? என்னுடன் வந்து இரு. தளிகை பண்ணிப்போடு. உன்னை ராஜாத்தி மாதிரி வைத்துக் கொள்கிறேன். மரகதம் ஒன்றும் சொல்லமாட்டாள். அவளுக்குப் புத்ரபாக்யம் இல்லை. உன் இரண்டாமவனை சுவீகாரம் எடுத்துக் கொள்கிறேன். இருவரையும் இ.ஆர்.ஹைஸ்கூலில் சேர்த்துவிடுகிறேன். சுந்தாச்சு உன் அழகையும் மதிப்பையும் தெரியா தவன்!’’ என்று சொல்லிப் பார்த் தார். ஆண்டாள் மறுத்துவிட்டாள். ‘‘வர மாட்டேன். அவர் போனபின் எனக்கென்ன வாழ்வு? வேறு ஒருத்தரை நினைக்கிறதே மகா துரோகம், பாவம். அவர் போகிறபோது கையைப் பிடித்துச் சொல்லிவிட்டுப் போயிருக்கிறார் – ‘ஆண்டு! பசங்களை நன்னா படிக்கவை’னு. என் பிள்ளைகளைப் படிக்கவைத்து எப்படியோ பிழைத்துக் கொள்கிறேன்... போய்ச்சேரும் பிராமணா!’’ என்று சொல்லிவிட்டாள்.

ஆண்டாளின் அழகான தோற்றம் அவளுக்கு இடைஞ்சலாக இருந்தது. கணவன் இல்லாதபோது வந்து பார்க்கிறவர்களின் பார்வைகள் தப்பான இடத்தில் நிலைக்கும். லேசான அத்துமீறல்கள் அவளைத் தொந்தரவு செய்தன. தென்கலையாரில் விதவையானால் மொட்டையடிக்கும் வழக்கம் கிடையாது. நெற்றியில் ஸ்ரீசூர்ணம் இட்டுக்கொள்ளலாம். கலர்புடவையும் உடுத்திக்கொள்ளலாம்.

ஆராவமுது மாசாமாசம் வந்து விசாரித்து விட்டுப் போவார். பிடி கொடுத்தே பேசமாட்டாள். பிள்ளைகள் இருவரில் மாஞ்சுவுக்குப் படிப்பு வரவில்லை. தகப்பனைக் கொண்டு விட்டான் போலும். எட்டாம் வகுப்பில் ரெண்டு வருஷம் இருந்தான். தத்தித் தத்தி ஒன்பதாம் வகுப்புக்கு போகுமுன் அவனுக்கு டைபாய்டு ஜுரம் வந்து விட்டது. நிறையச் செலவழித்து கோட்டைக்குப் போய் ஒரு நாள்விட்டு ஒரு நாள் ஊசி போட்டுக்கொள்ள வேண்டிய தாகியிருந்தது. பள்ளிப்பாடங் களைத் தவறவிட்டான். அடுத்தவன் அவனை ஓவர்டேக் பண்ணிவிட்டான். ஒரே கிளாஸ், ஒரே செக்ஷனுக்கு வந்துவிட்டான். பாச்சு ரொம்ப நன்றாகப் படித்தான். பள்ளியில் உள்ள அத்தனை ஸ்காலர் ஷிப்புகளையும் பெற்றான். அவன் படிப்புக்கு ஆண்டாள் ஒரு காசு செலவழிக்கவில்லை. மாறாக, பள்ளியில் இருக்கும் போதே இவனுக்கு வந்த உதவித் தொகைகள் வீட்டுச்செலவுக்குப் பயன்பட்டன.

......பையன்கள் கேலி பண்ணுகிறார்கள். வேறு பள்ளிக்கூடம் போகி றேன்’’ என்ற மாஞ்சு, திருவானைக் கோவிலில் ஒரு பிரைவேட் ஸ்கூலில் சேர்ந்தான். அங்கேயும் சரியாகப் படிக்கவில்லை.

ஆண்டாளின் முழுக்கவலையும் இப்போது மாஞ்சுதான். பாச்சு என்ன படிக்கிறான், எந்த கிளாஸ், எந்தப் பள்ளிக்கூடம் என்றுகூட கவலையேபடவில்லை. மத்தியானம் ஸ்கூலிலிருந்து வெயிலில் செருப்பு இல்லாமல் நிழலோரமாக நடந்து வந்து அவள் கொடுக்கும் மோர் சாதத்தையும் ஊறுகாயையும் கையை நக்கிக்கொண்டு சாப்பிட்டுவிட்டு உடனே பள்ளிக்குப் போய்விடுவான். வேப்பமர நிழலில் எல்லா ஹோம் வொர்க்கையும் அஞ்சு நிமிஷத்தில் முடித்துவிடுவான். கொஞ்ச நேரம் மேல அடையவளைஞ்சானில் போய் பெரியவர்களுடன் பூப்பந்து ஆடுவான். சனிக்கிழமை சக்கரத்தாழ்வார் சந்நிதிக்குப் போவான். அடுத்த கிளாஸ் பாடத்தை வாங்கிப் படிப்பான். டியூஷன் எடுப்பான். மார்புக்கூடெல்லாம் பின்னி, ஒல்லியாகத்தான் வளர்ந்தான். ஆனால், மூளை ரொம்ப ஷார்ப். மாஞ்சு தாட்டியாக, ஆளழகு துப்பட்டிக்காரன் என்று இருந்தான். காலையில் புறப்படுவான். கீழ வாசலில் ரங்கு கடைக்குப் போகமாட்டான். ஒரு மளிகைக் கடையில் உட்கார்ந்து கொண்டு அவ்வப்போது பொட்டுக் கடலையை வாயில் போட்டுக்கொண்டு சிவாஜி படங்களை விமரிசனம் செய்வான். மத்தியானம் ஒழுங்காகச் சாப்பிட வந்துவிடுவான். மெந்தியக் குழம்பு ரொம்பப் பிடிக்கும். டிபனுக்கு காசு வாங்கிக்கொள்வான். ஒரு தூக்கம் போட்டுவிட்டு தெற்கு வாசல் போய்விடுவான். ராத்திரி பத்து மணிக்குத்தான் வருவான். கெட்ட பழக்கங்கள் ஏதும் இல்லை. அவன் ஒரு drifter; பாச்சுவுக்கு இவன் தர்மசங்கடம். அண்ணனே இல்லை போல ஒருத்தரை ஒருத்தர் வீதியில் எதிரெதிரே செல்வார்கள். அவன் வம்புக்கு இவன் போகமாட்டான்! எப்பவாவது, ‘‘என்னடா நன்னா படிக்கிறயா?’’ என்று அண்ணனின் பொறுப்புடன் விசாரிப்பான். எத்தனாவது, என்ன சப்ஜெக்ட்

என்றெல்லாம் கேட்பான். ‘‘மேத்ஸ் நன்னா போடு. அதிலதான் நிறைய மார்க் வாங்கலாம். பழைய கொஸ்சன் பேப்பர் எல்லாம் சால்வ் பண்ணிடு!’’ என்பான்.

நிகுநிகுவென்று வளர்ந்திருந்த தன் மூத்த மகனுக்கு எதிலும் இன்டரஸ்ட் இல்லை... ஏதாவது தொழில் கற்றுக்கொள்ள பாலிடெக்னிக்கில் சேர்க்கலாம் என்று ஆடிட்டர் ராமசாமியிடம் அப்பா தாயே என்று ஆண்டாள் கெஞ்சி திருச்சி துப்பாக்கி ஃபாக்டரியில் ஃபவுண்டரியில் ஒரு டிரெய்னியாகச் சேர்த்தாள். அங்கே மூன்று நாள் சென்றபின், ‘‘இந்தச் சூடு எனக்கு ஆகவில்லை. உடம்பெல்லாம் எரியறது. காத்தாலை ரத்தவாந்தி எடுக்கறது’’ என்று சொல்லிவிட்டான். ‘‘அதெல்லாம் பட்டறை வேலைம்மா. பிராமணாள் பண்ண முடியாது’’ என்றான். ‘‘ஏண்டா இப்படி தாயாருக்கு பாரமா இருக்கே?’’ என்று கேட்டதற்கு வீட்டைவிட்டு ஓடிப்போய் விட்டான். ஆண்டாள் பதறிப் போய் ஆராவமுதுவுக்கு தகவல் சொல்ல, அவர் உடனே வந்தார். ‘‘நாந்தான் சொன் னேனே... உன்னால் தனியாகப் பிள்ளைகளை சமாளிக்க முடியாது. என்கூட வந்துவிடேன். உன்னை ராணி மாதிரி வெச்சுக்கறேன். நியாயமா பார்க்கப்போனா நான்தான் உன்னைக் கல்யாணம் பண்ணிண்டிருக்கணும். சுந்தாச்சு வோட அத்தங்காதான் இல்லா ததும் பொல்லாததும் சொல்லி கல்யாணத்தைக் கலைச்சுட்டா. மரகதத்தை என் தலையில எல்லாரும் சேர்ந்து கட்டிட்டா. இப்பவும் ஒண்ணும் குடி முழுகிப் போயிடலை!’’ என்று மறுபடி கூப்பிட்டார். அன்று ராத்திரி கெக்கேபிக்கே என்று நடந்துகொண்டார்.

நல்லவேளை... சமயத்தில் மாஞ்சு திரும்பி வந்துவிட்டதால் விலகிக் கொண்டார். ‘‘எங்கேடா போனே?’’ என்றால், ‘‘புதுக்கோட்டை போற வழியில் நார்த்தாமலை பக்கத்தில் சித்தன்னவாசலுக்கு என் ஃப்ரெண்டு கூப்பிட்டான். மனசு சரி யில்லை. போனேன்’’ என்றான். ‘‘உங்கம்மாவிடம் சொல்லிட்டுப் போகக்கூடாதோ..’’ என்றதற்கு, ‘‘அம்மாதான் தெண்டச்சோறுன்னு வெய்ய றாளே...’’ என்றான்.

மாஞ்சு பழையபடி ஆகிவிட்டான். ‘‘அவனை எதும் கேக்காதேம்மா!’’ என்று பாச்சு சொல்லி விட்டான். அவளும் அப்படியே தீர்மானித்தாள்.

மாஞ்சு இதனால் வெத்து என்று இல்லை. சமூகத்துக்கு ஒத்தாசையாகத்தான் இருந்தான். மாய்ந்து மாய்ந்து பொதுக்காரியம் செய்வான்.

......எங்க மாஞ்சு படிக்கலையே ஒழிய, எல்லா சாமர்த்தியமும் உண்டு அவனுக்கு. எங்கு போனாலும் பிழைச்சுப்பான் மாமி!’’ என்பாள் ஆண்டாள்.

......ஒரு கல்யாணத்தைப் பண்ணி வெச்சுரு. சரியாப் போய்டும்.’’

......அதுக்குத்தான் அலையா அலையறேன். முதல்ல அவன் சொந்தக் கால்ல நிக்கட்டும் மாமி. ரங்க நாதர் அவனுக்கு ஏதோ வெச்சிருக்கார்னு தெரி யறது... என்ன வெச்சிருக்கார்னுதான் புரியலை.’’

இடையே பாச்சு ஸ்டேட் ராங்க் வாங்கி ஐ.ஐ.டி–யில் என்ட்ரன்ஸ் எக்ஸாம் எழுதி முதல் பத்து ரேங்க்குகளில் வந்தான். சென்னை ஐ.ஐ.டி–யில் சேர்ந்தான்.

ஆண்டாள் சுற்றுப் பட்ட ஜீயபுரம், திருவெள்ளறை போன்ற இடங்களில் ஏழை பிராமணப் பெண்ணாக மாஞ்சுவுக்குப் பார்த்துக் கொண்டிருந்தாள்.

......சீர்செனத்தி எதும் வேண்டாம்மா. பொண்ணு அவனுக்கு பாந்தமா இருந்தா போறும். ரொம்ப படிச்சிருக்க வேண்டாம். தம்பிக்காரனுக்கு இப்பவே டெல்லி, கல்கத்தா, அமெரிக்கான்னு ஜாதகமா வந்து குமியறது. பெரியவனுக்குப் பண்ணிட்டுதானே சின்னவனுக்குப் பண்ணணும்...’’ என்றாள்.

......ஏம்மா கவலைப் படறே... எனக்கு வேளை வரலை.’’

......எப்படா வரும்... அம்பது வயசானப் பறமா?’’

......வரும்... வரும்! எனக்காக ஒருத்தி பிறந்திருக்கா... அவ எங்க இருக்கானுதான் தெரியலை. கண்டு பிடி.’’

பாச்சு ஐ.ஐ.டி. முடித்த கையோடு எம்.எஸ். படிக்க ஹார்வர்டுக்குப் போய்விட்டான். அவனுக்கு ஸ்டான்ஃபோர்டு பர்ட்யு உள்பட எட்டு இடத்தில் அட்மிஷன், அசிஸ்டண்ட்ஷிப்புடன் கிடைத்தது. ‘‘இதுதான் இருக்கறதுக்குள்ளயே பெஸ்ட்னு போயிருக்கான் அங்க’’ என்று மாஞ்சு பெருமையாகச் சொல்லிக்கொண்டான்.

மாஞ்சுவுக்கு வயது முப்பதைத் தாண்டிவிட்டது ‘‘எனக்கு ஏம்மா அவசரப்படறே... நிறைய வரன் வரதுன்னா அவனுக்கு முன்னால கல்யாணம் பண்ணிடு. எனக்கு ஆட்சேபனையே இல்லை’’ என்றான்.

......உறவுக்காராள்ளாம் சொல்லிக் காட்டுவாளேடா...’’

......அவா என்ன வேணா சொல்லிட்டு போகட்டும்! நான் எதும் சொல்லலையே... எதுக்கு கவலை? என் ஜாதகத்தின்படி ஏழரை நாட்டுச் சனி விலகினாத்தான் கல்யாணம் ஆகும்னு புஜ்ஜி சாஸ்திரி சொல்லிருக்கார்.’’

இதனிடையில் படித்துக் கொண்டிருக்கும்போதே பாச்சுவுக்கு ஏழெட்டு கம்பெனிகள் வேலை கொடுக்க முன்வர, ‘பாச்சுஸ் அல்காரிதம்’ என்று கர்மார்கர் போல லீனியர் ப்ரொக்ராமிங்கில் வேகமாக இயங்கக்கூடிய வழிமுறையைக் கண்டுபிடித்து பேட்டண்ட் எடுத்தான். ஐ.பி.எம்., எச்.பி. அல்காடெல், போன்ற பெரிய கம்பெனிகள் அவனை அழைத்தன. இன்டர்வியூவுக்கு அவன் இருக்குமிடத்துக்கு எச்.ஆர்.டி. மானேஜரை அனுப்பினார்கள்.

க்ரீன் கார்டுக்கும் மனு கொடுத்து விட்டான். அது வருவதற்குள் ஒரு பெண்ணைக் கல்யாணம் செய்துகொள்ள வேண்டியது விசா விதிகளின் படி தேவையாயிற்று. மாஞ்சுவுக்கு போன் பண்ணி ‘‘அம்மாகிட்ட சொல்லு... பதினஞ்சு நாள் லீவில வருவேன். ரெண்டு அல்லது மூணு பெண் பார்த்து வைக்கச் சொல்லு.

ஜாஸ்தி வேண்டாம். கன்ஃப்யூஸ் ஆயிடுவேன். எனக்கு இந்த ஊர்ப் பொண்ணுகள் வேண்டாம். ஒவ்வொருத்தியும் மூணு பாய்ஃப்ரெண்டு, கல்யாணத்துக்கு முன்னால செக்ஸ்னு கேக்கவே நன்னால்லை. அம்மா மாதிரி ஒரு பெண் வேணும்னு சொல்லு’’ என்றான்.

மாஞ்சு, பாச்சுவின் ஜாதகத்தை சரியாகக் கணித்து காப்பி எடுத்து ‘மங்கையர்மலர்’, ‘ஹிண்டு’வில் எல்லாம் விளம்பரம் கொடுத்து, போட்டோ அனுப்பி எல்லா ஏற்பாடுகளும் செய்தான்.

ஜாதகங்கள் வந்து குவிந்தன. இறுதியில் ஹேமலதா என்கிற லதா பாச்சுவுக்கு பொருத்தமாக இருப்பாள் என்றான். அவள் அப்பா சக்ரவர்த்தி என்று பி.எச்.இ.எல்.லில் டி.ஜி.எம். நல்ல சுயமாச்சார்யாள். போபாலிலும் டெல்லியிலும் வளர்ந்த பெண். அவர்களும் தென்கலை... ஜாதகம் நன்றாகப் பொருந்தியது. அழகான பெண். முக்கியமாக அசப்பில் பார்த்தால் சின்னவயசில் ரத்னா ஸ்டூடியோவில் எடுத்த ஆண்டாள் போட்டோ போலவே இருந்தாள். மாஞ்சுவிடம் பாச்சு, ‘‘அண்ணா, நீ ஓகேன்னா எனக்கும் ஓகேதான்... உங்களையெல்லா ரையும் அமெரிக்காவுக்கு கூட்டிண்டு போகப் போறேன்’’ என்றான்.

பாச்சுவின் பெயர் இங்கிலீஷ் கல்யாணப் பத்திரிகையில் பார்த்திஸந்தா என்று போட்டிருந்தது. திருச்சி தென்னூரில் புதிதா கக் கட்டிய பெரிய கல்யாண மண்டபத்தில் முதல் கல்யாணமாக பாட்டுக்கச்சேரி எல்லாம் வைத்து விமரிசையாக நடந்தது. பார்த்தவர்கள் எல்லாம் ‘என்ன அழகான ஜோடிப் பொருத்தம்!’ என வியந்தார்கள்.

ஆண்டாள் புதுமணத் தம்பதியை வாழ்த்தும்போது கண்ணில் நீர் பெருகியது. ‘‘அம்மா, அம்மா... ஸ்டாப்பிட் அம்மா... நான் மாஞ்சுக்கு ஒரு ப்ரைடை ஏற்பாடு பண்ணு கிறேன்... ஓகே?’’ என்றான். காம்கார்டரில் நிறைய விடியோ எடுத்தார்கள். பாச்சுவின் மாமியாரே இளமையாக இருந்தாள். ஆண்டாள் ஒருநாளைக்கு அரக்கு கலரில் பட்டுப்புடவை உடுத்தி இருந்ததை ஆராமுது கண் கொட்டாமல் பார்த்துக்கொண்டிருந்தார். பாச்சுவின் மாமியார், ‘‘கவலைப் படாதீங்க மாப்பிளை... உங்க பிரதர்க்கு தைமாசத்துக்குள் நல்ல பொண்ணா பாத்து வைக்கவேண்டியது என் பொறுப்பு. ஏண்டி... நம்ம கோமளா பொண்ணுக்கு என்ன வயசு?’’

கல்யாணமான ஒரு வாரம் பெங்களூர், ஊட்டி என்ற சுற்றிவிட்டு அடுத்த வாரமே லதாவை டூரிஸ்ட் விசாவில் அமெரிக்கா அழைத்துச் சென்றுவிட்டான் ‘மிஸ்’ஸாகத் தான் அவள் சென்றாள். மாமியார் வீட்டில் லதா ஒரு நாள்தான் இருந்தாள். ‘‘ஃபேன் இல்லையா?’’ என்று அங்கலாய்த்தாள். தெற்குவாசலுக்குப் போய் மாஞ்சு ஒரு ஃபேன் வாடகைக்கு எடுத்து வந்தான். பாச்சு அமெரிக்கா போய் சட்டவிதிகளுக்காக இன்னொரு கல்யாணம் செய்ய வேண்டும் என்பதெல்லாம் ஆண்டாளுக்கோ மாஞ்சுவுக்கோ புரியவில்லை.

மாஞ்சு இப்போது லேசாகச் சிரித்து மழுப்பும் வழக்கத்தைக் கொண்டிருந்தான்

......மாஞ்சு, எப்படா கல்யாணம்? தம்பிக்கே ஆயிடுத்து... உனக்கு எப்படா?’’

சிரிப்பு.

......யாரையாவது பாத்து வெச்சிருக்கியா? சொல்லிடு...''

சிரிப்பு.

பாச்சா அம்மாவை அமெரிக்காவுக்குக் கூப்பிட்டான்.

......அங்க இப்ப வந்தா பிரயோஜ னம் இல்லை. ஒரு நல்ல சேதியா சொல்லு. வந்துர்றேன். உங்கண்ணனுக்கு ஒரு கால்கட்டைப் போடணுமே... எப்படி அவனைத் தனியா விட்டுட்டு வரது?''

......நீ போயிட்டு வாம்மா. நான் சந்த்ரா லாட்ஜ்ல சாப்ட்டுக்கறேன்.''

......இல்லைடா... அடுத்து உன் கல்யாணம்தான். இப்பவே ரொம்ப தள்ளிப் போயிடுத்தே...''

மாஞ்சுவுக்கு கடைசியில் ஒரு நல்ல வரன் வந்தது. அலமேலு, பாச்சு கல்யாணத்தின்போது சமையலுக்கு ஒத்தாசையாக கறிகாய் நறுக்கிக் கொண்டிருந்தாள். பெண் பளிச்சென்று இருப்பதை ஆண்டாள் பார்த்திருந்தாள். வயது இருபத்திரண்டு. செவ்வாய் தோஷ ஜாதகம். பரவாயில்லை. ஆனால், வயசு வித்தியாசம் ரொம்ப இருக்கிறதே என்று கேட்கத் தயங்கினாள். பெண் வீட்டார் இதைக் கேள்விப்பட்டு, '' இருந்தா என்ன... பையனுக்கு வயசே தெரியலையே. உங்காத்தில சம்பந்தம் வெச்சுக்க நாங்க குடுத்து வெச்சிருக்கணும்'' என்றார்கள். அவர்கள் ஏழை. அப்பா சரக்கு மஸ்டர். அம்மா கல்யாணங்களுக்கு கறிகாய் நறுக்குபவள், அப்பளம் இடுபவள். அலமேலு ஆறு பெண்களில் மூத்தவள். ''மாஞ்சுவை பாத்தியாடி... பண்ணிக் கிறாயா?'' என்று கேட்டதில் உடனே சம் மதித்து விட்டாள். ''இங்க இருந்துண்டு மூணுவேளை தளிகை பண்ணிண்டு, ஒரு தாவணியையே தோச்சுத் தோச்சுப் போட் டுண்டு, சாக்கடை குத்திண்டு இருக்கறதில இருந்து விடுதலை கிடைக்கிறதால நான் ராமானுஜனைக் கல்யாணம் பண்ணிக்கறேன்!'' என்று சொன்னாள்.

நிச்சயதார்த்தம் பழம்பாக்கு வெற்றிலை மாற்றிக்கொண்டார்கள். சரக்கு மாஸ்டரிடம் பணம் இல்லை. வரவேண்டிய பணம் ஒன்று இருந்ததால் சித்திரை மாசத்தில் கல்யாணம் வைத்துக்கொள்ளலாம் என்றார்கள் பெண்வீட்டில்.. பாச்சுவுக்கு கலெக்ட் கால் போட்டு பேசியதில் ''பணத்தைப் பத்தி பிரச்னையே வேண்டாம்மா. நாமளே செலவழிக்கலாம். நான் நிறையவே சம்பாதிக்கிறேன். ஆறாயிரம் டாலர்ங்கறது எனக்கு பெரிசே இல்லை. அவாளை இதுக்காக தள்ளிப்போடச் சொல்லாதே. சட்டுபுட்டுனு முடிச்சுரு'' என்றான்.

கடைசியாக மாஞ்சுவுக்கு கல்யாணம் என்று தேர்முட்டி தள்ளிக்கூட தெருவே பேசிக் கொண்டது. எல்லாரும் வந்து சந்தோஷமாக ஆண்டாளை விசாரித்தார்கள். அந்தப் பெண்ணும் இரண்டு முறை சேஷ வாகனத்தின் போதும் தைத்தேர் பார்க்கவும் வந்தபோது இவர்கள் அகத்துக்கு வந்து ஓடியாடி ஒத்தாசை செய்தது. ஆண்டாளுக்கு அவளை ரொம்ப பிடித்துப் போய்விட்டது. இப்பவே அம்மா என்று கூப்பிட்டது (பாச்சுவின் மனைவி லதா 'ஆன்ட்டி' என்றுதான் கூப்பிட்டாள்) ''மாட்டுப் பெண்ணை அவா கண்லகூட காட்டலை. ஒரு நா இருந்துட்டு அமெரிக்கா போயிட்டா. நீதாண்டி என் மாட்டுப்பெண். எங்க மாஞ்சுவுக்கு பெருமாள் கண்திறந்துட்டோர்'' என்றாள்.

பாச்சு அனுப்பிய ஆயிரம் டாலரை மாற்றி அவளுக்கு நாராயணசாமி கடைக்குப் போய் நல்ல பட்டு ப்புடவை வாங்கித் தந்தாள். திருமாங்கல்யம், தோடு, நெக்லஸ் போடுவதாகச் சொன்னாள்.

மாஞ்சுவும் ஒருமுறை அவர்கள் வீட்டுக்குப்போய் கன்றுக்குட்டியிலிருந்து எல்லோரையும் விசாரித்துவிட்டு வந்தான் ''ஏண்டி, அவ்வளவு வயசு தெரியலை யோல்லியோ..?'' என்றாள் கோமளா சற்றே கவலையுடன். மாஞ்சுவை சாப்பிடச் சொன்னார்கள். தயக்கமில்லாமல் பிகு பண்ணாமல் உட்கார்ந்து சம்பிரமமாக ரெண்டுதடவை சாத்தமது கேட்டு வாங்கி உறிஞ்சிச் சாப்பிட்டுவிட்டு வந்தான்.

......ஏண்டா கல்யாணம் ஆற துக்கு முன்னாடி அவாத்தில சாப்ட்டே?'' என்றாள் ஆண்டாள்.

......அதான் நிச்சயம் ஆய்டுத்தேம்மா... ஏன்?''

......சம்பந்தம் முடியறதுக்கு முன்னாடி சாப்பிடக்கூடாதும்பா.''

......பரவாயில்லைம்மா. இதெல்லாம் யார் பாக்கறா...''

அடுத்த முறை போனபோது பட்டும்படாமலும் பேசினார்கள். ''பரீட்சை எழுதி முடியட்டும் மாமி... அவசரமென்ன? கிணத்து ஜலத்தை வெள்ளமா கொண்டு போயிடும்?'' என்றார்கள். என்ன பரீட்சை என்றால் சரியாகச் சொல்லவில்லை.

அதன்பின் அவர்கள் வேறு பெரிய இடம் பார்ப்பதாக அம்புலு வந்து சொன்னாள். அங்கே போய் விசாரித்தால் ''வயசு வித்தியாசம் ஜாஸ்தியிருக்கேன்னு எல்லாரும் சொல்றா மாமி... யோசிக்கணும். பேட்டைவாய்த்தலை ஜோசியருக்கு கடுதாசி போட்டிருக்கோம். பதில் வந்ததும் சொல்லிடறோம். நீங்க வாங் கிக் கொடுத்த புடவை பிரிக்காம அப்ப டியே இருக்கு'' என்றாள். இதை மாஞ்சுவிடம் சொல்லத் தயங்கினாள் ஆண்டாள். 'என்ன இவனுக்கு இப்படி அச்சான்யாமாவே இருக்கு' என்று வேதனைப்பட்டாள்.

பங்குனி உற்சவத்தின்போது அந்தப் பெண்ணும் அவள் தங்கைகளும் கோமளாவும் வீதியோடு போனார்கள். இந்தப் பக்கம் திரும்பக்கூட இல்லை.

மாஞ்சு புரிந்துகொண்டுவிட்டான். ''கவலைப்படாதேம்மா. இவ இல்லைன்னா வேற பொண்ணு'' என்றான். அவன் குரலில் விரக்தி இருந்தது. ''எப்படியும் அந்தப் பெண்ணுக்கும் அமெரிக்காவில் இருந்து ஒரு பையன் வந்து உடனே கல்யாணம் பண்ணிக்கறேன்னு சொல்லிருக்கானம். உங்காத்து பாச்சாதான் அட்ரஸ் கொடுத்தா னாம்'' என்றாள் அம்புலு.

......அதான் அவா பட்டும்படாம பேசறா'' என்றான்.

அதன்பின் அந்தப் பெண்ணின் கல்யாணக் கடுதாசி தபாலில் ஸ்டாம்பு குறைச்சலாக ஒட்டி வந்தது. திருப்பி அனுப்பினால் தப்பாக எடுத்துக்கொள் வார்கள் என்று மாஞ்சு அபராதம் கட்டி வாங்கிக்கொண்டான். அதே தென்னூர் மண்டபத்தில் கல்யாணம். இடையே பாச்சு போன் பண்ணியிருந்தான். அவனிடம் விவரம் சொன்னபோது, ''நான்தாம்மா அட்ரஸ் கொடுத் தேன். என் அண்ணாவுக்கு நிச்சயமான பெண்ணை போய் பார்த்துட்டு போட்டோ அனுப்புன்னு கொடுத்தேன். அவன் கொத்திண்டுட்டான். ஒருவேளை சொல்லியிருக்ககூடாதோ... அம்மா, ரெண்டு பேரும் அமெரிக்கா வந்துருங்கோ. மாஞ்சுவுக் கும் ஒரு சேஞ்சா இருக்கும். நயாக்ரா ஃபால்ஸ், டிஸ்னி லேண்டெல்லாம் சுத்திக்காட்ட ரவுண்டு டூர் டிக்கெட் ஏற்பாடு பண்றேன்'' என்றான்.

லதா உண்டாகியிருக்கிறாள் என்றும் அவள் அம்மா வால் இப்போது அமெரிக்கா வரமுடியாது என்றும் லதாவின் அக்காவுக்கும் பிரசவ டைம் என்பதும் தெரிந்தது. ஆண்டாள் முதலில் போய் மூன்று மாசம் இருந்து குழந்தையைப் பார்த்துக்கொண்டால் லதாவின் அம்மா வந்துவிடுவாள். குழந்தை அமெரிக்காவில் பிறக்க வேண்டியது அவசியம். அப்போதுதான் அது அமெரிக்கன் சிட்டிஸனாகும் என்றான் பாச்சு.

டிராவல் ஏஜெண்ட் அம்மாவுக்கும் மாஞ்சுவுக்கும் அவசரமாக பாஸ்போர்ட் எடுத்தார்கள். பாச்சு தன் சம்பாத்தியம், வேலை, ஷேர் விவரங்கள், தன் மதிப்பு எல்லாவற்றையும் விவரித்து ஸ்பான்சர் லெட்டர் அனுப்பியிருந்தான். தன் பிள்ளைக்கு இத்தனை சொத்தா என்று ஆண்டாள் பெருமைப்பட்டாள். இருவருக்கும் விசாவுக்கு மனுப் போட்டதில் ஆண்டாளுக்கு கிடைத்தது. மாஞ்சுவுக்கு காரணம் போதவில்லை என்று மறுத்துவிட்டார்கள்.

ஆண்டாள் ரொம்ப சங்கடப்பட்டாள். ''உன்னை தனியா விட்டுட்டு எப்படிரா போறது?''

......நான் என்னம்மா சின்னக் குழந்தையா?''

......கல்யாணத்தையாவது பண்ணியிருந்தா அவ பாத்துப்பாளே...''

......அதான் ஆகலையே... நீ இப்ப அமெரிக்கா போயாகணும்.''

......தனியா எப்படிரா போவேன்?''

......அதெல்லாம் பிரச்னையே இல்லை மெட்ராஸ்ல பிளேன் ஏறினா நேர எங்கயுமே இறங்க வேண்டியதில்லை. எட்டூருக்குப் பாத்துப்பா மாமி'' என்றான் ஏஜெண்ட்.

ஆண்டாள் பல்வேறு சீட்டுகளையும் எழுதிக்கொண்டு பருப்பு பொடி, கரு வேப்பிலைபொடி, குழம்புப்பொடி, ரசப் பொடி, முறுக்கு, தட்டை எல்லாம் எடுத்துக் கொண்டு பிரிட்டிஷ் ஏர்வேஸ் விமானத்தில் ஏறினாள். மாஞ்சு சென்னை ஏர்போர்ட் தடுப்பு வரை கொண்டு விட்டான். மாஞ்சு கொஞ்சம் இருமினான். ஆண்டாள் புறப்படும்போது ரொம்ப அழுதாள்.

பிளேனைவிட்டு நகரவில்லை. ஒரு ஹாஸ்டஸ் நன்றாகப் பார்த்துக் கொண்டாள். லண்டன் வரை தமிழ் பேசினாள். ஜே.எஃப்.கே-யில் பாச்சாவும் லதாவும் பாஸ்டனிலிருந்து வந்து கப்பல் காரில் அழைத்துச் சென்றார்கள். ''மாஞ்சுதாண்டி பாவம்... அதிர்ஷ்டமே இல்லை.''

......இல்லை ஆன்ட்டி... ஒழுங்கா படிச்சிருந்தா மச்சினரும், தன்னைப் போல முன்னுக்கு வந்திருக்கலாம்னு பார்த்தி சொன்னார். முதல்லருந்தே சரியா வளர்க்கலையாம்'' என்று லதா சொன்னது ஆண்டா ளுக்கு உறுத்தியது.

......டைபாய்டு வந்து ஒரு வருஷம் பின்தங்கினதும் அவனுக்கு சுவாரஸ்யம் போயிடுத்து. அவனும் பாச்சு போல வந்திருக்க வேண்டியவன்தான்.''

பாச்சு, ''மாஞ்சுவா? ஹ!'' என்றான்.

லதா கடகடவென்று அர்த்தமில்லாமல் சிரித்து பாச்சுவுடன் முன்ஸீட்டில் ஒட்டிக் கொண்டாள்.

...இவ என்ன சொல்றது!' என்று ஆண்டாளுக்கு வருத்தமாக இருந்தது.

வீடு பெரிசாக நாலு ரூம் மச்சும் கீழுமாக இருந்தது.

லதாவுக்கு ப்ரீச் பேபியாக இருந்ததால் சிசேரியன் பண்ணி எடுக்கவேண்டும் என்றார்கள். அவள் பெட்ரூமைவிட்டு நகர வில்லை. நாள் பூரா காதில் மாட்டிக்கொண்டு பாட்டு கேட்டாள். எதையோ கொரித்துக் கொண்டே இருந்தாள். பிள்ளைத்தாச்சி பத்தியமாக இருக்கவேண்டும் என்று சொல் லிப்பார்த்தாள். ''அதெல்லாம் மாறிப்போச் சும்மா'' என்றான் பாச்சு.

அந்த ஊர் டி.வி. புரியவில்லை. பாச்சு மைக்ரோவேவ், ரைஸ் குக்கர், ப்ளெண்டர் போன்றவற்றை எப்படி இயக்குவது என்று சொல்லிக் கொடுத்தான். காஸ், எலெக்ட்ரிக் அடுப்பு எல்லாம் சௌகரியமாக இருந்தது. பாச்சுவுக்கு வேளைக்கு வேளை வெங்காய பஜ்ஜியும், தோசையும், இட்லியும், அடையும், தேன்குழலும், முள்ளு முறுக்கும், பருப்பு உசிலியும் மாற்றி மாற்றி பண்ணிப்போட்டாள். கீரை, வாழைக்காய், உருளைக்கிழங்கு, சேப்பங் கிழங்கு ரோஸ்ட் எல்லாம் வகை வகையாகச் செய்து போட்டாள். பிள்ளையும் மாட்டுப் பெண்ணும் 'திஸ் இஸ் கிரேட், கூல், ஆஸம்' என்று சாப்பிட்டுக் கொண்டிருந்தார்கள். ஆபீஸிலிருந்து வந்த உடனே ''அம்மா, சாயங்காலத்துக்கு என்னம்மா டிபன்?'' என்று கேட்பான்.

இண்டியன் ஸ்டோரில் அத்தனை காய்கறியும் கொட்டிக்கிடந்தது. பால் ஏராளமாகக் கிடைத்தது. நி யூஜெர்சியிலிருந்து தன் நண்பர்களைக் கூப்பிட்டு பிரமாதமாக ஒரு விருந்து சமைக்கச் சொன்னான். அத்தனை பேரும் ஒன்று விடாமல் சாப்பிட்டு, ''ஆன்ட்டி, எங்க வீட்டுக்கு வந்து இந்த மாதிரி வடை போடறது எப்படின்னு வொய்ஃபுக்கு சொல்லி கொடுங்க... பார்ட்! உங்கம்மாவை கிட்நாப் பண்ணிட்டு போறேன்'' என் றார்கள். பார்ட்டிக்கு மாஞ்சுவுக்கு பார்த்த அந்தப் பெண் அலமேலு அவள் கணவனுடன் வந்திருந்தாள். ஆளே மாறிப்போய் இருந்தாள். தலையை கிராப் வெட்டிக்கொண்டு ஆண்பிள்ளை சொக்காய் போட்டுக் கொண்டு அவளே சொல்லிக் கொண்ட பின் தான் அலமேலு என்று தெரிந்தது. அவள் கணவன் அவளை அடிக்கடி லூலூ என்று அழைத்தான்.

அவ்வப்போது ''உன் அண்ணன் என்ன பண்ணிக்கொண்டிருக்கிறானோ...'' என்று அங்கலாய்ப்பாள். '' அம்மா, இங்க வந்தாச்சு நீ. நோ நியூஸ் இஸ் குட் நியூஸ்.''

......இல்லைடா... அவனுக்கு ஒரு கல்யாணத்தைப் பண்ணிருந்தா...''

......இதையே சொல்லிண்டிரும்மா'' என்றான் பாச்சு. அன்று லேசாக குடித்திருந்தான். ''உன் ரெண்டாவது பிள்ளையை எப்பவாவது தட்டிக்கொடுத் திருக்கியாம்மா? ஸ்டேட்லயே முதலா வந்தே னேம்மா... ஒரு திருக்கண்ணமுது பண்ணிப் போட்டிருக்கியா? என்னை அணைச்சு ஒரு முத்தம் கொடுத்திருக்கியாம்மா? ஸ்காலர்ஷிப் பணத்தை யெல்லாம் கொண்டுவந்து கொட்டினேனே... எப்பவாவது தாங்ஸ் சொன்னியம்மா? அப்பப்போ ஐந்நூறும் ஆயிரமும் டாலர் டாலரா அனுப்பிச்சேனே... எப்பவாவது போன்ல கூட்டு 'பாச்சு உன்னைப் பிள்ளையா பெத்ததுக்கு எனக்கு பெருமைடா பாச்சு'ன்னு ஒரு வார்த்தை... ஒரு வார்த்தை? எப்பப் பாத்தாலும் மாஞ்சு கல்யாண மாகலையே, மாஞ்சு சாப்டலையே, மாஞ்சுக்கு கொத்த மல்லி தொகையல் பிடிக்குமே, மாஞ்சுக்கு அடை பிடிக்குமே, வெல்லக் கொழக்கட்டை பிடிக்குமே...

உனக்கு ரெண்டு பிள்ளைம்மா! உன் ரெண்டா வது பிள்ளையோட அல் காரிதம் இப்ப உலகமே யூஸ் பண்றது தெரியுமா?''

ஆண்டாள் கொஞ்ச நேரம் மௌனமாக இருந்தாள். லதா தன் கை நகங்களுக்கு பாலீஷ் பூசிக்கொண்டிருந்தாள்.

......பாச்சு நீ மாறிப் போயிட் டேடா'' என்றாள்.

பாச்சு அப்புறம் அவள் ரூமுக்கு வந்து விளக்கைப் போட்டான். ஆண்டாள் படுக்கை யில் உட்கார்ந்து அழுது கொண்டிருந்தாள். அணைத்துக்கொண்டு ''ஐம் ஸாரிம்மா... நான் அப்படிப் பேசியிருக்க கூடாது'' என்றான். அவனிடம் சாராய வாசனையும் சிகரெட் வாசனையும் இருந்தது.

பாச்சுவுக்கு ஆண்குழந்தை பிறந்து மூணாவது நாள் அனுப்பிவிட்டார்கள். ஏகப்பட்ட துணிகளில் சுற்றி குழந்தை வீட் டுக்கு வந்தது. அதற்கென்று தனியாக ஒரு அறையை நீலகலரில் பேப்பர் ஒட்டி மிக்கி மௌஸ் பொம்மைகள் எல்லாம் இட்டு தொட்டி லில் ஜில்ஜிலாப்பு தொங்கவிட்டு குழந்தை கையைக் காலை உதைத்துக்கொள்வதை பார்த்து மகிழ்ந்து ''இப்பவே பார்றா... என்ன புத்திசாலி... அப்பா மாதிரி!'' என்றாள் ஆண்டாள். ''பெரியப்பா மாதிரி இல்லாட்டா சரி'' என்றான் லதா.

அவளை 'உனக்கென்னடி தெரியும் அவ னைப்பத்தி?' என்று கேட்டுவிடத்தான் துடித்தாள். எதற்கு வந்த இடத்தில் சண்டை என்று பல்லைக் கடித்துக்கொண்டாள். அவளுக்கு அமெரிக்கா பிடிக்கவில்லை. சிறைவாசம் போல இருந்தது. வாரம் ஒரு நாள் இண்டியன் ஸ்டோருக்கு கூட்டிப் போவான். நடு ராத்திரியில் நாற்பது மைல் போய் பால் கேன் வாங்கி வருவதும் பழைய நாகேஷ் படங்களை காஸெட் எடுப்பதும் உதவாத சாமான்களை வாங்கி டிக்கியை ரொப்பு வதும் ஆண்டாளுக்குப் பிடிக்கவில்லை.

வேளாவேளைக்கு பாச்சுவுக்கு தளிகை பண்ணி போடவேண்டும். சுடவைக்கக்கூடாது. சத்தம் போடுவான். கைக்குழந்தையை வளர்ப்பது ஆண்டாளுக்கு மறந்து போய்விட்டது. அது ஓயாமல் அழுதது. இப்போதே அதை தனி ரூமில் போட்டுவிட்டார்கள். டாக்டர்கள் வரவே மாட்டார்கள். ரொம்ப பயந்து கொண்டேதான் இருந்தாள். குழந்தை விச்சுளியாய் இருந்தது. தாய்ப்பால் கிடையாது.

......லதா, உங்கம்மா எப்ப வரப்போறா?'' என்று கேட்டாள்.

......இன்னும் ரெண்டு மாசம் ஆகும் ஆன்ட்டி.''

......இல்லை... நான் மாஞ்சுவை தனியா விட்டுட்டு வந்திருக்கேன். உங்கம்மாவோட பேசிப் பாரேன்... சீக்ரம் வரட்டுமே...''

சாயங்காலம் பாச்சுவும் லதாவும் பேசிக் கொண்டிருந்தார்கள். பாச்சு பட்டென்று கதவை திறந்து ''அம்மா, உனக்கு இங்க என்ன குறை?''

......குறைன்னு இல்லைடா... வந்து ஆறு மாசம் ஆச்சு.''

......நாலு மாசம். ஸோ வாட் அம்மா?''

......எனக்கு ஊருக்கு போகணும் போல இருக்கு.''

......அங்க என்ன வெச்சிருக்கு உனக்கு?''

......மாஞ்சு.''

......மாஞ்சு. மாஞ்சு... மைகாட்! மாஞ்சுவுக்கு நாப்பது வயசும்மா!''

......முப்பத்தஞ்சு.''

......சரி, முப்பத்தஞ்சு... அவனுக்கு இனிமே கல்யாணம் ஆகாது.''

......எப்படி ஆகும்... நீதான் தம்பிக்காரனே கலைச்சுட்டியே. வேற ஜாதகம் பாத்துக் கொடுத்துட்டியே அலமேலுவுக்கு'' என்று வாய்தவறிச் சொல்லிவிட்டாள். பிலுபிலு வென்று பிடித்துக்கொண்டான்.

......என்ன சொன்னே? நானா... நானா?'' என்று அவளை அடிப்பதற்கு கை ஓங்கினான். லதாதான்

அவனைத் தடுத்தாள்.

......அம்மா, நான் தெளிவா சொல்றேன் லதாவோட அம்மா வரவரைக்கும் நீ இங்க இருந்ததுதான் ஆகணும். உன்னை பிளேன் சார்ஜ் கொடுத்து அழைச்சண்டு வந்திருக்கேன். ஒரு டிக்கெட், இண்டியன் ருப்பீஸ்ல என்ன வெல தெரியுமா... எழுபதாயிரம்.''

......நான் வேணா நிலத்தை வித்து கொடுத்துர்றேம்பா.''

......அம்மா, ஏம்மா புரிய மாட்டேங்கறது உனக்கு...''

இதற்குள் லதா, ''பாச்சு... நான் இன்னிக்கே அம்மாவுக்கு போன் போட்டுர்றேன். ஆன்ட்டி, எங்கம்மாகிட்ட பேசி எவ்வளவு சீக்கிரம் வரமுடியுமோ வரச் சொல் றேன். பல்லைக் கடிச்சுண்டு, ஒரு மாசம் இருங்கோ போறும்.''

பாச்சு, ''அம்மா, நிஜமாவே சொல்லு... உனக்கு பேரன் பொறந்ததில பெருமை இல்லையா? சுந்தரராஜன்னு பேர் வெக்க றேம்மா. அப்பா பேரு, ஞாபகம் இருக்கா... வேணும்னா ராமானுஜம்னு வெக்கறேன்.''

ஆண்டாள் மௌனமாக இருக்க...

......பாச்சு, இட்ஸ் நோ யூஸ். ஷி வில் நெவர் அண்டர்ஸ்டாண்ட்'' என்றாள் லதா.

ஆண்டாளுக்கு சங்கடம் பண்ணியது. இங்கு வந்து மாட்டிக்கொண்டு விட்டோம்... என்னை விடவேமாட்டார் கள் என்று வயிற்றில் புளியைக் கரைத்தது.

அடுத்த நாளே ஸ்ரீரங்கத்திலிருந்து ஆராமுது போன் பண்ணியிருந்தார் – மாஞ்சுவுக்கு உடம்பு சரியில்லை. தில்லை நகரில் அட்மிட் ஆகியிருக்கிறான் என்று. ஆண்டாள் பதறிப்போனாள்.

பாச்சுவை ஆபீஸில் கூப்பிட்டு சொல்லச் சொன்னாள். பாச்சு லேட் டாக வந்தான். ''அம்மா, இந்த ட்ரிக் எப்பம்மா கத்துண்டே? லெட்டர் எழுதிப் போட்டியா?''

......என்னடா சொல்றே?''

......இல்லை... மாஞ்சுவுக்கு உடம்பு எப்படிம்மா கரெக்டா மணி அடிச்சாப்பால வரது?''

......நீ என்ன சொல்றன்னே புரியலை பாச்சு... நீ வரவர நடந்துக்கற விதம், உன் தாயாரை நீ மதிக்காததும் மனசை நோகடிக்கறதும் நன்னாவே இல்லை. கொஞ்ச நாள் பிரிஞ்சு இருந்தா ரெண்டு பேருக்கும் ஒருத்தரை ஒருத்தர் புரிஞ்சுக்க முடியும்னு தோணறது. நான் ஊருக்குப் போயிட்டு மாஞ்சு வுக்கு சரியானப்புறம் வந்துர்றேன்.''

......வரவே வேண்டம். அங்கேயே இரு... தாயார் சந்நிதி மண்டபத்தை யெல்லாம் முதுகு தேச்சுண்டு உண்டக்கட்டி சாப்ட்டுண்டு.''

லதாவின் அம்மாவும் வருவதாகச் சொல்லிவிட, ஆண்டாளை மறுபடி பிளேன் ஏத்தி அனுப்பிவிட்டான்.

ஆண்டாளுக்குச் சந்தோஷமாக இருந்தது. 'மாஞ்சுவுக்கு ஒன்றும் இல்லை. நான் இல்லாமல் ஏங்கிப் போயிருக்கிறான். நான் போய் ரெண்டுவேளை மெந்தியக் குழம்பும் சுட்ட அப்பளமும் பண்ணிப் போட்டாலே சரியாப் போய்டும்' என்றுதான் போனாள்.

மாஞ்சு இவள் போனபோது தில்லைநகர் தனியார் ஆஸ்பத்திரியில் கோமாவில் இருந்தான். அவன் மார்பைப் பிறாண்டி ''மாஞ்சு, முழிச்சுப் பார்றா... அம்மா வந்திருக்கேன். கண்ணைத் திறடா'' என்று சொல்லிப் பார்த்தாள். திறக்கவில்லை. மூச்சு விடுவதற்கு ரொம்ப சிரமப்பட்டான். ஆக்ஸிஜன் வைத்தார்கள்.

அவனுக்கு என்ன வியாதி என்று சரியாகச் சொல்லமாட்டேன் என்றார்கள். 'கிண்ணி சரியில்லை கிண்ணி சரியில்லை...' என்று சொன்னார்கள். நம் தேகத்தில் எங்கு கிண்ணி இருக்கிறது என்று ஆண்டாளுக்குப் புரியவில்லை.

அவர்கள் சொன்னது கிட்னியை. மாஞ்சு இவளைக் கண்திறந்து பார்க்காமலேயே இறந்து போய்விட்டான்.

ஸ்ரீரங்கத்துக்காரர்கள் அத்தனை பேரும் வந்திருந்தார்கள்.

பாச்சு உடனே பிளேன் பிடித்து, ராக்ஃபோர்ட் பிடித்து ரெண்டு நாளில் வந்துவிட்டான். அதுவரை மாஞ்சுவை ஐஸ் பாளத்தில் வைத்திருந்தார்கள். நெற்றியில் பளிச்சென்ற தென்கலைத் திருமண் இட்டு, ஊதுவத்தி கொளுத்தி வைத்து, ஈ விரட்டி பேருக்குப் பேர் தவணை முறையில் அழுது...

பாச்சு வந்த உடனே எல்லாக் காரியங்களும் துரிதமாக நடந்தன. நடுக்கூடத்தில் கிடந்த உடலை தொப்பலாக நனைத்தார்கள் திருமங்கை மன்னன் படித் துறையில். அவன்தான் கொள்ளி போட்டான்.

முதலில் மாஞ்சு போய்விட் டான் என்பது ஆண்டாளுக்கு உறைக்கவில்லை. உறைத்த போது ஒரே கேள்வியைத் திருப்பித் திருப்பிக் கேட்டாள், ''எதுக்குடா ஜென்மம் எடுத்தே? எதுக்குடா... எதுக்குடா?''

சுபசுவீகாரம் முடிந்ததும் பிரபந்த கோஷ்டி சொன்னார்கள். சரமஸ்லோகம் சொன்னார்கள். மாஞ்சு, ஆசார்யனை அனுசரித் திருக்கிறான்... நிச்சயம் சொர்க்கத்துக்குப் போவான் என்று சொன்னார்கள்.

பாச்சு அம்மாவை கட்டி அணைத்துக்கொண்டு அழுதான். ''மாஞ்சு மாதிரி ஒரு அண்ணன் கிடைக்க நான் குடுத்து வெச்சிருந்தேம்மா... சரியா படிக்காட்டாலும் எனக்கு பல விஷயங்களில் ஒரு அண்ணனா இருந்து கைடு பண்ணிருக்காம்மா'' என்றான்.

மாஞ்சுவின் காரியங்கள் முடிந்தபின் பாச்சு ''புறப்படும்மா'' என்றான்.

ஆண்டாள், ''எங்கே?''

......அமெரிக்காவுக்கு... நம்மாத்துக்கு.''

......இவனுக்கு மாசியம், சோதம்பம் எல்லாம் ஆய்டட்டுமே...''

......எல்லாம் அமெரிக்காவில பண்ணிக்கலாம். நான்தானே பண்ணப்போறேன். மாஞ்சு இல்லாம நீ எப்படிம்மா தனியா இருப்பே... அம்மா, நான் பேசினதெல்லாம் மறந்துடு. மாஞ்சு போனப்புறம் ஈக்வேஷனே மாறிப்போச்சு. இப்ப நிலைமையே வேற. உன்னால தனியா இருக்க முடியாது. இருக்கக்கூடாது.''

லதாவும் போன் பேசினாள். ''உங்க பேரன் இப்பவே பாத்திங்கறான். வந்துடுங்கோ அம்மா... பிட்ஸ்பர்க் போலாம்'' என்றாள்.

பாச்சு இவளுக்கும் சேர்த்து டிக்கெட் புக் பண்ணிவிட்டான்.

......அதை கான்சல் பண்ணிடு பாச்சு... நான் கண்டிப்பா வரேன். இப்ப உடனே குழந்தையை பாத்துக்கத்தான் அவ அம்மா வந்துட்டாளே... கொஞ்ச நாள் போகட்டும்... வரேன்'' என்றாள். ''கொஞ்ச நாளைக்கு வரேன். ஆனா, பளிச்சுன்னு சொல்லிடறேன்... எனக்கு சீரங்கத்தை விட்டு வரமுடியாது.''

......தனியா எப்படிம்மா இருப்பே?''

......தனியா இருக்கப் போறதில்லை. மேல சித்திரை வீதில ஆராமுது ஆத்தில மாடியும் கீழுமா நிறைய இடம் இருக்கு'' என்றாள்.

---



**...ச**ற்றே பெரிய சிறுகதைகள்' என்று வர்ணிக்கப்பட்ட (சிறுகதைகளுக்கு உச்சவரம்பு உண்டா என்ன?) ஸ்ரீரங்கத்து தேவதைகள் இரண்டாவது ஈடு சென்ற வாரம் முடிந்தது. இவற்றைப் படித்தவர்கள் பலர் என்னைத் திரும்பத் திரும்பக் கேட்ட கேள்வி – கதைகளில் எவ்வளவு கற்பனை, எவ்வளவு நிஜம்?

இந்தக் கேள்வியே ஒரு வகையில் எழுத்தின் வெற்றி என்று கொள்கிறேன். முழுவதும் கற்பனைக் கதையை யாராலும் எழுத முடியாது. அதேபோல் டெலிபோன் டைரக்டரி, ரயில்வே டைம்டேபிள் தவிர, முழு வதும் உண்மையும் சாத்தியமில்லை. உண்மை, சொல்லும்போதே சற்றுப் பொய்யாகிவிடு கிறது என்பது என் அனுபவம். உண்மைக்கு மிக அருகில் எழுதினால், இலக்கியத்துக்கு வெளிப்பட்ட காரணங்களுக்காகக் கோபித் துக்கொள்ள பலர் காத்திருக்கிறார்கள். ஒரு பள்ளியைப் பற்றிய ஒரு வரிக்காக, விகடன் ஆசிரியரே மன்னிப்புக் கேட்கும்படியான சூழ்நிலை ஏற்பட்டது.

...ஸ்ரீரங்கத்து தேவதைக'ளில் நிஜமானது ஸ்ரீரங்கம் மட்டும்தான். அதுவும் அம்பதுகளின், அறுபதுகளின் அரங்கம். இன்றைய ஸ்ரீரங்கம், திருச்சி கார்ப்பரேஷனின் ஓரங் கம். ஏ.டி.எம்–களும் தாறு மாறான கேபிள்களும் அம்மா மண்டபத்திலிருந்து தொடர்ந்து நிற்கும் ஆம்னி பஸ்களும் பெண்கள் கல்லூரியும் புதிய பள்ளிகளும் என்ன என்னவோ நகர்களும் மேம்பாலங்களும் என்னுடைய ஸ்ரீரங்கமல்ல!



ஸ்ரீரங்கத்தில் மாறாதது – ஸ்ரீரங்கநாதனின், ரங்கநாயகித் தாயாரின் விக்கிரகங்களும் கோயிலின் சில பகுதி களும். கோபுரங்களை யெல்லாம் அவசரப் பட்டு வானவில் வண்ண அக்ரிலிக் பெயிண்ட் அடித்து விட்டார்கள். சாளுக்கியர், கிருஷ்ணதேவராயர், நாயக்கர் காலம் என்று மூன்று கால கட்டங்களைக் கடந்த

மண்டபங்களும் சிலை களும் சிதிலமாகிக் கொண்டிருக்கின்றன. கிழக்குவாசல் தாண்டி பள்ளிக்குச் செல்லும் பாதையில் உள்ள கட்டைகோபுரத்தில், விறகுக் கடை சுவரில் சாணிதட்டி காட்டுச்செடிகள் பீறிடுகின்றன. ஆறாம் நூற்றாண்டிலிருந்து தமிழ் இலக்கியங்களில் குறிப்பிடப் பட்ட கோயில், தம்மிடையே தினப்படி பார்வையில் துருத்திக்கொண்டு இருப்பதைப் பற்றிக் கவலை இல்லாத இன்றைய நகரம் ' மன்மதராசா'வையும் 'மாத்தியோசி'யும் பாடிக்கொண்டிருக்கிறது. பக்தர்களை அரைமணிக்கொரு முறை டீசல் புகையுடன் கொண்டுவந்து உதிர்க்கிறார்கள். அரங்கனின் சந்நிதிக்கு வரிசைகளை ஒழுங்குபடுத்திக் கம்பி, சங்கிலித்தடுப்பு வைத்து டிக்கெட் வருமானம் அதிகரித்து... இன்றைய ஸ்ரீரங்கம் கடந்தகாலத் தொடர்புகள் பலவற்றை வேகமாக இழந்துகொண்டிருக்கிறது.

அதனால், அதைப் பதிவுசெய்ய வேண்டியது எழுத்தாளன் என்கிற தகுதியில் எனக்குக் கட் டாயமாகிவிட்டது. அந்த நாட்களின் வார்த்தை கள், பேச்சு வழக்குகள் எல்லாமே மாறிவிட்டன. எழுத்தில் நிரந்தரப்படுத்துவது அவசியம் என்று உணர்ந்து இந்தக் கதைகளை எழுதினேன்.



இன்றைய ஸ்ரீரங்கம்?

சாஃப்ட்வேர் திறமையாளரும் என் கதை, கட்டுரைகள் அனைத்தை யும் சேர்த்துவைத்து எது, எந்தப் பத்திரிகையில், எப்போது வந்தது என்பதை நானே அவரைக் கேட்டுத் தெரிந்துகொள்ளும் அளவுக்கு ஒழுங்காக ஒரு தகவல்தளம் அச்சு வடிவத்திலும் நெட்டிலும் வைத்திருக் கும் நண்பர் தேசிகன். போதாக் குறைக்கு ஒரு திறமை வாய்ந்த ஓவியர். அவரை ஸ்ரீரங்கத்துக்குச் சென்று, சில காட்சிகளை வரைந்து தருமாறு கேட்டுக்கொண்டேன்.

சிலவற்றைத் தந்திருக்கிறேன். ஸ்ரீரங்கத்துக் கதைகள் அனைத்தும் புத்தகமாக வரும்போது இவையும் பயன் படும். பக்கக் கட்டுப்பாடு காரணமாகச் சுருக்கப்பட்ட 'மாஞ்சு' கடைசிச் சிறு கதையும் முழுவடிவத்தில் அந்தப் புத் தகத்தில் வரும். தேசிகன் ராஜகோபுரம் ராயகோபுரமாக, மொட்டைக்கோபுர மாக முற்றுப்பெறாமல் இருந்தபோது எப்படி இருந்தது என்பதை ஏ.கே. செட்டியாரின் பழைய புத்தகத்திலிருந்து பார்த்து வரைந்தார். மற்றவை நேரடியாக வரைந்தவை. நான் வளர்ந்த காலத்தில் கோபுரம் இப்படித்தான் இருந்தது. இப்போது இலங்கையை எட்டிப் பார்க்கிறது. கீழச்சித்திரை வீதி அதிகம் மாறவில்லை. வெள்ளை கோபுரம் ஒரு 'அல்பைனோ' போல உள்ளது. கம்பன் மண்டபம், சேஷ ராயர் மண்டபம், கிருஷ்ணன் கோட்டை வாசல், கொட்டாரம், கருடமண்டபம் போன்றவை பாதிக்கப்படவில்லை. சித்திரை, உத்திரை வீதிகள் கொஞ்சம் பழசை ஞாபகப்படுத்துகின்றன. மற்றபடி, ஸ்ரீரங்கத்தின் வெளிநகரம் முழுவதும் அடையாளமிழந்துவிட்டது.



தேசிகன்

கலாப்ரியாவின் 'வனம் புகுதல்' தொகுப்பிலிருந்து அண்மைக் கவிதை ஒன்றுடன் நிறைவுசெய்கிறேன்.

...தூங்கும் முன்
கழுத்தைக் கட்டிக்கொண்டு
கதைகேட்ட
குழந்தைக்கு
கதை முடிந்ததும்
நீதியைச்
சொல்ல ஆரம்பித்தேன்

தூக்க சுவாரஸ்யமோ
போதனையின் அசுவாரஸ்யமோ
உன் கதையை நீயே வைத்துக்கொள் போ
திரும்பிப் படுத்துக்கொண்டது
சொன்னபின்
யாருக்குச் சொந்தம் கதை?
சொன்ன கதையை
திரும்பிவாங்கிப்
புலனுக்குள் பூட்டக்
கதைசொல்லிக்கு
முடியுமோ?’

என் அனுபவத்தில் முடியாதுதான்! கதை சொன்னபின், அது உலகுக்குச் சொந்தமாகி, ஸ்ட்ரக்சரிலஸ்டுகள் பந்தாடுவார்கள்.

வணக்கம்.